பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 08 திங்கட்கிழமை (22.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 116

# மேற்கு நாடுகளில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர் நிலை மீள்பரிசீலனைக்கு

## திருப்பி அனுப்பப் படலாம் என தமிழர் கவுன்ஸில் அச்சம்

நியூயோர்க், மார்ச் 22

மேற்கு நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள-அடைக்கலம்-கோரியுள்ள இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு நிலை குறித்து தனது கொள்கையை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகம் (யு.என்.எச்.சி.ஆர்.) மீள் பரிசீலனை செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் தற்போதைய அமைதிச் சூழ்நிலையைக் கருத்தில் எடுத்து, மேலை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்தோர் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போகலாம் என்று யு.என்.எச்.சி.ஆர்.இன் புதிய கொள்கை - வழிகாட்டுதல்-அமையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மாற்றமுறும் இத்தகைய உத்தேச புதிய நிலைப்பாட்டினால், மேலை நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள ஈழத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவது அவர்களுக்கு ஆபத்தானதாக மாறும் என்று - அமெரிக்காவின் தமிழர் செயற்பாட்டுக் கவுன்சில் சுட்டிக்காட்டி உள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 22

தேர்தல் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதைத் தொடர்ந்து மோதல்கள் இடம் பெறலாம் என இனம் காணப்பட்ட பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

அரச மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் மோதிக்கொள்வதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எனக் குறிப்பிட்டுள்ள பொலிஸார், தாம் வீதித் தடைகளை ஏற் படுத்தியுள்ளனர் எனவும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் சில கட்சிகள் தேர்தல் சட்டத்தை மீறுகின்றன

### 'பவ்ரல்' அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில அரசியல் கட்சிகள் தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் செயற்பட்டு வருகின்றன என்று 'பவ்ரல்' அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக தெற்கு அரசியல் கட்சிகள் வடக்கில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத வகையில் குறித்த கட்சிகள் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் அல்லாத அரசியல் கட்சிகள் மீது அதிக அழுத்தம்(24 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மீட்ட 10,000 வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்

### வடமாகாண ஆளுநர் ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 22

யுத்தம் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தங்களது வாகனங்கள் உடைமைகளை விட்டு வந்தவர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உடனடியாக விவரங்களை சமர்ப்பிக்குமாறு வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார். (24 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் 700 சந்தேக நபர்களிடம் விசாரணை

கொழும்பு, மார்ச் 22

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 700 சந்தேக நபர்களிடமும் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதத்திற்கான அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்ட பின்னரும் 700 சந்தேக நபர்களிடமும் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெறுகின்றன(24 ஆம் பக்கம் பார்க்க)

## அனோமாவிடம் நேற்று பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 22

இராணுவப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமாவிடம் இருந்து வாக்குமூலத்தைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நேற்றுப் பதிவு செய்தனர்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## புலிச் சந்தேகநபர்களும் வாக்களிக்க முடியும்

தேர்தல் செயலகம் அறிவிப்பு

விடுதலைப் புலிச் சந்தேக நபர்களும் தேர்தலில் வாக்களிக்க முடியும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் வாக்களிப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன .

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்திய தற்காலிக அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தம்மைக் காப்பாற்றுமாறு பொன்சேகா ஐ.நா. செயலாளரிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 22

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தம்மீது திணிக்கப்பட்டுள்ள அநீதியிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'சண்டே லீடர்' வார இதழின் கேள்விகளுக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலிலேயே சரத் பொன்சேகா இதனைத் தெரிவித்துள்ளார். (24 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான வணிகக் கல்வி மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அரசியல் விஞ்ஞான மூலத்துவங்கள் மாதிரி வினாத்தாள்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காவலூரில் ஐ.தே. முன்னணி வேட்பாளர்கள் குண்டர்கள் குழுவினரால் அச்சுறுத்தப்பட்டனர்

## தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஊர்காவற்றுறையில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள் குண்டர்கள் குழு ஒன்றினால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்று தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊர்காவற்றுறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னனியின் தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது அராஜக கைக்கூலிகளால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் தியாகராசா துவாரகேஸ்வரன் மற்றும் முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தலைமையிலான குழுவினரின் தீவகப் பகுதிக்கான பிரசார நடவடிக்கையில் குண்டர்கள் தமது கைவரிசையினை காட்டியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் போன்றவற்றை பறித்துச்சென்று அதனை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காகச் சென்ற ஐ.தே.க. ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முறுகல் நிலைமையோடு மீண்டும் ஐ.தே.க. ஆதரவாளர்களின் தேர்தல் பிரசாரத்தினை முழுமையாக நிறுத்துவதற்காக மேலதிகமாக குண்டர்கள் பயங்கர ஆயுதங்களோடு அவ்விடத்திற்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு ஐ.தே.க. ஆதரவாளர்களைக் கடுமையாக எச்சரித்தும் உள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்து சமரசம் செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து 12 மணியளவில் மீண்டும் சுவரொட்டிகளை ஒட்டிச் சென்றுகொண்டிருந்தபோது அதே குண்டர்கள் அச்சுவரொட்டிகளைக் கிளித்துச் சென்றதோடு வாகனங்களில் சுற்றிக் கொண்டும் இருந்துள்ளனர். இது தொடர்பாக ஐ.தே.கட்சி தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல்களுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பியுள்ளது. - என்றுள்ளது.

(அ-1)


# 80 ஆவது அகவையில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
லயன் வல்லிபுரம் பரமசிவம்
(அகில இலங்கை ச.நீ)
ஸ்ரீமதி லயன் சீமாட்டி பரமசிவம்
சரஸ்வதி தம்பதியினர் இன்று தமது
அகவை எண்பதில் காலடி எடுத்து
வைப்பதையிட்டு உள மகிழ்ந்து உவகை
கொண்டு வாழ்த்துச் சொரிவதில்
பூரிப்படைகின்றோம்.

"குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சழழகும் அழகல்ல ........"

எப்படியும் வாழலாம் என்று நீங்கள் வாழவில்லை.
.... இப்படித்தான் வாழ வேண்டும் என்று இலக்கணமாய் நல்லதோர் இலட்சியத் தம்பதிகளாக வாழ்கின்றீர்கள் - இன்றும் என்றும் எமக்கோர் எடுத்துக் காட்டாக...

என்றும் உவகையுடன் :
சபாரட்ணம் குடும்பத்தினர்,
அன்ரன் குடும்பத்தினர்.

98, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


# நாளைய ஆட்டங்கள்

வலி வடக்கு, மார்ச் 22

இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஏற் பாட்டிலான மாகாண மட்ட பெண்கள் அணிகளுக்கு இடையேயான கிகிக்கெட் போட்டிகள் இன்று குருநாகல் வெவகெதர மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இப்போட்டிகளில் வடக்கு கிழக்கு மாகாண அணியுடன் ஏனைய மாகாண அணிகளும் கலந்துகொள்ளவுள்ளன.

தொடர்ந்து இரண்டு நாள்கள் நடைபெறும் இப்போட்டியில் திறமை காட்டும் பெண்கள் இலங்கைக் கிரிக்கெட்சபையினால், தெரிவு செய்யப்பட்டு தேசியமட்ட பெண்கள் கிரிக்கெட் பயற்சி முகாமில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இதுவரை போட்டிகள் யாவும் மென்பந்தில் இடம்பெற்றுள்ள போதிலும் தேசிய மட்டத்திலான பயிற்சிகள் தோல்பந்தில் இடம்பெறும்.

முதல் தடவையாக வடக்கு கிழக்கு மாகாண அணியில் விளையாட யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தனு, கௌதமி ஆகிய இருவரும் தமது பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கத்துடன் நேற்றுத் தமது பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

* * *

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே அமரர் மகேஸ்வரன் வெற்றிக் கிண்ணத்திற்காகப் பெண்கள் அணிகளுக்கு இடையில் முதல் தடவையாக நடத்தப்பட்டுவரும் உடைபந்தாட்ட, துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் வலிகாமம் கல்விவலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு. நடராசா தலைமையில் நடை பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கிணேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

3 ஆம் இடம் - ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

இறுதியாட்டம் - மானிப்பாய் மகளிர் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை. (ஒ-86)


## Deutsch, Dutch, French, Italian வகுப்புக்கள்

தூதரக விசா பரீட்சைகளுக்கான ஜேர்மன் டொச் (Deutsch), நெதர்லாந்து டச் (Dutch) மற்றும் இத்தாலியன் (Italian), பிரெஞ் (French) வகுப்புக்களின் புதிய பிரிவுகள் (New Batch) 27.03.2010 எமது யாழ்.கிளையில் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy,
(Centre for International Language Studies)
No. 3, 2nd lane, Palaly Road, Jaffna. [அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்] Tel: 0774842464, 0213216928


## கண்ணீர் அஞ்சலி

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய முன்னாள் நிர்வாகசபை மற்றும் பரிபாலனசபை ஆகியவற்றின் தலைவராகிய

அமரர் கனகசபை சிவசுப்பிரமணியம்

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை,
தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்
தலையாழி, கொக்குவில்.

(95773)

## கண்ணீர் அஞ்சலி



எமது மாமியாரான
திருமதி விசாலாட்சி இராமலிங்கம்
அவர்கள் மறைவுற்றதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாதன்-ரூபா குடும்பத்தினர் (வேலணை),
யோகராசா-புஸ்பமலர் (கொழும்பு),
சிவராசா-பவானி குடும்பம் (கனடா),
சிறிதரநாதன்-வசந்தி (யாழ்ப்பாணம்),
கருணன்-ஜெசிந்தா (பிரான்ஸ்).

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன்
கிறிஸ்தோப்பர் பிரேமன்
(G.A.Q. மாணவன் 2011)
அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்
(G.A.Q) வெளிவாரிப் பட்டப்படிப்பு
2011 யாழ்ப்பாணம்.

(93782)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை கனகேஸ்வரி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கனகேஸ்வரி நேற்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், வசீகரன், வளர்மதி, சசிதரன், பானுமதி ஆகியோரின் பாசமிகு தாயும், புஸ்பராணி, சுந்தரங்கன், யசோதா, முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், மதினி, யாழினி, கீர்த்திகா, பிரவீன், ஆகாஷ், அபிலாஷ், அபிநயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், சிவராசா மற்றும் காலஞ்சென்றவர்களான நடராசா, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வளர்மதி வாசா',
பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
திருமதி பா.முகுந்தன்
(மகள்).

(சி/565977)

### செல்லையா தங்கவேல்

(உரிமையாளர், லோட்டஸ் மோட்டோர் கராஜ், பிரபல வில்லிசைக் கலைஞன்)



வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தங்கவேல் நேற்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துக்கட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு.

தகவல் :
செ. உதயச்சந்திரன்

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நாகராசா
(வயறிங் புல்டோ)

யாழ்ப்பாணம், ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாய், முரசொலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகராசா (வயறிங் புல்டோ) நேற்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முரசொலி வீதி,
கதிரிப்பாய்,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்
(முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)



மலர்வு : 15.10.1946
உதிர்வு : 29.03.2008
திதி:22.03.2010

மனைவி என்பவள் இணையில்லா தீபம்
அவர் பிரிவால் என் வாழ்வில் ஒளியில்லை
இல்லறத்து குலதீபமாய் இருந்து எம்மை
பிரிந்து விண்ணுலகம் சென்று இன்று ஈராண்டானது
என் ஈர நெஞ்சம் அழுதும்
உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

றோட்டன் வீதி,
வேலத்தைப்பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய்.

அன்புத்துணைவர்
திருஞானசம்பந்தர்
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்).

(சி/565980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உண்மை வெளிப்படுவதை தடுக்கும் முயற்சி?

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடைபெற்ற போரின் போது, இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் அரச படைகள் நடத்தியதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரம் சூடுபிடித்து வருகிறது. நாங்களுமா இதைச் செய்தோம் என்று வரிந்து கட்டிக் கொண்டு ஐக்கியநாடுகள் சபையுடன் - அதன் செயலாளர் நாயகம் பான் கீ-மூனுடன்- முட்டிமோதிக் கொண்டு இருக்கிறது எமது நாட்டு அரசு.

எப்படியும், என்ன பாடுபட்டும், தலையைக் கீழாக வைத்தேனும் தாம் சுத்தவாளி என்ற நிலைப்பாட்டை ஸ்திரமாக்கி விட இலங்கை அங்கும் இங்கும் என்று ஓடி ஓடி ஆதரவு திரட்டி வருகிறது.

இத்தனைக்கும், ஐ.நா.வின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்து, ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் பேச்சுக்கள் நடத்தியபின்னர் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே, இது விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை நியமிக்கப்போவதாக பான் கீ- மூன் தெளிவுபடுத்தி இருந்தார். அவ்வாறு செய்வதற்கு தனக்கு அதிகாரம் ஆணை- உண்டு என்பதனையும் மிக உறுதிபடத் தெரிவித்திருந்தார். இது விடயத்தை இனிமேல் நேருக்கு நேர் பான் கீ-மூனுடன் கையாள முடியாது என உணர்ந்து கொண்டு இப்போது ஒடிப்பிடித்து விளையாட இலங்கை அரசு முனைந்துள்ளது.

முன்னர் ஐ.நா.மன்றத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையைத் தோற்கடிக்கச் செய்த ''ருசி''யுடன், திமிருடன் செயலாளர் நாயகத்தின் முயற்சியை, நடவடிக்கையை மடக்கி விடுவதற்கு தலையால் நடக்கத்தொடங்கி உள்ளது.

வன்னியில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து சொந்தத்தில் விசாரணை நடத்துவதற்கும் இலங்கை அரசு முன்வருவதாக இல்லை. ஐ.நா. செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனைகளை வழங்கி நிபுணர் குழுவை நியமிப்பதையும், அவரைப்பிடித்து இவரைப்பிடித்து தடுத்து விடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வர இருந்த பிரேரணையைத் தோற்கடிக்கச் செய்தது போன்று இப்போதும் பான் கீ-மூனின் திட்டத்தைத் தடுத்துவிட வேண்டும் என்று ஆலாய்ப் பறக்கிறது எமது நாட்டு அரசு.

அந்த முயற்சியின் ஓர் அங்கமே அணிசேரா இயக்கத்தை கொண்டு ஐநா.செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு யோசனையை கண்டிக்கச் செய்த திருக்கூத்து.

ஆனால் அந்தக் கூத்து சர்வதேச மட்டத்தில் எடுபடாது என்பதனை இலங்கை இப்போது உணர்ந்து இருக்க வேண்டும். அணிசேரா நாடுகளின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று என பிரிட்டனில் ஐ.நா பிரதிநிதி தெரிவித்திருந்ததனை எப்படி சீரணிக்கப் போகின்றது மகிந்த அரசு?

இது விடயத்தில் இலங்கை அரசுக்கு ஐ.நா சபையின் உயர்மட்டங்களுடன் ஏற்பட்டு இருக்கும் முறுகல் நிலை தொடரும் என எதிர்பார்க்கலாம். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற இலங்கை அரசு அடம்பிடித்துக் கொண்டு இருப்பதனால், ஆகப் போவது ஒன்றும் இல்லை என்பதனை ஏன் அதனால் உணர்ந்து கொள்ளமுடியவில்லை?

வளர்ந்து வரும் ஒரு சிறிய நாட்டின் விடயத்தில் ஐ.நா சபை- அதன் செயலாளர் நாயகம்- இவ்வாறு விடாப்பிடியாக கயிறு போடுவது ஏன் என விளங்கவில்லை- என்று ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்து இருக்கிறார். உலக நாடுகளின் இரக்கத்துக்கு உரியதாக இலங்கையை ''மாற்றும்'' புதிய தந்திரோபாயமாகவே இதனைப் பார்க்கலாம்.

ஐ.நா. சாசனத்தை மீறுவதற்கான முயற்சி என்பது ஒரு குற்றச்சாட்டு. நாடொன்றின் உள்விவகாரத்தில் தலை யிடுவது என்பது மற்றொரு குற்றச்சாட்டு.

இந்த இரண்டையும் ஒன்றை மற்றொன்றால் மூடி விவகாரத்தை தமக்கு சாதகமாக்கித் தணித்துவிடலாம் என்று இலங்கை கருதுவதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மேலும் இந்த விவகாரத்தில் பான் கீ- மூனைத் தமது பக்கத்துக்கு இழுத்துவிடவும் இலங்கை ''பெருமுயற்சி'' செய்து வருவதாகவும் தகவல்கள் கசிந்து வருகின்றன.

இத்தனை ராஜதந்திரக் கூத்துகளும் ஏன்? உண்மைக்கு என்றும் அழிவில்லை. வன்னிப்பகுதியில் மனித உரிமை மீறல்களை அரசு மேற்கொள்ளவில்லை என்பது உண்மையானால், ஐ.நா செயலாளர் நாயகம் தமக்கென ஒரு நிபுணர்(ஆலோசனை) குழுவை நியமிப்பது குறித்து இலங்கை அரசு ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்? அச்சமுற வேண்டும்? அரசின் கை சுத்தமானது எனின் இலங்கை அரசே வெளிநாட்டு நிபுணர்குழு ஒன்றை நியமித்து, தனது பக்கத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வரலாமே?

தனக்கு எதிராக வரும் எந்தக் குற்றச்சாட்டையும் நிராகரித்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வது இந்த அரசுக்கு கைவந்த கலை. மூதூரில் 2008 ஒகஸ்டில் பிரெஞ்சு நாட்டின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் 17 பேரின் மரணங்கள் மறைக்கப்பட்ட ஒன்றாகி விட்டது.

அதேபோன்று, வன்னிப்பகுதியில் மனிதஉரிமைகளும் மறைக்கப்படவிடக் கூடாது என்பதில் ஐ.நா. உறுதியாக நின்று செயற்படும் என்று தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

குற்றம் உள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பது அழிக்கமுடியாத அல்லது மறைக்கமுடியாத மந்திரம். இலங்கை அரசு வன்னிப் போரில் மனித உரிமைமீறல்களில் ஈடுபடவில்லை எனில், அது குறித்த விசாரணை என்றதும் அதற்கு ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்பட்டுப் பதறுவதும், தாம் சுத்தவாளிகள் என்று கூறுவதற்கு உலக நாடுகளின் ஆதரவை தேடுவதும் ஏன்?

உண்மை ஒரு போதும் அழியாது, என்றோ ஒரு நாள் அது வெளிக்கிளம்பும். தனது உருவத்தை காட்டும்.இது இயற்கையின் நியதி மட்டுமல்ல, அதன் நீதியுமாகும்.

இதனை உணர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் இலங்கை அரசினருக்கு எப்போது பிறக்கும்...? காலம் பதில் சொல்லாலா விடும்?

# இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு தலைபசைத்தார் ஜெனரல் பொன்சேகா

**நேற்று 21.03.2010 அன்று சண்டேரைம்ஸ் பத்திரிகை எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி**

அந்த இரு போர்க்கால வீரர்களும் அருகருகே தோளோடு தோளாக அணி வகுத்து நடந்தார்கள். ஆனால் அவ் வாறு சென்றமை வீரதீரத்துக் கான சின்னங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவன்று. ஒருவர் ராணுவ நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொள்வதற்காக மற்றவர் முன்னைய வரை அவரது ஆசனத்தில் அமரச் செய்வதற் காக அவ்வாறு செய்வதுவழமையான தோர் நடைமுறையாகும்.

ஜெனரல்(ஓய்வு)சரத்பொன்சேகா தமது ஒரு காலத் தில் ராணுவ நிலைசகாவான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பக்கமாகத் திரும்பி ''தாமேத மட்ட கிவ்வே சேர் மட்ட தாத்தவாகேகியலா'' (நீங்கள் தானே என்னைப் பார்த்து கூறினீர்கள் சேர் நீங்கள் எனக்குத் தந்தைமாதிரி என்று) எனக் கேட்டார்.

இந்த இரு போர் வீரர்களும் முன்னர் ஒன்றாக இணைந்து உலகில் மிக நேர்த்தியாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்த பயங்கரவாத இயக்க த்தை தோல்வியுறச் செய்வதற்காக போராடியவர்கள். அந்த வரலாற்று வெற்றிக்கு 10 மாதங் களின் பின்னர் சூழ்நிலைகள் வெகுவாக மாறி விட்டன.

ஜெனரல் பொன்சேகா வெள்ளைத் தேசிய உடையில் இப்பொழுது அரசியல்வாதியாக மாறி நாட்டின் ஜனாதிபதி பதவிக்காக தேர்தலில் போட்டியிட்டவர். மற்றும் ஆயுதப் படைகளின் சிரேஷ்ட தளபதியாக விருந்த அவர் இப்பொழுது ராணுவ நீதிமன்றின் முன் விசாரணைக்கு நிறுத்தப் பட்டுள்ளவருமாவார்.

மேஜர் ஜெனரல் டி சில்வா தமது முன்னாள் தளபதியின் கடற்படை தலைமையகத்திலுள்ள அறைக்கு வந்திருந்தமைக்கான காரணம் விடுதி அறையில் நடைபெற விருந்த ராணுவ விசாரணைமன்றுக்கு பொன்சேகாவை அழைத்துச் செல்வதற்காகவே. கடந்த வாரம் ராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் சவேந்திரிய சில்வா ஜனாதிபதியின் ராணுவ நீதிமன்ற அமர்வு தொடர்பான அறிவித்தல் ஆவணங்களை கையளிப்பதற்காக அங்கு வந்திருந்தார். அதன் பின்னர் ஓய்வுபெற்ற ஜெனரல் பொன்சேகாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படலாயிற்று.

ராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் சவேந்திரிய சில்வா முன்பு அறிவித்திருந்த பிரகாரம் ஆவணங்களைக் கையளிக்க வந்திருந்தாரே தவிர அவைகளை மீளவும் தம்முடன் எடுத்துச் செல்லவில்லையென்று தெரிய வருகிறது. பொன்சேகா அவைகளை மறுத்து ''இவைகளை நான் பொறுப்பேற்கமாட்டேன்'' என்று அறிவித்திருந்தார்.

ஜெனரல் டி சில்வா ஆவணங்களைக் கைவிட்டு விட்டுச் சென்றுவிட்டார். அவைகள் ஒரு சிறிய பொதியாக ஒரு மேசையின் மீது வைக்கப் பட்டிருந்தன.

அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவ.பொலிஸ் அதிகாரிகள் இவைகளையெல்லாம் பதிவுசெய்து வருகிறார்கள். இந்த நிலையில் அனோமா பொன்சேகா ஜெனரல் பொன்சேகாவைப் பார்க்க வந்ததையடுத்து நிலைமைகள் மாற்றமடைந்தன.

ஆவணப் பொதியைத் தமது சட்டத்தரணிகளிடம் கையளிக்கும்படியாக ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் தனது மனைவியைக் கேட்டுக் கொண்டார். இந்தக் கட்டத்தில் இடைமறித்த ராணுவ பொலிஸ் அதிகாரி ஒருவர் இவைகளை தமது குறிப்புப் புத்தகத்தில் பதியவேண்டும் என்று கூறினார். ''ஏக்க கன்ன மெஹெட்ட''

(அதை இங்கே தாருங்கள்) என்று கூறிய பொன்சேகா அவைகளை ஏற்றுக் கொண்டமைக்கான தமது கையொப்பத்தை இட்டார்.

இவ்வாறு நிலைப்பாட்டை மாற்றிக்கொண்ட ஓய்வுபெற்ற ராணுவ ஜெனரல் சரத்பொன்சேகா பொது ராணுவ நீதிமன்ற விசாரணைகளை ராஜரகசிய வட்ட ஜெனரல் ராகரிப்பதான தமது பகிஷ்கரிப்பு நிலைப் பாட்டினை மாற்றிக்கொண்டார்.

ராணுவ நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகும்படியாக அவருக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இவ்வாறான செயற்பாடு சிவில் நீதிமன்றில் பிரச்சினைகளை எழுப்புவதற்கு அடிப்படையாக அமையலாம் என்று அவருக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. ராணுவ நீதிமன்றின் முன் அவர் ஆஜராகாது போவாரானால் சிவில் நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கான சட்ட அடிப்படைகள் வலுவாக அல்லது வலுவற்றதாக அமையலாம். ஏனென்றால் ராணுவ நீதிமன்றின் செயற்பாடுகள் தொடர்பாகவும் பிரச்சினைகளை சிவில் நீதிமன்றில் எழுப்பமுடியும். மேலும் ராணுவ நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் காணும்பட்சத்தில் அதன் முதற்கட்ட விளைவு அவரது நட்சத்திரப்பட்டங்களைப் பறிப்பதாகவே இருக்கும் என்பதாலும் அவ்வாறான நகர்வு அவசியம் என்று கருதப்படுகின்றது.

அவரது பட்டங்கள் கௌரவ

சாட்சியங்களை விசாரிக்கும், அவர்களுடன் நீதிவான், சட்டவல்லுநர் ஒருவரும் இருப்பார். இவர் சட்டத்துறையில் அதிஅறிவுபெற்றவராவார்.

இந்த விடயத்தில் இலங்கை ராணுவத்தின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியான சமிந்திர பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். கடற்படையின் தொண்டர் படையணியைச் சேர்ந்த இவர் றியர் அட்மிரல் தரத்தைச் சேர்ந்தவரும் ஆவார்.

இந்த நீதிபதிகள் ஒவ்வொருவரும் நீதிவான் சட்டவல்லுநர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வார்கள். ஆனால் அவர் இராணுவ நீதிமன்றத்தின் தலைவரின் முன் சத்தியப் பிரமாணம் செய்வார்.

ராணுவ நீதிமன்றில் பொன்சேகாவைப் பார்த்து நீர் குற்றவாளி அல்லவா என்று கேட்டபோது ராணுவ நீதிமன்றின் நியாய ஆதிக்கத்தை தாம் ஏற்றுக் கொள்ளவில்லையென்று பொன்சேகா பதிலளித்தார்.

இதனைக் குற்றவாளியென்று கூறியதாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதா அல்லது இன்னொரு திகதிக்கு-ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை. தேர்தல் தினத்திற்கு இரண்டு நாள்கள் இருக்கையில் இந்த விசாரணை ஆரம்பமாகவிருக்கின்றது. பொன்சேகாவும் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பது தெரிந்ததே.

தேர்தல் களத்தில் குளறுபடிகள்

தேர்தல் களத்தில் ஓய்வு பெற்ற

# பிரசாரத்தை கண்டியில் ஆரம்பித்தார் ஜனாதிபதி

நிலைகள் அனைத்தும் பறி போகும். ராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு ராணுவத்தின் பிரதம தளபதியுமான ஜனாதிபதியின் அங்கீகாரத்தையும் பெறுவதாக இருக்கும்.

ராணுவ நீதிமன்றில் தோன்றுவதற்கு ஜெனரல் சரத்பொன்சேகா தீர்மானித்த கையோடு அவரது சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் ராணுவ நீதிமன்ற உறுப்பினர்கள் இதற்கான நியமனம் பெற்றுள்ள நீதிவான் அட்வகேட் ஜெனரல் ஆகியோருக்கு எதிராக மனு ஒன்றை தாக்கல் செய்தார்கள்.

ராணுவ நீதிமன்றம் கூடுகின்ற அறைக்கு மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா தமது ஒரு காலத்து தளபதியை அழைத்துச் சென்றபொழுது அங்கு நீதிவான் களாக மேஜர் ஜெனரல் ஹர்ஷா வீரதுங்க (தலைவர்), மேஜர் ஜெனரல் லலித் வீரதுங்க மற்றும் மேஜர் ஜெனரல் அருணா ஜயதிலக்க ஆகியோர் அமர்ந்திருந்தனர். ராணுவ நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் முன் நேருக்கு நேர் வந்ததும் 'உசாவிய பட்டங்கத்தது' (நீதிமன்றை தொடங்கி விட்டீர்களா) என்று ஓய்வு பெற்ற ஜெனரல் கிண்டலாகக் கேட்டு வைத்தார்.

ராணுவ நீதிமன்ற நடைமுறைகள் சாதாரண நீதிமன்றங்கள் போல் அல்லாது வித்தியாசமாக அமைகின்றன. சாதாரண நீதிமன்றங்களில் பொது மக்களும் ஊடகர்களும் அனுமதிக்கப் படுவார்கள். விசாரணைகளைப் பார்த்து குறிப்புகள் எடுக்க முடியும். குற்றஞ்சாட்டப்பட்ட வரும் சாட்சிகள், பதிவாளர், ஊடகத்தினர் மற்றும் மக்கள் முதலில் வருவார்கள் கடைசியில் தான் நீதிவான் அல்லது நீதிவான்கள் வருவார்கள்.

அப்பொழுது அனைவரும் எழுந்திருப்பார்கள். ஆனால் இங்கு நீதிவான்கள் முதலில் வந்து ஆசனங்களில் அமர்வார்கள். இந்த விடயத்தில் சட்ட நடைமுறைகள் சாட்சிய விதிமுறைகள் யாவும் பலவகையில் மாறுபட்டவையாகவிருக்கின்றன. ராணுவ நீதிமன்றில் ராணுவ அதிகாரி ஒருவர் விசாரிக்கப் படுவதற்கான ராணுவச் சட்டங்கள் இருக்கின்றன.

ராணுவ சட்டத்தின்படி ராணுவ அதிகாரி ஒருவர் பொது ராணுவ நீதிமன்றம், கள இராணுவ நீதிமன்றம், மாவட்ட ராணுவ நீதிமன்றம் எனப் பலவகையுண்டு. பொன்சேகா பொது ராணுவ நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுகின்றார். இதில் மூன்று ராணுவ அதிகாரிகளைக் கொண்ட ஒரு ஆயம்

ஜெனரலை ஆதரிப்பவர்கள் குளறுபடியில் சிக்கியிருக்கிறார்கள். அவருக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்த்து குரல் எழுப்புவதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். ஜெனரல் பொன்சேகா ராணுவ காவலில் வைக்கப்படலாகாது என்று கூறுவதோடு விஷயத்தை விட்டுவிடவே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஜெனரல் பொன்சேகா ராணுவக் காவலில் வைக்கப்படலாகாது என்பதுடன் ஐ.தே.கட்சி ஒன்றினாலேயே அவரை விடுதலை செய்ய முடியும் என்ற வகையிலான ஒரு நிலைப்பாட்டை ஐ.தே.கட்சி எடுத்துள்ளது.

ஆயுதக் கொள்வனவு தொடர்பான குற்றச்சாட்டுக்களானாலும் அவை சிவில் விடயங்களாகவே கருதப்பட வேண்டும் என்பது ஐ.தே.க வின் கருத்தாகும்.

ஐ.தே.கட்சி நேற்று முதல் தனது தேர்தல் பிரசாரங்களை முடுக்கியுள்ளது. கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் பயணங்கள் மேற்கொண்டுள்ளார்.

வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான தனது தேர்தல் வாக்குறுதிகளை இரண்டு ஆண்டுகளில் செய்து முடிப்பதாக ஐ.தே.க உறுதியளித்துள்ளது.

ஆரம்பமே சரியில்லை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் கூட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண்டியில் ஆரம்பித்து வைத்தார். ஆரம்பம் அவ்வளவு மங்களகரமாகவிருந்ததாகத் தெரியவில்லை.அமைச்சர் சரத் அமுனுகம கண்டி மாவட்டத்தில் போட்டியில் நிற்கிறார் என்று அறிவிக்கப்பட்டபோது மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினர் கூச்சலிட்டுக் கத்தினார்கள். ஜனாதிபதி கோபமுற்று அமைப்பாளர்களை கடிந்து கொண்டதாகத் தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் எதிர்க்கட்சிகளுடன் போட்டியிடாமல் தங்களுக்கிடையிலேயே மோதிக்கொள்வதாகக் கூறப்படுகின்றது. வேட்பாளர் பட்டியலில் முதல் இடத்தைப் பெறவும், ஜனாதிபதிக்கு தமது திறமைகளைக் காட்டவும் அவர்கள் முனைந்திருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் ஜனாதிபதி இவை எதிலும் அக்கறை காட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. (ப)

# நாளை

| | |
|---|---|
| பங்குனி 09 | 23.03.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.இ. 12.18 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | [illegible] |
| ராகுகாலம்: | 03.16 -04.46 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்களான செல்வி துரைசிங்கம் யசோதை, திரு. சனந்தன் துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி துரைராஜசிங்கம் தவபாக்கியம்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு, துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 ★ 01 ★ 1956



உதிர்வு 01 ★ 04 ★ 2009

**அமரர் சுப்பிரமணியம் சக்திவேல்**

அன்பான துணைவனே அன்போடும்
பாசத்தோடும் எமைக்காத்த தேவனே!
எம்மினிய அருமை அப்பாவே!
பாதியிலே எமைப் பரிதவிக்க விட்டு
சென்றதேனோ எம் உயிர்த் தந்தையே!
என்றும் எம் நெஞ்சம் மாறாத அப்பாவே!
உங்கள் நினைவில் என்றும் நாம்....

18/9, மூத்த விநாயகர் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

31வது அகவையும்
346ம் நாள் நீங்கா நினைவும்



தோற்றம் : 22.03.1979
மறைவு : 20.04.2009

அமரர் திருமதி
**பத்மாவதி புவனேஸ்வரன்**

பாசமதனை தந்துவிட்டு
பறந்து போனதேனோ எம்மை
நாளும் தவிக்கவிட்டு
சிறகடித்ததேனோ
சிறகொடிந்து தவிக்கிறோம் உன்
புன்னகை முகம் காண
விழி நீர் சொரிய
என்றும் உன் நினைவினிலே.....

தமிழ்வளர்ச்சிச்சோலை,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தம்பிஜயா சண்முகலிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சண்முகலிங்கம் 19.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிஜயா-கனகம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், பத்மினிதேவியின் அன்புக் கணவரும், சுமதி (சுவிஸ்), மாலதி (சுவிஸ்), யோகலட்சுமி (சுவிஸ்), யோதிலட்சுமி (லண்டன்), சுமிதினி, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விவேகானந்தன் (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), சாந்தகுமார் (லண்டன்), ராஜ்மதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி மற்றும் தியாகராஜா, சந்தானலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும், பிரகாஸ், பிரவீன் (சுவிஸ்), பிரசாந் (சுவிஸ்), பிரதீப் (சுவிஸ்), பரணிகா (சுவிஸ்), துஷாந்தன் (லண்டன்), பிரசாந்தினி (லண்டன்), பிரித்திகா (லண்டன்), சிம்சிலன், பர்மிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
(சி/565978)
தகவல்: குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

மயிலிட்டி தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சாந்தலிங்கம் ஜெயசீலன் என்பவரது தே.அ.அ (620634395V), விசேட அ.அட்டை, சாரதி அ.பத்திரம் (No.621863) என்பன 08.03.2010 அன்று மாவிட்டபுரத்தும், உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (95760)

## வீடு வாடகைக்கு தேவை

புதிதாக யாழ்.மண்ணில் உருவாகும் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகர்ப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 0777575701 (95742)

## தேவை

நெல்லியடியில் இயங்கும் கஜமுகன் டென்ரல் கெயருக்கு உதவித் தாதிய வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொ.பே. 0774972000

## THE ROYAL COLLEGE OF JAFFNA

மூன்று மாத காலங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில.
By. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம். ரிவாக் வீதி, சங்கானை. (95788)

## வேலை ஆள்கள் தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலை ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். (சாப்பாட்டுடன் தங்குமிட வசதி உண்டு).
குறிப்பு: முன் அனுபவம் தேவையில்லை.
RASAM MILL,
POWER HOUSE ROAD, CHUNNAKAM (95778)

## நாவற்குடாவில் துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு, மார்ச் 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் நாவற்குடாவில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8.30மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எம்.முகமது இப்ராகிம் (வயது 40) என்பவர் வயிற்றில் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பிரஸ்தாபநபர் நண்பர்களுடன் வீதியில் சென்று கொண்டிருந்த போது எதிராக வந்தவர்கள் ஹிஸ்புல்லாவின் ஆதரவாளர்களா? என்று கேட்டு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் இதில் இப்ராகிம் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் தொடர்பாக மட்டக்களப்பில் இடம்பெற்ற முதலாவது துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-1)

### நல்லை ஆதீனத்தில் குருபூசை விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகரான நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகளின் 29ஆம் குரு பூசைத்தினம் நாளை செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட விருக்கிறது.

ஆதீனகுருமூர்த்தி ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள், பூசை வழிபாடுகள் நடைபெற்று திருமுறை ஓதலின் பின்பு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப் ... (ஓ)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி கலாவல்லி சின்னத்துரை

தம்மளை, அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலாவல்லி சின்னத்துரை நேற்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரணவமுத்து சின்னத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-நாகம்மா தம்பதிகளின் மருமகளும், ஈஸ்வரி (கனடா), இராதா, உமா (கனடா), பாமா, காலஞ்சென்ற யசோதா மற்றும் ஐங்கரன் (கனடா), ஜெகதா (கனடா), கிருபா, கௌசலா (கனடா), சுமித்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ந.அமிர்தலிங்கம் (அதிபர், யா/சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி), வரதராஜசிங்கம் (கனடா), கருணாமூர்த்தி (கொழும்பு), நிரஞ்சலா (கனடா), செல்வரகுநாதன் (கனடா), ஞானசுதன் (பூசகர், ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், அளவெட்டி, ஊழியர் யா/தொழில் நுட்பக்கல்லூரி), சுரேந்திரன் (கனடா), திருச்செல்வம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமிதாயன் (மகாஜனக் கல்லூரி), ஹரிதாயன் (மகாஜனக் கல்லூரி), வினுஷன் (கனடா), அர்ச்சனா (கனடா), லக்ஷனா (கனடா), அபிஷனா (கனடா), ரமாஜினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), கோவர்த்தனா (உடுவில் மகளிர் கல்லூரி), சேயோன் (கனடா), செழியன் (கனடா), கிரிஷான் (கனடா), கிரிஷாயினி (கனடா), யரிசான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பங்கயற்செல்வி (கனடா), பாலசண்முகம் (வவுனியா), பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ஆறுமுகம், தங்கம்மா, இராசம்மா, இராசரத்தினம் மற்றும் பருநிருபசிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2மணியளவில் பூதவுடல் தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்மளை,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (95777)
தகவல்: குடும்பத்தினர்.



### கனகசபை சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற பரிசோதகர், தொலைத் தொடர்பு சமிக்ஞைகள், இலங்கைப் புகையிரதத் திணைக்களம்)

கொக்குவில் கிழக்கு, தலையாழியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிவசுப்பிரமணியம் 18.03.2010 வியாழக்கிழமையன்று கனடா டொரண்டோவில் இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-அழகுசுந்தரம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான V.R.சுந்தரம்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும், சோதிமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருள் கனகசபை மற்றும் வசந்தன் (சுவிஸ்), தயாளன் (ஜேர்மனி), தர்சினி (கனடா), அச்சுதன் (இலங்கை நிர்வாக சேவை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயாராணி (சுவிஸ்), சுபாசினி (ஜேர்மனி), திருநேசன் (கனடா), தயாழினி ஆகியோரின் மாமனாரும், சங்கீதன், சாகித்தியா, சுஜித்தன், பாவலன், ஹவீஷன், சாருஜன், ஷாகீஷன், அபிஷன், அபிஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், நீலாயதாட்சி, கனகலட்சுமி, புஸ்பராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விஜயரெட்ணம், கணபதிப்பிள்ளை மற்றும் உலகநாதன் (ஓய்வு பெற்ற அத்தியட்சகர், நிலஅளவை), குணவதி, காலஞ்சென்ற பாலேந்திரா (ஓய்வு பெற்ற தபாலதிபர்) மற்றும் வைத்திய கலாநிதி குணபூஷணம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 25.03.2010 வியாழக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7½, Gregory's Place,
W.A.Silva Mawatha, Colombo - 06,
email:achchuthans@yahoo.com,
Mobile: 0718157001,
Home: 0112586768. (95774)

தகவல்:
சி.அச்சுதன் (மகன்).
(பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா).

### மார்ஷல் லோரன்ஸ்

(ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள பிரதம பரிசோதகர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மார்ஷல் லோரன்ஸ் 16.03.2010 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் மார்ஷல்-ரோசலீன் தம்பதிகளின் புதல்வனும், திருமதி திரேசாரோஸின் அன்புக் கணவரும், சர்மிளா, சசிகலா, வத்சலா, பிரமிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிளிபேட், நெல்சன் அன்ரனி, அருளானந்தம், புளோரா மரியதாசன், காலஞ்சென்ற ஸ்ரெலா மரியதாசன் மற்றும் கிப்லொலிட்டா எட்வேட், கெலன் ஜெசி அன்ரனிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், விஜேயகுமார், பேர்னாட், டிரோன், சந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.03.2010) திங்கட்கிழமை பிரான்ஸில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 71, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (95771)
தகவல்:
கெலன் ஜெசி அன்ரனிப்பிள்ளை
(ஜாஜினி - சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி காணிக்கை அன்னைக்கு சனியன்று விசேட திருப்பலி பூஜை

## உயர் பாதுகாப்பு வலயத்தில் சிறப்பாக நடந்தது

யாழ்ப்பாணம்,மார்ச் 22

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மயிலிட்டி காணிக்கை அன்னை ஆலயப் பகுதியில் சிரமதானம் நடைபெற்று நேற்று முன்தினம் சனிக்கிழமை விசேட திருப்பலி பூஜை கோலாகலமாக நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துறுசிங்கவுக்குப் பதிலாக மேஜர் நவரத்ன அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முப்பது வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக இடம்பெற்ற யுத்தச் சூழலால் நீண்ட காலமாக பூஜைகள் நடைபெறாமல் கைவிடப்பட்டிருந்த வரலாற்றுப் புகழ்மிக்க மயிலிட்டி காணிக்கை அன்னை ஆலயம் யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஹத்துறுசிங்கவின் ஆலோசனையின் பேரில் இத் தலைமையக பிரதம அதிகாரி பிரிகேடியர் பி.சி.ஜே.ஏ.எஸ். ரொட்ரி கோவின் மேற்பார்வையில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் படைப் பிரிவுகளின் இராணுவ வீரர்களினதும் அப்பகுதி பொது மக்களினதும் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் சிரமதானப்பணியொன்று மேற்கொள்ளப்பட்டு அங்கு திருப்பலி பூஜையொன்று மிகவும் கோலாகலமாக நடந்தேறியுள்ளது.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த ஆலயம் 300 வருடங்களுக்கு முன்னர் போர்த்துக்கேயரால் கிறிஸ்தவ மதத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக மயிலிட்டிப் பிரதேசத்தில் நிறுவப்பட்டது. ஒல்லாந்தர் இந்த ஆலயத்தை அழித்து கத்தோலிக்க மதத்தை மக்களிடமிருந்து தூர விலக்க முற்பட்டனர். அவர்களின் முயற்சி சிறிது காலம் தொடர்ந்தாலும் ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவ மக்கள் இங்கு மெழுகுவர்த்தி ஊர்வலமொன்றை நடத்தி மீண்டும் வழிபாடுகளை மேற்கொண்டனர். எனினும் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலால் யாழ்.பிரதேசத்தில் பல அழிவுகள் ஆரம்பமாகின. இக்காலகட்டத்தில் இவ்வாலயத்தில் பூஜைகள் நடைபெறுவது மீண்டும் தடைப்பட்டதுடன் ஆலயம் அழிவுக்கும் உள்ளானது.

சமாதானத்தைத் தொடர்ந்து யாழ்.குடாநாடு முழுவதும் கிறிஸ்தவம் மீண்டும் புதுப்பொழிவுபெற்று வருவதுடன் அதன் பிரதிபலனாக கடந்த 12 வருட காலமாக பூஜைகள் நடைபெறாது கைவிடப்பட்டிருந்த இவ்வாலயத்தை சீரமைத்து முதல் முறையாக நடத்தப்பட்ட திருப்பலி பூஜை கடந்த 20 ஆம் திகதி யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியை பிரதிநிதித்துவப் படுத்தி இத்தலைமையக பிரதம அதிகாரி பிரிகேடியர் ரொட்றிகோ உட்பட உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களினதும் பிரதேச வாழ் சுமார் இரண்டாயிரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கிறிஸ்தவ பக்தர்களினது பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இவ்வுற்சவம் யாழ்.கிறிஸ்தவசபையின் அருட்திரு ஜஸ்டின் அடிகளார் உட்பட பிரதான பங்குத் தந்தைகளின் தலைமையில் நடைபெற்றதுடன் இதில் கலந்து கொண்ட அடியார்களுக்குப் பிரதேச வாழ் கொடையாளர்களால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. இவ்வைபவத்தைச் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு இராணுவத்தினர் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டதுடன் பங்குத் தந்தைகளும் அடியார்களும் இந்த நடவடிக் கைக்கு தமது நன்றியைத் தெரிவித்தனர்-என்றுள்ளது. (ஓ)

### பருத்தித்துறை வீதி விஸ்தரிப்பு: பணிகள் துரிதமாக நடக்கின்றன

கோப்பாய், மார்ச் 22

கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் ஊடாக ஊடறுத்துச் செல்லும் பருத்தித்துறை வீதி விஸ்தரிப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

தற்போது இப்பணிகள் புத்தூர் சந்தியில் இருந்து வல்லைப்பாலம் வரை நடைபெற்று வருகின்றது.

இதனை அடுத்து புத்தூர்ச் சந்தியில் இருந்து கோப்பாய் சந்திவரை புனரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான பூர்வாங்கப் பணிகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் வீதி அதிகாரசபை அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-72)

### குறிகாட்டுவானில் ப.நோ.கூ.சங்கக் கிளை

புங்குடுதீவு, மார்ச் 22

குறிகாட்டுவான் பகுதியில் மக்கள் மீளக்குடியேறவுள்ள நிலையில், அங்கு ப.நோ.கூ.சங்கக் கிளை ஒன்றைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளார். (ஓ-188)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# புடைவைக் கைத்தொழில் அபிவிருத்தியின் அவசியம் குறித்து வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 22

இலங்கையின்புடைவைக்கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென தாம் ஜனாதிபதியையும், புடைவைக் கைத்தொழில் அமைச்சரையும் கேட்டுக்கொள்வதாக செங்குந்தர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.கே. கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூடப்பட்ட நிலையில் இருக்கும் புடைவை ஆலைகள் திறக்கப்பட வேண்டும், 'லக்சல' 'சலுசல' கிளைகள் நாடு முழுவதும் திறக்கப்பட வேண்டும், இறக்குமதி செய்யப்படும் புடைவைகளின் அளவு குறைக்கப்பட வேண்டும், பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகளில் புடைவைக் தொழில் தொடர்பான பாடங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இத்தொழிலில் ஈடுபடுவோருக்கு வங்கிக் கடன்கள் வழங்கப்படுவதோடு வரிச் சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று தமது சங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-க)

# வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 14 வேலைத் திட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச் 22

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் 14 வேலைத் திட்டங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. இதற்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டங்கள் அனைத்தும் விவசாயத் திணைக்களம் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

திராட்சைச் செய்கையில் சிமெந்துக் கம்பம் மற்றும் வலைப் பாதுகாப்பு, நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பப்பாசிப்பழச் செய்கை, மாமரங்களுக்குரிய காலங்களில் மருந்து விசிறல் போன்ற பணிகளும் இந்த வேலைத் திட்டத்தில் அடங்கியுள்ளன. (ஓ-72)




# மாதிரி கிராம செயலகப் பணிமனை அச்சுவேலியில் விரைவில் இயங்கும்

## யாழ்.மாவட்டத்தில் இதுவே முதல் அலுவலகம்

கோப்பாய்,மார்ச்22

யாழ்.மாவட்டத்தில் 'முதன் முதலாக மாதிரி கிராம செயலகம்' கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது.

செயலகத்திற்கான 1.3 மில்லியன் ரூபா நிதி பொது நிர்வாக அமைச்சாலும் 0.5 மில்லியன் ரூபா பிரதேச பொதுமக்களாலும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலகத்தின் மூலம் கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல மாது ஆகியோரின் ஒருங்கிணைந்த சேவைக்களை ஒரே இடத்தில் பெறக்கூடிய வசதிகள் கிடைக்கவுள்ளன.

புதிய செயலகப் பணிமனையின் செயற்பாடுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-72)

# புகையிலையை வெட்டி வெங்காயச் செய்கைக்கு ஆயத்தமாகி வரும் குடாநாட்டு விவசாயிகள்

நாவற்குழி,மார்ச்22

யாழ்.மாவட்டத்தில் புகையிலை வெட்டும் சீசன் அமளியாக நடக்கும் நிலையில் யாழ்ப்பாணத்து கிராமப்புற மதில்கள் எங்கும் புகையிலையே காணப்படுகின்றன.

சென்ற வருடம் டிசெம்பர் மாத இறுதிவரை அடைமழை பெய்தமை காரணமாக புகையிலை நடுகை நன்றாகப் பிந்தி விட்டது. வருட ஆரம்பத்தில் மழை பெய்யாமையாலும், கடுமையான வெப்பம் நிலவுவதாலும் புகையிலையின் வளர்ச்சி பரவலாகக் குறைவாயிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்பகுதிச் சந்தைக்கு தரைவழிப் பாதையூடாக அனுப்பப்படும் நிலையைக் கருதி கூடுதலான நிலப்பரப்பில் புகையிலை பயிரிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பச்சையாக வெட்டப்படும் புகையிலையை வியாபாரிகள் கொள்வனவு செய்து எடுத்துச் செல்லப்படுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

புகையிலை வெட்டப்பட்ட நிலங்களை வைகாசியில் வெங்காயச் செய்கைக்கும், உப உணவுப் பயிர்ச் செய்கையின் பொருட்டும் ஆயத்தப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-121)

# நெடுந்தீவு மக்களின் உள்ளூர் சேவைக்கு கூடுதல் பயணிகள் ஏற்றக்கூடிய பஸ்

நெடுந்தீவு, மார்ச் 22

நெடுந்தீவு மக்களின் கோரிக்கைகளை அடுத்து உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தும் பொருட்டு 58 இருக்கைகள் கொண்ட போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

இதுவரை சேவையில் இருந்த சிறிய பஸ் வண்டி மக்களின் பிரயாணத் தேவைகளுக்கு ஏற்றதாக இல்லாதபடியால் படகுச் சேவையைப் பயன்படுத்தும் பிரயாணிகள் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தாவிடம் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்தே கூடுதலான மக்கள் பயணம் செய்யக் கூடிய பஸ் ஒன்று சென்றவார இறுதியில் வந்து சேர்ந்துள்ளது. இதுவரை சேவையில் இருந்த சிறிய பஸ் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரும் பொருட்டு கடற்படைக் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளது. (க-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த ஆண்டு (2009) நடைபெற்ற பேராதனைப் பல்கலைக்கழக இளங்கலைமாணி பரீட்சையில் சித்தி எய்திய புதிய உயர் கல்லூரி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.


செல்வன் காசிநாதன் ஸ்ரீரங்கலிங்கம் மட்டுவில்


செல்வி கார்த்திகேசு மங்களகௌரி சங்கானை


திருமதி ரஞ்சன்பாபு அனோதா மல்லாகம் (2nd Class -LD)


செல்வன் ஆறுமுகம் இராகுலன் கோண்டாவில்


செல்வன் கனகலிங்கம் தசிகரன் வசாவிளான்


செல்வி அழகரெட்ணம் பகீரதா யாழ்ப்பாணம்


செல்வி விநாயகமூர்த்தி பிரியதர்சினி நீர்வேலி


செல்வி மாணிக்கவாசகர் ராஜிதா ஊரெழு


செல்வன் டானியல் புஜங்கன் மாகியம்பிட்டி


செல்வன் முத்துவேல் சசிக்குமார் புன்னாலைக் கட்டுவன்


செல்வன் நடனசபாபதி பிரதீப்குமார் மூளாய்


செல்வி சிவகாமசுந்தரலிங்கம் அஞ்சனா இடைக்காடு


செல்வி தங்கராஜா பிருந்தா புத்தூர்


திருமதி சொருபன் மதுரா அச்சுவேலி


திருமதி அமிலன் சுகந்தினி புத்தூர்


செல்வி தேவராசா கேதினி சங்கானை


செல்வி நல்லையா சுகிர்தா கோப்பாய்


செல்வி சிவகரன் ஜனனி இணுவில் (2nd Class -UD)


செல்வி பாலகிருஷ்ணன் யசித்தா அல்லாரை


செல்வி இராமு சுபாசினி கைதடி


செல்வி கருணாநந்தம் துஸ்யந்தினி மாதகல்


திருமதி மகேஸ்வரன் கேமா புத்தூர்


செல்வி சந்தனம் ஜெசதா நாவற்குழி


செல்வன் இரத்தினசிங்கம் கோகுலகுமார் மானிப்பாய்


திரு இராசசூரி கிருபாகரன் வாதரவத்தை


செல்வி பாலசிங்கம் சுபாஉமா சுதுமலை


திருமதி கிருபாகரன் சுபாஜினி நல்லூர்


செல்வி செல்லையா குபேதினி ஆனைக்கோட்டை


செல்வி இரத்தினம் தனுஷா ஆனைக்கோட்டை


செல்வி செல்வநாயகம் கோகிலா நவாலி


செல்வன் கைலாசதுரை ஸ்ரீகரன் வண்ணார்பண்ணை


திரு கதிர்காமத்தம்பி பொன்னம்பலம் புலோலி


செல்வி ஜெயராஜசிங்கம் ஜெசிதா சுன்னாகம்


செல்வி கந்தசாமி விலாசினி சுன்னாகம்


செல்வன் ஜெயரத்தினம் நிஷாகர் கோப்பாய்


செல்வி சிவாநந்தராசா யசித்திரா இணுவில்

செல்வி தர்மலிங்கம் ஸ்ரீகுமாரி உரும்பிராய்

திருமதி ரங்கேஸ்வரன் புவனலோஜினி உரும்பிராய்

திருமதி சுதாகரன் தாட்சாயினி கட்டப்பிராய்

திரு சரவணமுத்து அகிலன் கல்வயல்

பாராட்டி வாழ்த்துவோர்:
புதிய உயர்கல்லூரி
பேராதனைப் பரீட்சைக்கு
தோற்ற இருக்கும்(2010)
இறுதியாண்டு மாணவர்கள்.

### அடிக்கல் நடப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்தும்

## கைதடி உப தபாலகத்தை கட்ட இதுவரை நடவடிக்கை இல்லை

கைதடி, மார்ச் 22

கைதடி உப தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடமொன்று இல்லாததால் அப்பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

உப தபாலகம் கடந்த பல வருடங்களாகக் கைதடி ப.நோ.கூ. சங்கக் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வந்தது. இக் கட்டடம் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் அனர்த்தத்தின் போது முற்றாகச் சேதமடைந்தது. அதன் பின்னர் கைதடியிருலுள்ள தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இதே வேளை 2005 ஆம் ஆண்டு தபாலகம் அமைப்பதற்கென நலன்விரும்பி ஒருவரினால் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டு மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோரினால் கட்டடத்திற்கான அடிக்கல் நடப்பட்ட போதும் இதுவரை கட்டட வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை.

இவ் விடயத்தில் தபால் திணைக்கள உயரதிகாரிகள் கவனமெடுத்து இக் கட்டட வேலைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று இப் பிரதேச பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-288)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

அல்லலுற்ற தமிழருக்காய் அல்லும் பகலும் தனை அர்ப்பணித்து சேவையாற்றும்...

அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B
(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



X 1

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)


### வீதிகளை புனரமைத்து தருமாறு கோரிக்கை

நாவற்குழி பிரதேசத்தில் கூளாறு பிட்டி வீதி, பாடசாலை வீதி என்பன மிக நீண்ட காலமாகவே புனரமைக்கப்படாமல் உள்ளன. சாவகச்சேரி பிரதேச சபைக்கு உரிய இவ் வீதிகளை திருத்தித் தருமாறு பிரதேச மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

(ஒ-121)

## மரண அறிவித்தல்

### பூதன் வேலுப்பிள்ளை

*(சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், மதுவரித்திணைக்களம்)*



மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த பூ.வேலுப்பிள்ளை (ஜே.பி., ஓய்வு பெற்ற பிரமத எழுதுநர், மதுவரித்திணைக்களம்) 20.03.2010 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மட்டுவில் காலஞ்சென்றவர்களான பூதன்-மயிலி தம்பதியரின் இளைய மகனும் சந்திரமலரின் அன்புக் கணவரும் பிறேமகாந்தன் (லண்டன்), யோகாந்தன், லோகாந்தன் (ஆசிரியர், வவுனியா, செட்டிக்குளம் அருவித் தோட்டம் சிவானந்தா வித்தியாலயம்), புவிதா (மாணவி, உயர் தரம் 2010 சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாநிதியின் (லண்டன்) அன்பு மாமனும் காலஞ்சென்ற ஆ.தெய்வானை மற்றும் பூ.நாகலிங்கம், பூ.கந் தையா, பூ.சங்கரப்பிள்ளை, பூ.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆரம்பப் பிரிவு செயற்திட்ட அதிகாரி, தேசியக் கல்வி நிறுவகம், மஹரகம) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வல்லிபுரம்- காலஞ்சென்ற பார்வதி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

...ச் வீதி, சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
லோகாந்தன் (சுஜி- மகன்).
(சி/565968) தொ.பே.: 0777065676

## துயர் பகிர்கின்றோம்

அமரர்

### துரைராசசிங்கம் தவபாக்கியம்

எமது நிறுவன ஆங்கில மொழி மூல கணித ஆசிரியர் து.சனந்தனன் அவர்களின் அன்புத் தாயார் இறைபதம் அடைந்ததையிட்டு துயர்பகிர்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர், ஆளணியினர்.

The Express Institute
Irupalai, Kopay.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா இலக்சுமி



சந்தாதோட்டம், புலோலி வடகிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா இலக்சுமி 20.03.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், க.இந்திராதேவி மற்றும் ஜோ. சந்திராதேவி, ப.இந்திராணி (ஆசிரியர், யா/புற்றளை ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கழுகாசலம், மனோன்மணி, ஜோர்ஜ் (இளைப்பாறிய ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதய கல்லூரி), பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அரவிந்தன் (பொறியியலாளர், லண்டன்), துஸ்யந்தன்(T.O., மகேந்திரா கென்ஸ்றக்சன்), வைகுந்தன் (A.T.I. 3ஆம் வருட மாணவன், உயர்தொழில்நுட்பக் கல்லூரி, திருகோண மலை), பிரசாத் (கனடா), பிரபாலினி (நுண்கலைப்பட்டதாரி), ஜொய்சி (தெல்லிப்பழை D.S. Office), சோபியா (விஞ்ஞானபீட 3ஆம் வருட மாணவி), கிருஷாந்தி, நிமலன், மயூரன், கிறிஸ்ரி- சாருஜன், மதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சந்திரராசா, சந்திரமோகன் மற்றும் ஆனந்தராஜா, சந்திரஸ்ரீ (கனடா) ஆகியோரின் சிறியதாயும் இராசாத்தி சண்முகத்தின் (கனடா) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தா தோட்டம்,
புலோலி வடகிழக்கு,
0771233133, 0774676512. (9769)

தகவல்
திருமதி இந்திராணி பத்மநாதன் (மகள்)
(யா/புற்றளை ம.வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள அரியாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு லண்டனில் உள்ள அரியாலையைச் சேர்ந்தவர்களின் அமைப்பான 'தமிழ் அசேசியேசன் பேரன்ற்' சீருடை மற்றும் கற்றல் உபகரணங்களை அரியாலை அபிவிருத்திச் சங்கம் ஊடாக அண்மையில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் கிராம அலுவலர்களான பு.தஜிதரன் (ஜே/91), எஸ்.விஜிதரன் (ஜே/96), இ.தங்கத்துரை (ஜே/99) ஆகியோர் பொருள்களை வழங்குவதை அடுத்தடுத்த மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)




## கொடித் தம்பம் நட்டு மகோற்சவம் ஆரம்பம்

நீர்வேலி மார்ச் 22

நீர்வேலி வடக்கு காளியம்மன் கோயிலில் 1958 ஆம் ஆண்டு முதல் அலங்கார உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்று வந்தது. அண்மையில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. இப்பகுதியில் முதன்முதலாக இராஜகோபுரம் அமைக்கப்பட்ட அம்மன் கோயில் இதுவாகும்.

இக்கோயிலில் கடந்த 17 ஆம் திகதி புதிதாக கொடித் தம்பம் நடப்பட்டு 18ஆம் திகதி கொடியேற்றத் திருவிழா நடைபெற்றது.

தொடர்ந்து 27 ஆம் திகதி சப்பரம், 28 ஆம் திகதி தேர்த்திருவிழா, மறுநாள் தீர்த்தத்திருவிழா நடைபெறும். (ஒ-110)

# குருநகர் பொலிஸ் கைப்பற்றிய இராட்சத கடல் ஆமை!


## அதன் நீளம் 7 அடி; எடை 155 கிலோ!!

யாழ்ப்பாணம், மார்ச்22

குருநகர் கடலில் பிடிக்கப்பட்ட இராட்சத ஆமை ஒன்றை பொலிஸார் கைப்பற்றி, அதனை மண்டை தீவுக் கடலில் விட்டனர்.

இந்தக் கடல் ஆமை 7 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டது என்றும் அதன் எடை 155 கிலோ என்றும் அதனைப் பரிசோதித்த மிருக வைத்தியர் குறிப்பிட்டார்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து குருநகர் இறங்குதுறைக்கு விரைந்து வந்த பொலிஸார் படகுகளைச் சோதனையிட்டனர். ஒரு படகில் இராட்சத ஆமை கிடப்பதை அவர்கள் கண்டனர். அதனைக் கைப்பற்றிய பொலிஸார் கடல் ஆமையைப் பிடித்ததாதக் கருதப்படும் சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்தனர். அவர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகர் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரே கடல் ஆமையைக் கைப்பற்றினர். கடல் ஆமையைப் பிடிப்பது சட்டவிரோதமாகும்.

சட்ட விரோதமாகப் பிடிக்கப்படும் கடல் ஆமையின் இறைச்சி கிலோ ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், அதன்படி பிடிக்கப்பட்ட ஆமை ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியானது என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (ஒ-14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆரம்பகாலத்தில் இப்பாடசாலை இயங்கியதாகக் கூறப்படும் திண்ணைப் பள்ளிக்கூடத்தின் இன்றைய தோற்றம்.

# சைவமும் தமிழும் தழைக்கப் பாடுபடும் யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்

சுகந்தன்

எமது முன்னோர்கள் ஆரம்ப காலத்தில் சைவமும் தமிழும் மேலோங்கி வளரும் பொருட்டு இந்துக் கல்லூரிகள், சைவப்பிரகாச வித்தியாலயங்கள், சன்மார்க்க வித்தியாலயங்கள் போன்றவற்றை நிறுவி அளப்பரிய வரலாற்றுத் தொண்டைச் செய்துள்ளனர். அந்த வரிசையில் உருவாக்கப்பட்டு வண்ணார் பண்ணை மணிக்கூட்டு வீதியில் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் திருக்கண் நோக்கில் பொலிவுடன் திகழ்ந்து அளப்பரிய கல்வித் தொண்டாற்றிவரும் வித்தியாலயமே யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயமாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகையைக் கொண்டிருந்து ஆரம்பப் பிரிவு தொடக்கம் உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கு மிகச் சிறந்த கல்வி எனும் அமுதை ஊட்டி வருகிறாள் சன்மார்க்க வித்தியாலயத் தாய் என்றால் மிகையாகாது.

ஆரம்பகாலங்களில் குருகுலக் கல்வியிலிருந்து வளர்ச்சி பெற்ற எமது கல்விப் பாரம்பரியம் பின்னர் படிப்படியாக திண்ணைப் பள்ளிக் கூடங்கள், பின்னர் குடிசைப் பாடசாலை இவ்வாறாகவே எமது கல்வி வரலாறுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இப் பாடசாலையின் ஆரம்ப கால வரலாறுகள் பற்றி ஏட்டுமூல ஆதாரங்கள் இல்லாத போதும் செவிவழியாகப் பேணப்பட்டு வந்த வரலாற்று ஆதாரங்களே எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

அந்த வகையிலே ஆரம்பக் கால கட்டத்தில் பெருமாள் கோயிற் சூழலில் 'சுப்பர் பள்ளிக்கூடம்' எனும் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் இயங்கி வந்ததாகக் கூறப்படுகின்றது. இப்பாடசாலையே பின்னர் சன்மார்க்க மகா வித்தியாலயமாக மருவி வந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சியின் பண்பாட்டுத் திணிப்புக்களுக்கு எதிராகவும்-மாற்றாகவும் இலங்கையின் தெற்கிலும் வடக்கிலும் மறுமலர்ச்சிப் போராட்டங்கள் நடைபெற்றன. இப் போராட்டத்தின் வலுவுள்ள காரணியாக கல்விச் செயற்பாடுகள் அமைந்தன.

மறுமலர்ச்சிப் போராட்டவாதிகள் தங்களது மொழியையும், சமயத்தையும், பண்பாட்டு பழக்க வழக்கங்களையும் பாதுகாப்பதற்காகப் பாடசாலைகளை அமைத்துக் கல்வி வழங்கினர். ஆங்கில மிஷனரிக் குழுக்களின் அரச ஆதரவு பெற்ற பாடசாலைகளுக்கு மாற்றாக இப்பாடசாலைகள் தனியார்களினதும், நிறுவனங்களினதும் உதவிகளுடன் நாடு முழுவதும் நிறுவப்பட்டன.

கிறிஸ்தவ மதச் செல்வாக்கிலிருந்து சைவத்தமிழர்களைக் காப்பாற்றும் நோக்கில் இந்துத் தமிழ் மக்களால் ஒப்பற்றவர் எனப் போற்றப்படும் "இந்து போர்ட்" ஏழூர் இராசரத்தினம் ஐயா அவர்களினதும் இந்து சமய கல்வியாளர்களினதும் அரும் பெரும் முயற்சியின் பயனாக வண்ணார்பண்ணைப் பிள்ளையார் கோயிலின் தென்புறத்தில் இயங்கி வந்த சுப்பர்பள்ளிக்கூடமும், வடக்கே அமைந்த ஆங்கில மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் 1927 ஆம் ஆண்டு ஒன்றிணைக்கப்பட்டு "யா/சேணியதெரு சன்மார்க்க துவிபாஷா பாடசாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஒரு முறைமை சார் பாடசாலையாக இயங்கி வந்தது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது பாடசாலை மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகும். இச் சங்கத்தினால் ஏழூர் இராசரத்தினம் ஐயாவின் முயற்சியால் உருவாக்கப்பட்ட 86 பாடசாலைகளில் ஒன்றே இப்பாடசாலை ஆகும்.

பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் 1960 ஆம் ஆண்டில் பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டபோது சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் சார்பில் 180இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் கையளிக்கப்பட்டன. இன்று யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கையில் சுமார் 40% ஆனவை "இந்து போர்ட்" பாடசாலைகள் என்றால் மிகையாகாது.

பின்னர் 1941 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பாடசாலை " யா/சேணிய தெரு சன்மார்க்கப் போதனா ஆங்கிலப் பாடசாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆங்கில மொழி மூல பாடசாலையாக நடைபெற்றதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன. பின்னர் இங்கு இரு மொழிப் பாடசாலையாக அதாவது தமிழ் மொழி மூலம் கற்பவர்களுக்கு சாதாரண தரம் வரையும், ஆங்கில மொழி மூலம் கற்பவர்களுக்கு தரம் 8 வரையும் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

பின்னர் 1973.03.20 அன்று இப்பாடசாலை யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக சம்பவத்திரட்டுப் பதிவு எடுத்து இயம்புகிறது.


(வளரும்)



# சுதேசப் பொருளாதார உற்பத்தியின் சுட்டியாக யாழில் எழுந்து நிற்கும் உயிர் நுட்பு நிறுவனம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

மேலே குறிப்பிட்ட குறிஞ்சாப் பவுடரை நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்துவதன் மூலம் 15 நாள்களில் இந் நோயை 20% கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரலாம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றைச் சாதாரணமானவர்கள் கூடப் பயன்படுத்தலாம். எந்த விதப் பக்க விளைவுகளும் அற்றது. இவ்வாறு சுதேச உற்பத்திப் பொருள்கள், தொழில்நுட்பம் என்பவற்றைக் கொண்டு சிறப்பான வகையில் தமது உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.



ஆ.பிரியந்தினி

அந்தவகையில் இவர்களின் உற்பத்தி முறை என்று நோக்கின் இது முழுக்க யாழ்ப்பாணத்தொழில் நுட்பத்தினை மையமாகக் கொண்டது. இங்குள்ள இயந்திரத் தொழில் நுட்ப முறையானது யாழ்ப்பாணப் பொறியியலாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். திராட்சை ரசமானது, திராட்சைப் பழங்களை உரியமுறையில் சாறுபிழிந்து, பின்னர் கொதிக்க வைத்து திராட்சை ரசமாக்குகின்றனர். மேலும் மென்பானத் தயாரிப்பில் அல்ட்ரா வயலட் றேடியோக்கதிர்களைப் பயன்படுத்தி நீரில் காணப்படும் கல்சியத் தன்மையைக் குறைத்து அதனைத் தூயதாக்கிய பின்னரே குளிர்பானத் தயாரிப்பில் ஈடுபடுகின்றனர். அத்துடன் குளிர்பானப் போத்தல்கள் கூட நவீன முறையில் சிறப்பாகச் சுத்திகரிக்கப்படுகின்றன.

இவ்வாறு சிறப்பான முறையில் சுய உற்பத்திப் பொருள்களையும், தொழில் நுட்பத்தினையும் கொண்டியங்குவதனால், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆனாலும் இந்த "உயிர் நுட்பு" பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அதாவது குறிஞ்சாத் தேநீர்ப் பவுடர் தயாரிப்பதற்குத் தேவையான குறிஞ்சா இலைகளைப் பெறுவதில் சிரமம் காணப்படுகின்றது. இதனால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற மூலவளம் பெறுவதில் சிரமம் காணப்படுகின்றது. அதேவேளை திராட்சை ரசம் தயாரிப்பதிலும் திராட்சைப் பழங்களைப் பெறுவதில் சிரமங்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்த நிறுவனம் இதற்கான நடவடிக்கையை விரைவில் எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களுடன் இவ் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் போட்டி போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் மக்கள் நாகரீக மோகம் என்ற போர்வையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை உதாசீனம் செய்யும் போக்கு நீண்டகாலமாக நிலவி வருகின்றது. இந்தப் பார்வை மாற்றம் பெறவேண்டும். நமது பிரதேச உற்பத்தியை நாம்தான் ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது மண்ணின் பெருமை உலகளவில் பேசப்படும்.

இந்த நிறுவனம் தன்னகத்தே பல பெருமைகளையும் கொண்டது. அதாவது 2006 ஆம் ஆண்டு இதற்கு "ஜனாதிபதி விருது" கிடைத்தது. மேலும் வடமாகாண ரீதியில் உள்ளூர், உணவு, பான உற்பத்தியில் இரண்டாம் இடம் பெற்றமையும் பாராட்டத் தக்க விடயமாகும்.

எனவே மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் யாழ்ப்பாணத்தின் சுதேசத் தன்மையை எடுத்தியம்பி, மக்களுக்கு அரிய சேவையாற்றிவரும் இந்த "உயிர் நுட்பு" நிறுவனத்தின் உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் எமது சுதேச பொருளாதாரம், உற்பத்தி என்பவற்றைப் பலப்படுத்தலாம். மேலும் எதிர்காலத்தில் இது பாரிய தொழிற்சாலையாக மாற்றம்பெறின் பல வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆகவே இந்த உயிர் நுட்பு நிறுவன உற்பத்திகளைப் பயன்படுத்தி சிறந்த பலனடைவோமாக.

******

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறைமை எல்லா இன மக்களுக்கும் சொந்தமானது இந்தத் தேர்தல் மூலம் தமிழினம் அதனை நிரூபிக்கும்

## அல்வாய்க் கூட்டத்தில் சம்பந்தன்



வடமராட்சி, மார்ச் 22

இறைமை எல்லா இன மக்களுக்கும் சொந்தமானது. தமிழ் மக்கள் தமது இறைமையை இத்தேர்தலில் பயன்படுத்தி தமிழினம் தனித் தேசிய இனம் என்பதை ஆட்சியாளர்களுக்கு மீண்டும் சொல்லிவைக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பருத்தித்துறை, அல்வாய் ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையிலும், அல்வாய் நக்கீரன் சனசமூக நிலைய முன்றிலில் தவயோகநாதன் தலைமையிலும் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டங்களில் இரா. சம்பந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது, எமது போராட்டம் 60 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுள்ளது. ஆரம்பத்தில் ஜனநாயக அரசியல் சாத்வீகப் போராட்டமாக அமைந்திருந்தது. கடந்த 30வருட ஆண்டுகால இப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியது. தற்போது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

ஆயுதப் போராட்டம் வெற்றியடையாமல் போனது துரதிஷ்டவசமானது. ஆயுதப்போராட்டம் நடந்தபோது நாம் அரசியல் தீர்வைப் பெறவாய்பு இல்லாமல் இல்லை. துரதிஷ்டவசமாக அது கைகூடவில்லை. மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை நாம் விரும்பவில்லை. ஆனாலும் எமது உரிமைப் போராட்டம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. தனித் தேசிய இனமான எமக்கு தனியான பாரம்பரியம் வரலாறு, கலாசாரம், மொழி என்பவை எமக்குண்டு. சில மதங்களைப் பின்பற்றி வருகின்றோம்.

வரலாறு ரீதியாக வடக்கு, கிழக்கு தாயகத்தில் நாம் வாழ்கின்றோம். இது எமது தாயகம். தாயகத்தைக்கொண்ட எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. சுயநிர்ணய உரிமை என்பது மனிதனின் பிறப்புரிமை. ஐ.நா.சாசனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உருத்துக்களில் இதுவும் ஒன்று. தேசிய சுயநிர்ணய உரிமைக்கு எமக்கு உரித்துண்டு. இதைநாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இது குறித்து புதிய பாடங்களைப் படிக்கவேண்டிய அவசியம் இல்லை. இதைத்தான் எமக்கு உரிமையானதைத்தான் கேட்கின்றோம். ஆயுதப் போராட்டம் முடிவுற்ற நிலையில் போராட்டமற்ற நிலையில் தேர்தல் நடத்தவும் அதன் தீர்ப்புக்கு ஆட்சியாளர்கள் மதிப்பளிக்க வேண்டிய கட்டுப்பாடு உண்டு. இதுஅரசின் கடமை. மதிப்பளிக்காவிட்டால் மக்களை அணிதிரட்டி சாத்திய வழியில் போராடுவோம் - என்றார். (50-236)

# சுயேச்சைக் குழுக்கள் பணத்திற்காகவே களத்தில் குதித்துள்ளன எனக் கூறுவது பொறுப்பற்றதாகும்

## இப்படிக் கூறுகிறார் தணிகாசலம்பிள்ளை

சுயேச்சைக் குழுக்கள் எல்லாமே பணத்திற்காகவே களத்தில் குதித்துள்ளன என்ற பிரசாரம் எம்மைப் போன்ற நேர்மையானவர்களையும் பாதிக்கின்றது. இவ்வாறு கூறுவது பொறுப்பற்றதாகும். எமது மக்கள் புத்திசாலிகள், எந்தச் சுயேச்சைக் குழுக்கள், எந்தக் கட்சிகள் விலை போயுள்ளார்கள் என்பதை இலகுவாகக் கண்டுபிடித்துவிடுவார்கள். இத்தனை உயிர், உடைமைகளையும் இழந்த எமது மக்களின் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் விற்று துரோகமான அரசியல் நடத்துபவர்கள் நாங்கள் அல்ல என்பதை பொறுப்பாகவும் ஆணித்தரமாகவும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறு கூறுகிறார் சுயேச்சைக் குழு- 10 இன் முதன்மை வேட்பாளர் நா.தணிகாசலம்பிள்ளை

அவர்மேலும் கூறியிருப்பதாவது:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் 22 உறுப்பினர்களைத் தெரிவு செய்து பலமான சக்திகொண்ட அணியை உருவாக்கி விட்டதாக நினைத்தார்கள். நாமும் கூட இதற்குப் பாடுபட்டோம். ஆனால் எமது மக்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் ஏன் உயிருக்கு ஊசலாடிய போதும்கூட இவர்களில் பலர் மௌனமாகவும், பொறுப்பற்ற விதமாகவும் எவருக்கு ஏதோ நடக்கின்றது என்ற போக்கில் வெளிநாடுகளில் உலா வந்தார்கள். நாடாளுமன்ற உறுப்புரிமைப் பதவிக்காகவும், பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்காகவும்,



தான் இவர்கள் பெற்றுக் கொண்டார்களோ என்று அரவணைத்த மக்கள் ஆதங்கப்பட்டார்கள். இன்று கட்சிகளில் இருந்து மக் கள் விரும்பியவர்கள் கூட சில வெளிநாட்டு சக்திகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை இலகுவாக்க வெளியேற்றப்பட்டுள்ளார்கள். இச்செயற்பாடும் பல கட்சிகளை உருவாக்கியுள்ளது. வன்னியில் இருந்த எமது உடன் பிறப்புக்கள் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளார்கள். எமது மக்களின் முதுகெலும்பான கல்வியையும் பொருளா தாரத்தையும் மீண்டும் உயர்வடையச் செய்ய வேண்டிய அவசர அவசிய தேவை எம்முன் உள்ளது. நாம் நலிவடைந்து செல் வோமானால் இலகுவாக அழிக்கப்பட லாம்.

எனது 44 வருடகால கல்விச் சேவையில் கல்வி அபிவிருத்திக்காக கஷ்டப்பட்ட பிரதேசங்களிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் கூட துணிச்சலாக மக்களோடு மக்களாக நின்று செயற்பட்ட விதத்தையும் குறிப்பாக வன்னியில் இருந்த எமது உடன்பிறப்புக்கள் முட்கம்பி வேலிக்குள் இருத்தப்பட்டபோது புத்திஜீவிகளை ஒன்று சேர்த்து பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுத்து உடன் பிறப்புக்களின் நிலைகண்டு மக்கள் தந்த அத்தியா வசிய பொருள்களை ஆட்சியில் இருந்தவர் களை அணுகி கொழும்பில் இருந்து லொறிகளில் ஏற்றி சாதுரியமாக உடன் பிறப்புக்களுக்கு கையளித்ததையும் - பதவியைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் இழந்து மெனிக்பாமில் இருந்த மாணவர்களுக்கு சத்துணவு, பாதணிகள், கற்றல் உபகரணங்கள்கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை ஆசிரியர்களுடன் சென்று க.பொ.த (சா/த) வகுப்புக்களை நடத்தி க.பொ.த (உ/த)வில் 60% மாணவர்களை சித்தி பெற உதவியதையும் கண்ட நலன் விரும்பிகள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என்னை அரசியலில் ஈடுபட்டு, எம்மக்களின் இடைக்கால அவசர அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றித்தருமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றே அரசியலில் ஈடுபட்டுள்ளேன். எம் மக்களுக்கே உரிய சுயகௌரவத்துடன் எக்கட்சியுட னும் சரணாகதியடையாமல் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளோம்.

மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி வீரவசனம் பேசி நாடாளுமன்ற கதிரை பெற்று மக்களுக்குப் பயனற்றவர்களாக இருக்கத் துடிப்பவர்களை இம்முறை மக்கள் அடையாளம் கண்டு கொண்டுள்ளார்கள். எமக்கு மக்கள் தந்துவரும் பெருவாரியான ஆதரவைக் கண்டு பயந்து கீழ்த்தரமான அரசியல் வங்குரோத்து பிரசாரம் நடத்துபவர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். தந்தைசெல்வா போன்று அரசியலில் நேர்மையான கொள்கைகளில் உண்மையாகவே செயற்படுங்கள் மக்கள் ஆதரவு கிடைக்கும்.

சேறு பூசி குறுக்கு வழிகள் மூலம் நாடாளுமன்ற கதிரை செல்ல முயற்சிக்காதீர்கள். அது இனியும் சாத்தியப்படாது. அத்துடன் நீங்கள் நேர்மையாகச் செயற்பட்டு மக்களின் உணர்வுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் கௌரவம் அளித்து மக்கள் பிரதிநிதிகளாக செயற் பட்டால் எம் மக்களின் நன்மைக்காக தேவையான நேரத்தில் ஒற்றுமையாக செயற்படத் தயாராகியுள்ளோம். எமது மக்கள் இம்முறையாயினும் மக்களுக்கு உண்மையாகவே உதவக் கூடியவர்களை இனம் கண்டு விழிப்புடன் வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# கூட்டமைப்பைப் பலப்படுத்துவதன் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்

## வேட்பாளர் அருந்தவபாலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் எம்முன் வந்து நிற்கிறது. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக முதலில் சாத்வீக போராட்டத்தை நடத்தினோம். அது பயனளிக்காததால் ஆயுதப் போராட்டம் பரிணமித்தது. அப் போராட்டமும் புது மாத்தளன் அழிவுடன் மௌனித்துவிட்டது. ஆனால் எமது இலட்சி யங்கள் அடையப்படாமல் அப்படியே உள்ளது. அது மட்டுமல்ல அடக்கு முறைகளும் அவலங்களும் அதிகரித்தே செல்கிறது. இந்நிலை யில்தான் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக முழுப் பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் கைகளில் முழுமையாக வந்துள்ளது. எனவே அதனை நிறைவேற்றுவதற்கான முழுப்பலத் தையும் அளிக்க வேண்டியது தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையாகும். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் வரணியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்றைய தேசிய, சர்வதேசிய களநிலைமைகளுக்கு ஏற்ப எமது உரிமைகள் வென்றெடுப்பதற்கான முயற்சிகளை இராஜதந்திர ரீதியில் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் இந்தியாவையும் நமது நட்பு சக்தியாக மாற்ற வேண்டிய தேவையுள்ளது.

மேற்குலகு மட்டுமல்ல இந்தியாவையும் இணைத்து ராஜபக்ஷ அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் போது தான் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கான நிர்ப்பந்தம் ராஜபக்ஷ அரசுக்கு ஏற்படும்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் தமிழரின் பிரதிநிதியாக முக்கிய பாத்திரத்தை வகிக்க உள்ளது. எனவே அப்பேச்சுவார்த்தை மூலம் எமது தன்னாட்சி அதிகாரத்தை உச்சமாக அடைவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலம் பொருந்தியதாக இருப்பது அவசியம். அதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து கூடுதலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டும்.



அதனை வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் மக்கள் நிறைவேற்றி இதுவரை இம் மண்ணில் செய்யப்பட்ட தியாகங்கள், அர்ப்பணிப்புக்களுக்குரிய பலனைப் பெறவேண்டும்- என்றார். (50)




# சலுகைகளுக்காக, பொய்வாக்குறுதிகளுக்காக வாக்களிப்பது புதிய வகையான அரசியல் அடிமைத்தனத்திற்கே வழிவகுக்கும்

## சுயேச்சைக்குழு வேட்பாளர் கதிர்காமநாதன் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 22

தமிழ் மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெறும் சலுகைகளுக்காவும், பொய் வாக்குறுதிகளுக்காகவும் வாக்களிப்பது புதிய வகை அரசியல் அடிமைத்தனத்திற்கே வழி வகுக்கும் என்பதை உணர வேண்டும். இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேச செயலாளரும், இரண்டாம் வேட்பாளருமான கா.கதிர்காமநாதன் (செல்வம்) நீர்வேலியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலத்தின் தவறான தமிழ்த் தேசிய வாதக் கொள்கைகளால் இடம் பெற்ற சோக நிகழ்வுகள் மக்கள் மத்தியில் கடுமையான அரசியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளன. அதனைப் பயன்படுத்திப் பெரும் பணச் செலவில் சலுகைகளையும் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள்ளையும் வழங்கி வாக்குச் சேகரிக்கும் போக்கு பலமுனைகளிலும் காணப்படுகின்றது. இத்தகைய குறுக்கு வழிகளிலான முயற்சிகளுக்கு மக்கள் இடம் அளிக்கக்கூடாது. தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் விரக்தியை மக்களுக்கான மாற்று அரசியல் மூலம் புதிய பாதையில் பயணிக்க இத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். அத்தகைய தெளிவான அரசியல் வேலைத் திட்டத்துடனேயே புதிய ஜனநாயகக் கட்சி சுயேச்சைக்குழுவாக இத் தேர்தலில் களம் இறங்கி நிற்கின்றது.

தமிழ் மக்களிடையே பல்வேறுபட்ட நிலைகளில் உழைக்கும் மக்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரினதும் அடிப்படை வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி அரசியல் ரீதியில் அணுகி ஆராய்ந்து அதற்கான வழிகளில் செயற்படுத்துவதற்கு தமிழ்த் தேசியவாதக்கட்சிகளும் தலைமைகளும் தயாரில்லை.

அவர்கள் உயர்ந்த இடங்களில் இருந்து தமிழ்த் தேசியம் என்ற உணர்ச்சிகரப் பேச்சுக்கள் மூலம் வாக்குகளை வழமை போன்று பெற்று நாடாளுமன்றம் செல்லவே நிற்கிறார்கள். இத்தகையவர்களால் இனிமேலும் சாதாரண உழைக்கும் தமிழ் மக்களுக்கு எவ்வித விமோசனமும் வரப் போவதில்லை. இதனை உணர்ந்து உழைக்கும் மக்கள் தமது தலைவிதியை மாற்றியமைக்க கூடிய தமக்கான மாற்று அரசியல் பாதையினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதனைப் புதிய ஜனநாயக கட்சியின் சயேச்சைக்குழுவை வெற்றியடையச் செய்வதன் மூலம் சாதிக்கலாம். இச் சந்தர்ப்பத்தை மக்கள் சலுகை அரசியலுக்காகவோ, வாக்குறுதி அரசியலுக்காகவோ அடகு வைத்துவிடக்கூடாது என்பதே எமது கட்சியின் மக்களுக்கான தேர்தல் வேண்டுகோளாகும்.

பொ.முருகேசு தலைமையில் நடைபெற்ற இப் பிரசாரக் கூட்டத்தில் வேட்பாளர்கள் து.சுரேஸ்குமார், ச.தவராசா ஆகியோரும் உரையாற்றினர். 'தேர்தல் வருகிறது' என்னும் வீதி நாடகமும் மக்கள் முன் அரங்கேற்றப்பட்டது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## மார்ச் 21 முதல் 27 வரை

தருபவர் - வித்யா

### மேடம்



இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். கடன் பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். பொழுது போக்கு, கேளிக்கைகளால் சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகளையும், அலைச்சல்களையும் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரிகள், மனைவி வழி உறவுகள், உறவுப் பெண்கள், தாயார், தந்தையார், மருத்துவம் போன்ற வகைகளில் செலவுகளையும், சிரமங்களைச் சந்திக்கலாம். உடல் நலக் குறைபாடுகளாலும் அவதிப்படலாம். அரசு தொடர்பான காரியங்கள், குத்தகைக்குப் பெற மேற்கொண்ட முயற்சிகள் இழுத்தடிக்கலாம். எதிர்ப்புகள், போட்டிகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். லாப ஸ்தானத்தில் குரு இருப்பதால், சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பெரிய மனிதர்களின் அனுசரணையை பெறுவீர்கள். தொழிலுக்காகவோ, மற்ற காரியங்களுக்காகவோ பிறரிடம் கேட்ட கடன் உதவிகள் எளிதில் கிடைக்கும். வீடு, வாகனங்களை மாற்றும் சூழ்நிலை உருவாகலாம். செவ்வாய் பாதகமாக இருப்பதால், நிலம், பூமி தொடர்பான விஷயங்களிலும், சகோதரர்கள் தொடர்பான வகையிலும் தொல்லைகள் உருவாகலாம். மாற்று மதத்தினரால் அனுகூலம், ஆதாயம் பெற வாய்ப்பு உண்டு. ஊக்கம், உற்சாகம் கூடும். எதிர்பாராத பணவரவு உண்டு.

### இடபம்



இந்த வாரம் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். குடும்பத் தில் குதூகலம் அதிகரிக்கும். இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். காத்திருந்தோ, சிரமப்பட்டோ சில வேலைகளை முடிப்பீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் அடைவீர்கள். ஆசைப் பட்டதை வாங்குவீர்கள். இப்போது சுக்கிரனும், புதனும், பல வகையிலும் அனுகூலத்தை தரும். ராசிக்கு அதிபதி உச்சம் பெற்றிருப்பதால், தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மற்றவர்கள் பாராட்டும் வகையில், வியப்படையும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள். விலை மதிப்புப் பொருள்கள் வாங்குவீர்கள். சகோதரிகள் உதவிகரமாக இருப்பர். அரசு காரியங்கள் தங்கு தடையின்றி, விரைவாக முடிவுக்கு வரும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும், மேலிடத்தின் ஆதரவைப் பெறுவர். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். மருத்துவ சிகிச்சை பெறமேற்கொண்ட முயற்சிகளும் நல்ல விதமாக முடியலாம். தந்தை மீதான பாசம் அதிகரிப்பதால், அவர் உங்களுக்காக சில உதவிகளைச் செய்யலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் ஆதாயம் உண்டு. நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். நெடுந்தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். செலவு, அலைச்சல் உண்டு. திடீர் செலவால் மற்றவர்களிடம் கைமாத்து வாங்கலாம்.

### மிதுனம்



இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். நண்பர்களுடன், சக ஊழியர்களுடன் சந்தோஷமான பொழுது போக்குவதில் நாட்டம் செல்லும். வழக்கமான வேலைகளை ஒத்திவைத்து விட்டு, வேறு வேலைகளில் ஈடுபடலாம். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்திகளைச் கேட்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம். தடைபட்ட சில காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரும். சிலர் அதிக வட்டிக்கு வாங்கிய கடனை தீர்க்க, வங்கிகளிலோ, நிதி நிறுவனங்களிலோ குறைந்த வட்டிக்கு கடன் வாங்கலாம். பிள்ளைகள் வழியிலும் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளுக்கு உறவினர்கள் உறுதுணையாக இருப்பர். ஒன்பதாம் இடத்தில் குரு இருப்பதால், எந்தக் காரியத்தையும் சிரமம் இல்லாமல் நடத்திக் கொள்ளும் வகையில், தேவையான பணத்தை புரட்டிக் கொள்வீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். இரண்டாம் இடத்தில் ஆறுக்குடைய செவ்வாய் தொடர்ந்து நீச்ச நிலையில் இருப்பதால், குதர்க்கமாகவும், ஏட்டிக்குப் போட்டியாகவும் பேசுவதைத் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கல்களிலும் கவனம் அவசியம். கூட்டுத் தொழில் விவகாரங்களிலும் சுமூகமான அணுகுமுறையைப் பின்பற்றுவது நல்லது. சனி நாலில் இருப்பதால், தொழில் ரீதியான விஷயங்களில் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### கடகம்



இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக்குறைவு, சபலங்களால் சங்கடம், தடை, தாமதங்கள், வீண் வாக்குவாதங்களால் விவகாரம் போன்றவற்றை சந்திக்கலாம். முன்பின் யோசியாமல் சிலவற்றை செய்து, பின்னர் வருத்தம் அடைவீர்கள். உடல் ரீதியான உபாதைகள், சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். தேவையற்ற பயம் ஆள்கொள்ளும். சுக்கிரன் ஒன்பதாம் இடத்தில் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், மனைவி வழி உறவுகள் மூலம் உதவிகள் கிடைத்தல், விரும்பிய விலை உயர்ந்த பொருள்களை வாங்குதல் போன்ற நல்ல பலன்களைக் காணலாம். சனியும் சாதகமாக இருப்பதால், எடுத்த காரியங்களில் தங்கு தடையற்ற வெற்றி கிடைக்கும். சொந்த பந்தங்களுடன் ஏற்பட்ட சச்சரவுகள் விலகி பாசம், நேசம் அதிகரிக்கும். செலவுகளைக் குறைத்து, வரும் வருமானத்தை நல்ல வழிகளில் சேமிக்க முற்படுவீர்கள். புதன், சூரியன் பாதகமாக இருப்பதால், தந்தை வழியில் எதிர்பாராத செலவுகள் உண்டாகி உங்களைச் சிரமப்படுத்தலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். இளைய உடன் பிறப்புக்களாலும் தொல்லையே. விரய ஸ்தானத்தில் கேது இருப்பதால், மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். காரிய வெற்றி உண்டு. தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்



இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள், உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். மறதியால் அவதியுண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், மனைவி வழி உறவுகளால் நன்மை அடைதல், மாமன், மைத்துனர்கள் அனுசரணை, உதவி, புதிய நண்பர் களின் நட்பு, பழைய நண்பர்கள் சந்திப்பு, எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருதல் போன்ற நல்ல பலன்களைக் காணலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்கிக் குவிப்பதிலும் நாட்டம் செல்லும். ஏஜென்சி தொழில் புரிவோர் ஏற்றம் காண்பர். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பணிபுரிவோர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் இழுபறிகள் காணப்படும். சிலர் தங்களின் பழைய பொருள்களை மாற்றி விட்டு, புதிய பொருள்கள் வாங்கலாம். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சனி, குடும்பத்தில் பிரச்சினைகள் வராமல் இருக்க கடும் வார்த்தைகளைப் பேச வேண்டாம். பிள்ளைகள் விடயங்களிலும் கவனம் அவசியம். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.

### கன்னி



இந்த வாரம் எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். போட்டி, எதிர்ப்பு, தடைகள் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். நண்பர்கள் வட்டமும், வெளிவட்டார தொடர்புகளும் விரும்பும் விதத்தில் அமையும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பெண்கள், சகோதரிகள், மனைவி உறவுகள், தாய், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் தொல்லைகளே அன்றி, அனுகூலம் இல்லை. வாகனங்கள் திடீர் செலவு வைத்து கைப்பணத்தை கரைக்கலாம். விலை மதிப்புமிக்க பொருள்களை வெளியில் எடுத்துச் செல்லும் போது கவனம் அவசியம். தந்தையின் செயற்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். குரு 6ல் இருப்பதால், பெரிய மனிதர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். நான்காம் இடத்தில் ராகு இருப்பதால், சுகம் பாதிக்கப்படும் வகையில் கடும் அலைச்சல்கள் இருக்கும். அதற்கேற்ற ஆதாயம் பெறுவதும் கடினமே. தாயின் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். தடுமாற்றங்கள், குழப்பங்களுக்கு ஆள்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். சிறிய வேலைகளுக்குப் பலமுறை அலையலாம்.

### துலாம்



இந்த வாரம் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். தொழில் ரீதியான அல்லது குடும்ப விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். சாதுர்யமாகச் செயற்பட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள். காரிய ஸ்தானமான பத்தாம் இடத்தில் செவ்வாய் நீச்ச நிலையில் சஞ்சரிப்பதால், வேலை நெருக்கடிகள் தொடரும். வேலை பார்க்கும் அளவிற்கு சில விடயங்களில் பலன் கிடைக்காமல் போகலாம். சக ஊழியர்கள் இடையே கோப தாபங்கள் ஏற்படலாம் என்பதால், பொறுமை அவசியம். குடும்ப உறுப்பினர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். தரகு, தொழில் புரிவோர் கூடுதல் ஆதாயம் பெறலாம். சில காரியங்களில் எதிர்பாராத பணவரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு. அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். அவர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியும். சுக்கிரன் ஆறாம் இடத்தில் இருப்பதால், கணவன் மனைவி உறவில் மற்றவர்களால் பிரச்சினை வரலாம் என்பதால் கவனம் அவசியம். பயணங்களிலும் எச்சரிக்கை அவசியம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றுவர்.

### விருச்சிகம்



இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவு செய்யலாம். உறவினர்கள் வகையில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆளாகலாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை எதிர்கொள்ளலாம். சில பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். ராசிக்கு அதிபதியான செவ்வாய் நீச்ச நிலையில் தொடர்வதால், ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும். சிறு பிரச்சினைகளை கூட உடனுக்குடன் கவனிப்பது நன்மை தரும். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். நிலம், பூமி விடயங்களும் விரும்பும் வகையில் அமைய வாய்ப்பு இல்லை. இரண்டாம் இடத்தில் ராகு இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். பிறர் சொல்லும் வார்த்தைகளை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். கடும் வார்த்தைகளை உபயோகிப்பதைத் தவிர்க்கவும். மற்றவர்களுக்காக உழைத்து விட்டு, நீங்கள் ஆதாயம் பெறாமல் தவிக்கலாம். ஐந்தாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், வாங்க நினைத்த ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். சகோதரிகள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். திட்டமிடாத சில காரியங்களிலும் வெற்றி காணலாம். சூரியன், புதன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை வழிகளில் இடர்பாடுகளே அன்றி, ஆதாயம் இல்லை. பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான அனுபவங்கள் உண்டு.

### தனுசு



இந்த வாரம் புதுஉத்வேகம், தெம்புடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பண வரவுகளைப் பெறலாம். நண்பர்களுடன், உறவினர்களுடன் சந்தோஷமாக பொழுது போக்கும் வாய்ப்பு உருவாகலாம். உறவினர்கள் தொடர்பான வேலை களுக்காக அலைய நேரிடலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல நேரிடலாம். தாய் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். சிலர் தொழில் அபிவிருத்திப் பயணங்களும் செல்லலாம். அதே நேரத்தில், ஓய்வின்றி பரபரப்பாக செயற்படும் சூழ்நிலை உருவாகலாம். புதியவர்களின் நட்பு உருவாகலாம். எட்டாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். சகோதரர்கள், பங்காளிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்கள் தள்ளிப் போகலாம். சனி பத்தில் இருப்பதால், தொழில் ரீதியாக கடும் நெருக்கடிகளைச் சந்திக்கலாம். அதிக நேரம் அதற்காக செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். திடீர் பயணங்கள் செல்லலாம். எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்

### மகரம்



இந்த வாரம் குடும்பத்திற்குத் தேவையான பொருள்கள் வாங்குதல், பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுதல், உறவினர்களை உபசரித்தல், கட்டண மிகுதிகளை செலுத்துதல் போன்றவற்றுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். மற்றவர்களின் நிர்பந்தங்களுக்கு ஆள்படலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். பெண்களால் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். முன்னேற்றகரமான சில திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் திருப்தி, சந்தோஷம் தரும் வகையில் அமையும். அவர்களின் தேவைகளை நிறைவேற்றவும், அவர்களை திருப்திபடுத்தவும் கணிசமான தொகையை செலவு செய்யலாம். பெண்கள், சகோதரிகள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி பெறுவீர்கள். பொழுது போக்கு உல்லாச விடயங்களால் அடிக்கடி சந்தோஷம் அடையும் சூழ்நிலை உருவாகும். மனைவி வழி உறவுகள் உதவி செய்யலாம். அரசியல் தொடர்புடையவர்கள் மூலம் ஆதாயம் பெறலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். குரு சாதகமாக இருப்பதால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களால் சாதிக்க முடியாத காரியங்களையும், நீங்கள் நைசாகப் பேசி சாதிப்பீர்கள். ஏழாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், எதிலும் வேகம் காட்டாமல் பொறுமையாக செயற்படுவது நல்லது. அலைச்சல், திரிச்சல் உண்டு. கடன் வசூலாகும்.

### கும்பம்



இந்த வாரம் எதிர்பாராத சம்பவங்கள் நடக்கலாம். மதிப்பு, கௌரவத்தை மேம்படுத்தும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நெடுநாள்களாக இழுத்தடித்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். உங்களின் கோபம், வேகத்தை அதிகரிக்கும் வகையில் சிலர் நடந்து கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். அஷ்டமத்தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். எந்தக் காரியத்தையும் சிரமம் இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்பதால், யோசித்து, நிதானித்து செயற்படுவது நன்மை தரும். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். இரண்டாம் இடத்தில் சுக்கிரன், புதன் இருப்பதால் குடும்பத் தேவைகளை சிரமம் இல்லாமல் நிறைவேற்றிக் கொள்வீர்கள். புதிய பணவரவுகளால் பொருளாதார நிலையில் மேம்பாடு காணலாம். உடன் பிறந்த சகோதரிகள், மனைவி வழி உறவுகளால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். செவ்வாய் ஆறில் இருப்பதால், உடன் பிறந்தவர்கள் உங்களின் பேச்சைக் கேட்டு நடந்து பெருமை சேர்ப்பர். அவர்களுக்கு நீங்கள் நல்ல யோசனைகள் சொல்லலாம். வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பங்களைக் காணலாம்.

### மீனம்



இந்த வாரம் செலவுகளையும், ஆதாயமில்லாத அலைச்சல்களையும் சந்திக்கலாம். சிலரிடம் நீங்கள் கடன் வாங்கலாம் அல்லது சிலருக்கு கடன் கொடுக்கலாம். பல நாள்களாக சந்திக்க நினைத்த சிலரைச் சந்திக்கலாம். மன ஊக்கத்தை, உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். ஏழில் சனி இருப்பதால், ஜீவன காரிய விடயங்கள் திருப்தி தரும் வகையில் இருக்காது. இதைச் செய்யலாமா அல்லது அதைச் செய்யலாமா என, மனம் அலைபாயும். குடும்பத்தில் தம்பதியரில் ஒருவரின் உடல் நலக்குறைவால் மற்றவர் அவதிப்படலாம். வீண் வம்பு, பிடிவாதங்களாலும் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். வந்த வேகத்தில் பணம் கரைவதால், சேமிப்பே இல்லாத சூழ்நிலை உருவாகலாம். லாப ஸ்தானத்தில் ராகு இருப்பதால், மாற்று மதத் தினர் உதவிகரமாக இருப்பர். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் அனுகூலம் உண்டு. ஜென்மத் தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால், சுய தேவைகளை நிறைவேற்றவும், சுப போகங்களுக்காகவும் கணிசமான தொகையை செலவு செய்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். சூரியனும் அங்கு சஞ்சரிப்பதால், கோபம், வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கலாம். பொறுமை அவசியம். இரண்டு அதிபதியான செவ்வாய் நீச்சம் பெற்ற நிலையில், இருப்பதால் பணவரவுகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கடனாகக் கொடுத்த பணம் வராமல் இழுத்தடிக்கலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அவல வாழ்வு தொடராமல் இருக்க கூட்டமைப்பின் அரசியல் பலத்தை உறுதிசெய்வோம்

## பேராசிரியர் சிவசந்திரன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 22

எமது மக்களின் அவலவாழ்வு தொடராமல் இருப்பதற்கு எங்களுக்கான அரசியல் பலத்தை பொருத்தமானவர்களைக் கொண்டு உறுதிசெய்ய வேண்டிய தேவை அனைவரின் கைகளிலுமே உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் பேராசிரியர் இரா.சிவசந்திரன்.

யாழ். பல்கலைக்கழக முதுகலைமாணி மாணவர்களுடன் தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பில் யாழ். மாவட்டத் தேர்தல் பற்றி மாணவர்களுக்கு அவர் அளித்த விளக்கத்தின்போது மேற்கண்டவாறு தெரிவித்ததார்.

அங்கு அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில் தெரிவித்தவை வருமாறு-

2009இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் எமது மக்கள் மிகப்பெரிய மனித அவலத்தை - உலகத்தில் எங்கும் நிகழாத இடப்பெயர்வினைச் சந்தித்தனர். இன்னமும் அவர்கள் அவலத்திலிருந்து மீள முடியாதவர்களாகவே பெயரளவில் உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

போரின் வெற்றியையும் தமிழ் மக்களின் இன அழிப்பையும் காட்டிப் பெருமித அரசியல் நடத்தும் மஹிந்த அரசுக்கு எம் மக்கள் கை, கால்களை இழந்த, உடன் பிறப்புக்களை இழந்த, பெற்றோரையிழந்த, பிள்ளைகளையிழந்த, சொத்துக்களையிழந்த துன்ப, துயரங்கள் பிரசார யுக்திகாவே பயன்படுகின்றன. வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டுமென்பது அனைவரின் விருப்பாக உள்ளது. ஆனால் ஏ-9 வீதியோரங்களில் ஓரிரு தகரக் கொட்டில்களிலேயே மக்களைக் காணமுடிகிறது. இன்னமும் மக்களைப் போகவிடாத பகுதிகளே அதிகம். எதுவித இழப்பீடுகளும் இதுவரை வழங்கப்படவில்லை. இவற்றிலிருந்து எமது மக்களை மீளச்செய்வதே தமிழ் அரசியலில் இறங்கியுள்ள எமது கடமையாகும்.

அதேபோல் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் இருபது வருடங்களுக்கு மேலாக வெவ்வேறு இடங்களில் முடக்கப்பட்டு அவர்களின் திறமைகள், முயற்சிகள் அடக்கப்பட்டுள்ளன. 20 வருடங்களாக மீள்குடியேற்றம் செய்யமுடியாது அல்லலுறுகின்றார்கள். ஒவ்வொரு தேர்தல்களின்போதும் உறுதிகள் வழங்கப்படு கின்றன. இதனைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் எம்மால் காணமுடிந்தது.

இன்று எம்மக்களுக்கான அபிவிருத்தி சரியானதிட்டமிடலற்றநிலையில் முன் னெடுக்கப்படுவதினை காணமுடிகிறது. எம்மவர்களின் நிலைத்த அமைதியான வாழ்வை நிர்ணயம் செய்வதாக இவை அமையவேண்டும். எல்லோராலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது. எங்களுக்கான அபிவிருத்திக்கென ஒரு கொள்கை உண்டு. அபிவிருத்தியென்றால் என்னவென்ற தெளிவு வேண்டும். அந்தவகையில் மக்களுக்கான அபிவிருத்தி என்பது மக்களின் வாழ்வியல், பண்பாடு என்பவற்றை மாசுபடுத்தாததாக - அவர்களின் மத ஒழுக்காற்று நம்பிக்கைகளுக்கு மதிப்பளிப்பதாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசியலில் கல்வியாளர்கள் தேவை என்பதை நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள். உங்கள் அனைவரின் ஒட்டுமொத்தமான ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எனக்கும் உண்டெடன்பதை அனைவருமே உணர்த்தியுள்ளனர். அதனை உறுதிப்படுத்துவதற்கு எல்லோரும் இணைந்து வாக்களிக்கவும், மக்களை வாக்களிக்கத் தூண்டவும் வேண்டும் என்றார். (50)




# எமது மக்களை ஏமாற்றுவதே பலரின் அரசியல் மூலதனமாகவுள்ளது

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 22

எமது மக்களின் வாக்குகளை அபகரிக்க வரும் நபர்கள் இன்னமும் மக்களை ஏமாற்றுவதை மட்டுமே தங்களது அரசியல் மூலதனமாகக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ். மாநகரசபையின் மகளிர் தின நிகழ்வுகள் கடந்த 12 ஆம் திகதி மாநகரசபை மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இங்கு உரை நிகழ்த்திய அமைச்சர், கல்வி, அரசியல், தொழில்நுட்பம் உட்பட அனைத் துத் துறைகளிலும் பெண்களின் சமநிலை பேணப் பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் கூடியிருந்த யாழ். மாநகர சபைப் பணியாளர்களை நோக்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இங்கு பணியாற்றுகின்ற பணியாளர்கள் அனைவரும் ஒழுக்கம் மற்றும் நேரத்தைப் பின்பற்றி நல்ல முறையில் பணியில் ஈடுபடவேண்டும். தற்போது ஜனநாயகச் சூழ்நிலை பேணப்படுவதால் இதில் எவரும் அஞ்சத் தேவையில்லை. வழங்கப்படுகின்ற கடமைகளைச் சரியாகவும் நிறைவாகவும் அதேநேரம் சேவை மனப்பான்மையுடனும் செய்வதே எல்லோருக்கும் நன்மை பயக்கும் என்று தெரிவித்தார்.

எமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எமது மக்களும், எமது மக்களின் தலைவர்கள் எனக்கூறிக் கொள்பவர்களும் சரிவரப் பயன்படுத்தத் தவறியமையினாலேயே எமது மக்கள் இந்தளவிற்கு இழப்புக்களைச் சந்தித்துள்ளனர் என்பதை உணர்த்திய அமைச்சர் டக்ளஸ், எமது மக்களின் வாக்கு களை அபகரிக்க வரும் நபர்கள் இன்னமும் எமது மக்களை ஏமாற்றுவதை மட்டுமே தங்களது அரசியல் மூலதனமாகக் கொண்டிருக்கின்றனர் எனவும் கவலை தெரிவித்தார். (50)

# எனது சகோதரர் மகேஸ்வரன் போன்று நானும் அர்ப்பணிப்புடன் மக்களுக்குச் சேவை புரிவேன்

## வல்வெட்டித்துறையில் வைத்து துவாரகேஸ்வரன்



யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தல் மூலம் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். எனக்கும் எனது கட்சியின் வேட்பாளர்களுக்கும் வாக்களித்து அந்த மாற்றத்தைக் காணலாம். என்னை வெற்றி பெறச் செய்வதன் மூலம், எனது சகோதரனைப் போல் தமிழ் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முடியும். மக்களுக்குச் சேவையாற்ற நான் தயாராக இருக்கிறேன்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மகேஸ்ரனின் சகோதரரும் யாழ்.மாவட்ட ஐ.தே.க. வேட்பாளருமான தியாகராஜா துவாரகேஸ்வரன் கூறினார்.

சுயநல அரசியல் வாதிகளுக்கு வாக்களித்துவிட்டு தங்களது தேவைகளை நிறைவேற்ற தென்னிலங்கை அரசியல் வாதிகளை நாடும்நிலை மாறவேண்டும் என்றும் துவாரகேஸ்வரன் தெரிவித்தார், கடந்த 18 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் தொடர்பாக மக்களை விழிப்பூட்டும் மக்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

சேவையாற்ற முடியாத வாய் வீரருக்கு வாக்களிக்காது செயல் வீரருக்கு யாழ். மக்கள் வாக்களிக்க வேண்டும். மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். அதனால் இம்முறை அவர்களுடைய வாக்கைத் தங்கள் மத்தியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடியவருக்கே வழங்குவார்கள். அரசகரும மொழிகளில் ஒன்றான சிங்கள மொழியில் தேர்ச்சியில்லாத தமிழ்த் தலைவர்களால் எந்தக்காலத்திலும் இனப்பிரச்சினைத் தீர்விலும், அபிவிருத்திப் பணிகளிலும் பங்காற்ற முடியாது.

எனது சகோதரர் மகேஸ்வரனைப் போலச் சகோதர மொழியில் செயலாற்ற என்னால் முடியுமென மக்கள் நம்புகின்றனர். ஆகவே எதிர்வரும் 8ஆம் திகதி அதற்கான ஆணையை எனக்கு வழங்கவுள்ளனர். கடந்த காலங்களில் கொழும்பு மாவட்டத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியில் தெரிவாகிய எனது சகோதரர் மகேஸ்வரன் மற்றும் மனோ கணேசன் ஆகியோரே பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துச் செயற்பட்டபோது அமரர் ரவிராஜ் தவிர்ந்த ஏனையவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சுகபோகம் அனுபவித்துக் கொண்டு வேடிக்கை பார்த்தனர் - என்றார். (50)

# தமிழீழம் என்பது எமது தாயகத்தின் பெயர்; அது தனிநாடு என்று அர்த்தப்படாது

## நல்லூர்க் கூட்டத்தில் சீ.வி.கே. சிவஞானம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

தமிழீழம் என்பது எமது தாயகத்தின் பெயர். அதற்குத் தனிநாடென்பது அர்த்தமல்ல. தனித்தமிழீழம் என்பதுதான் தனிநாடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சீ.வி.கே. சிவஞானம்.

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் முன்றிலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-


1977 இல் இடம்பெற்ற தேர்தலைப் போன்று இந்தத் தேர்தலும் முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழ் மக்கள் தங்களின் பாதை எது என்பதைச் சரியாகச் சிந்தித்து செயற்பட வேண்டிய தருணம் இது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது கோட்பாட்டைக் கைவிடப் போவதில்லை. சுயநிர்ணய அடிப்படை என்ற நிலையில் இருந்து நாங்கள் விலகவில்லை. தமிழீழம் என்பது எமது தாயகத்தின் பெயர். தனி நாடென்ற அர்த்தமல்ல. தனித்தமிழீழம் என்பதுதான் தனி நாடாகும். இதனைப் புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்துகொண்டும் புரியாதவர்களாக மறுப்பதுதான் ஆச்சரியமாகும்.

நீண்டகாலமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்த்தமுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் அவசரகாலச் சட்டத்தை ஆயுதமாக பயன் படுத்தி வருகிறார்கள். இந்தச் சட்டத்தை ஆதரித்து வந்த கட்சிகள் இன்று உங்களுக்காக நாங்கள் அனைத்தையும் செய்து தருவோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே அன்றும் சரி இன்றும் சரி அந்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்து வருகின்றது.

வடக்கு - கிழக்கு இணைந்ததே எமது பிரதேசம். எங்களின் வழிகாட்டியாக கிழக்கு எமது தலைமையாக இருக்க வேண்டும் என்பதை சம்பந்தன் அவர்களின் தலைமையை ஏற்று நாங்கள் செயற்படுகின்றோம். தமிழ் மக்களின் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதையும் தமிழ் மக்களின் விடிவுக்காகப் பேச வேண்டியவர்கள் தேசியக் கூட்டமைப்பினர் என்பதையும் உலகிற்கு உணர்த்தக் கிடைத்துள்ள உறுதியான சந்தர்ப்பம் இதுவாகும்.

எனவே தமிழ் மக்களின் கட்சி என்றவகையில் ஒவ்வொரு தமிழரும் தமது வாக்குகளை வீட்டிற்கு வழங்க வேண்டும். ஆன்மீகத்தில் வீடு என்பது மோட்சத்தைக் குறிப்பது. இந்த வீடுதான் தமிழ் மக்களின் விடிவுக்கானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (111)



நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான சீ.வி.கே.சிவஞானம், எக்ஸ்.குலநாயகம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்துக்கு திரண்டிருந்த ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் - லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரீட்சைக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பாடரீதியான வினாத்தொகுப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## வணிகக் கல்வி | பகுதி - II

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

### வணிகத்தின் அறிமுகம்

01. 01) உற்பத்திகளைப் பொதுவாக ஒன்றில் விவசாயத்துறைகள், கைத்தொழில்துறைகள், சேவைத் துறைகள் அல்லது முதனிலைக் கைத்தொழில்கள், இரண்டாம் நிலை கைத்தொழில்கள், மூன்றாம் நிலை கைத்தொழில்கள் எனப் பாகுபடுத்த முடியும்.

மேலே கூறப்பட்ட பாகுபாட்டின் சகல உப பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதாக தனித்தனியாக இரண்டு பூரணமான பாய்ச்சல் அட்டவணைகளைத் தயாரிக்கு மாறு நீர் கேட்கப்படுகின்றீர்.

02) ''கடந்த காலத்துடன் ஒப்பிடும்பொழுது தற்கால வணிகங்கள் வேறுபட்ட சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளன.'' அச்சவால்கள் யாவையென விளக்குக.

03) பண்டங்களுடன் ஒப்பிடும்பொழுது சேவைகளின் தனிப்பட்ட சிறப்பியல்புகளை உதா ரணங்கள் தந்து விளக்குக.

04) ''வணிக நிறுவகங்கள் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டிருத்தல் கூடும்.'' அத்தகைய நோக்கங்களுள் ஆறு நோக்கங்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

05) பொருத்தமான உதாரணங்கள் தந்து தேவைகளையும் விருப்பங்களையும் ஒப்பிட்டு வேறு படுத்திக்காட்டுக,

06) உபயோகத்தின் அடிப்படையில் பண்டங்களை வகைப்படுத்தும் பாய்ச்சற் கோட்டுப்படம் ஒன்றை வரைக.

07) வணிகம் ஒன்றின் ஆறு பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

08) எடுத்துக்காட்டுக்கள் தந்து முதனிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, உற்பத்திகளை விளக்குக.

09) ''கைத்தொழில்களைப் பிரதேச ரீதியில் அபிவிருத்தி செய்தல் அரசாங்கத்தின் கொள்கை ஆகும்.'' இக் கொள்கைக்கு ஏதுவான காரணங்களை விளக்குக.

10) வணிகத்தின் பரிணாம வளர்ச்சியிலான முக்கியமான கட்டங்கள் எவையெனக் குறிப் பிட்டு அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

11) பின்வருவனவற்றை விளக்குக.
அ. நேர் உற்பத்தி ஆ. நேரில் உற்பத்தி
இ. வேலையில் தனித்துறைப் பயிற்சி (Job Specialization)

12) ''கடந்த சில ஆண்டுகளாக இலங்கையின் கைத்தொழில் துறையில் பின்னடைவு ஒன்று காணப்பட்டது.'' இப்பின்னடைவுக்கான காரணங்கள் யாவை?

13) வணிகங்களை வகைப்படுத்தும் அடிப்படைகளைக் குறிப்பிட்டு அவை பற்றிச் சுருக்க மாக விளக்குக.

### வணிகச் சூழல்

02. 01) வணிகத்தின் பேரண்டச் சூழலின் பிரதான விசைகளைப் பெயரிடுக.

2) வணிகர் ஒருவர் பேரண்டச் சூழலைக் கற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.

03) அ. இன்று வணிகத்துறையில் (Field of Business) பல எண்ணிக்கையான புதிய போக்கு களைக் காணமுடியும். அவ்வாறான மூன்று முக்கிய போக்குகளைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்குக.

ஆ. 1. வணிக ஒழுக்கம் (Business Ethics) என்ற பதத்தின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாதென விளக்குக.

2. வணிக இலக்குகளையும் (Goals) குறிக்கோள்களையும் (Objectives) விளக்கி, ஒன்றுக்கொன்று அவற்றுக்கிடையில் உள்ள தொடர்புடைமைகளை விளக்குக.

04) வணிகம் ஒன்றின் சிற்றினச் சூழல் விசைகளைக் குறிப்பிட்டு அவற்றைத் தனித்தனியாக விளக்குக.

05) ஒரு வணிகத்தின் பேரணடச் (புறச்) சூழலிற் காணப்படும் பிரதான விசைகளையும் அவற்றின் உபகூறுகளையும் குறிப்பிடுக.

06) வணிக நிறுவகங்கள் ஏன் தமது சூழல் பற்றிக் கற்றிருத்தல் வேண்டும் என விளக்குக.

07) நிறுவகமொன்று குறித்த நன்மைகள் சிலவற்றைத் தனது உடைமையாளர்களுக்கு மட்டு மன்றித் தனது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சமுதாயம் ஆகியவற்றுக்கும்கூட வழங்கு தல் வேண்டும் என்று கூறப்படுகிறது. மேற்குறித்த மூன்று தரப்பினர்களுக்கும் தனித் தனியே எந்நன்மைகள் அளிக்கப்படுதல் வேண்டுமென விவரிக்குக.

08) சமூகப்பொறுப்பு (Social Responsibility), வணிக ஒழுக்காறு (Business Ethics) என்ப வற்றால் நீர் கருதுவது யாது?

09) சந்தைகளை உலக்மயமாக்குதலின் நேரான (Positive) விளைவுகளையும் எதிரான (Negative) விளைவுகளையும் சுருக்கமாக விளக்குக.

### அரசும் வணிகமும்

03. 01) ''சமுதாயம், சூழல் என்பவற்றின் மீதான வணிகங்களின் சமூகப் பொறுப்பென்பது இன்று விமர்சனத்திற்குரிய விடயமாக மாறி வருகின்றது.'' விளக்குக.

02) அரசாங்கம் வணிகங்கள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய பல்வேறு வழிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

03) பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.
1. ISO 9001 - 2000
2. அரச பணக்கொள்கை.
3. நுண்ணறிவுச் சொத்து.

04) செல்வி கேசிக்கா மிக அண்மையில் சிகை அலங்காரம் தொடர்பாக பயிற்சி நெறி ஒன்றை நிறைவுசெய்துள்ளார். அவர் சொந்தமாக ஒரு சலூனை ஆரம்பிக்க விரும்புகிறார். இவர் வணிக உலகம் பற்றிப்போதிய அறிவைக் கொண்டிராததுடன் முதலீடு செய்வதற்குப் போதிய பணத்தையும் கொண்டிருக்கவில்லை. இவரின் நண்பியான தனு, அனுபவம் வாய்ந்த கணக்காளராக இருப்பதுடன் இவ்வணிகத்தில் முதலீடு செய்வதற்குப் போதிய அளவு பணத்தையும் கொண்டுள்ளார். கேசிக்கா நண்பி தனுவுடன் பங்குடைமை ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகிறார்.

தனுவுடன் ஒரு பங்குடைமையை உருவாக்குமிடத்து கேசிக்கா அடைந்துகொள்ளக்கூடிய அநுகூலங்களும் பிரதிகூலங்களும் யாவை?

ஆ. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
1. இலங்கைத் தேசிய தர விருது.
2. அரச இறைக்கொள்கை.
3. நுகர்வோர் விவகார சபை.
4. தனியார் வணிகங்கள் மீது அரசாங்கம் எவ்வழிகளில் செல்வாக்குச் செலுத்த முடியும் எனச் சுருக்கமாக விளக்குக.

05) அ. இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்புக்கென விதிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள அதிகாரச் சட்டங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

ஆ. SLS நற்சான்றுக் குறியீட்டின் மூலம் நுகர்வோர் ஒருவருக்கும் வணிகமொன்றிற்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் யாவை?

### வணிக அமைப்புக்கள்

04. 01) வரையறுத்த கம்பனி ஒன்றின் சட்ட ஆளுமை (Legal Entity) என்ற எண்ணக்கருவின் கருத்தை விளக்குக.

02) ஒரு வரையறுத்த கம்பனியின் ஏனைய இரண்டு சட்டரீதியான சிறப்பியல்புகளை விளக்குக.

03) அங்கீகாரம் வழங்கியவர் (Franchiser), அங்கீகாரம் பெற்றவர் (Franchisee) ஆகியோருக்கு அங்கீகார வணிகத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளைத் தனித்தனியே விளக்குக.

04) அ. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் ஒரு கம்பனி யைப் பதிவு செய்வதற்காகக் கம்பனிப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங் கள் எவை?

ஆ. வரையறுத்த தனியார் கம்பனியுடன் ஒப்பிடும்போது வரையறுத்த பொதுக் (பட்டியற் படுத்தப்பட்ட) கம்பனியின் (PLC) அநுகூலங்கள் எவை?

05) முதலீட்டாளர் குழுவொன்று குறித்தவொரு வணிகக் கருத்தை நடைமுறைப்படுத்த உத்தேசித் துள்ளது. ஒரு பங்குடைமையையா அல்லது வரையறுத்த தனியார் கம்பனியையா?

06) தனியுடைமை வணிகமொன்றுடன் ஒப்பிடும்பொழுது பங்குடைமை ஒன்றின் மூன்று அநுகூலங்களையும் மூன்று பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

07) வரையறுத்த பொதுக்கம்பனிகள் வணிகங்களின் விரிவாக்கத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என ஆராய்க.

08) தனியுடைமை, பங்குடைமை, வரையறுத்த தனியார் கம்பனி, வரையறுத்த பொதுக் கம்பனி, கூட்டுறவுச்சங்கம் என்பவற்றைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஒப்பிட்டு வேறு படுத்திக் காட்டுக. உடைமை, தொடர்ந்தியங்கு நிலை, பொறுப்பு, சட்ட ஆளுமை (உமது விடையை ஓர் அட்டவணையிற் காட்டுக)

09) பங்குடமை வணிகம் தொடர்பில் ''பரஸ்பர முகவராண்மை'' (Mutual Agency of Partnership) எனும் எண்ணக்கருவை விளக்குக.

10) பங்குடைமை ஒன்றின் ஆறு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

### தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம்

05. 01) தகவலை வகைப்படுத்தக்கூடிய ஆறு அடிப்படைகளைப் பெயரிடுக.

02) அந்த அடிப்படைகளில் ஏதாவது இரண்டினை விளக்குக.

03) இன்றைய போட்டி மிகுந்த வணிகச்சூழலில் தகவல் முறைமையின் வகிபாகத்தை மதிப்பிடுக.

04) 1. ஒரு சிறந்த தகவலின் ஆறு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
2. நிறுவனம் ஒன்றின் தகவல் முறைமை ஒன்றினை வரிப்படங்கள் மூலம் எடுத்துக் காட்டுக.

05) ''தகவல்களுக்கும் தரவுகளுக்கும் ஒரு கவர்ச்சிகரமான மூலமாக இணையத்தளம் இருக்கும் என அனுபவமுள்ள வணிகர்களுக்குத் தெரியும்.'' கருத்துரைக்குக.

06) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
1) உலக வெப்தளம் (WWW)
2) முகாமைத் தகவல் முறைமைகள் (MIS)
3) பல் ஊடகம் (Multimedia)

07) சிறந்த தகவலின் ஆறு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

08) ஒரு நிறுவகத்திலான தகவல் முறைமையின் மூலக்கூறுகளையும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் வரைபடமொன்றின் வாயிலாகக் காட்டுக.

09) செய்பணி மட்டத்தில் (Operational Level) பயன்படுத்தப்படும் தகவல் முறைமையைக் குறிப்பிட்டு விளக்குக.

### வியாபாரம்

06. ''உலக சந்தையில் இலத்திரனியல் வர்த்தகத்தின் (E-Commerce) பயன்பாடு அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது.''

01) ஒரு இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல் எவ்வாறு நடைபெறுகின்றதென்பதை விளக்குக.

02) இறக்குமதியாளர் ஒருவர் இலத்திரனியல் வர்த்தகத்தின் ஊடாகக் கொடுக்கல்வாங்கல் களைச் செய்யும்போது பெற்றுக்கொள்ளக்கூடிய அநுகூலங்கள் யாவை?

03) வியாபார நிலுவை, வர்த்தக மாற்று விகிதம், திரண்ட (சென்மதி) நிலுவை ஆகியவற்றைத் தனித்தனியாக வரையறுக்குக.

04) பின்வரும் ஒவ்வொன்றுக்கும் நீர் சிபாரிசு செய்யும் போக்குவரத்து முறைமையைக் காரணங் களுடன் குறிப்பிடுக.
1. தயிர் - அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்புக்கு
2. புதிய மலர் - நுவரெலியாவில் இருந்து கொழும்புக்கு
3. புதிய கடல் மீன்கள் - கொழும்பில் இருந்து லண்டனுக்கு

05) பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.
1) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் (Certificate of Origin)
2) பந்தித்த பண்டகசாலை
3) ஐரோப்பிய சங்கம்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்:- திரு.R.ஜனதன் B.BA (Hons),
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
தொ.பே.இல: 071-4273035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகக் கல்வி, பகுதி II: தொடர்ச்சி....

05. 06) ''இலங்கையில் சிறப்புச்சந்தைகள் (Super Markets) விரிவாக்கமடைந்து வருகின்றபோதும் மரபுரீதியான வாரச்சந்தைகள்/ பொதுமக்கள் சந்தைகள் என்பவற்றின் பிரபல்யம் குன்றவில்லை'' ஆராய்க.

07) உலக வியாபார நிறுவகத்தின் (World Trade Organization) கடமைப் பங்கை விளக்குக.

08) அ. இலத்திரனியல் வர்த்தகம் (E-Commerce) எனப்படுவது யாது?

ஆ. இலத்திரனியல் வர்த்தகத்தினால் வணிக நிறுவகமொன்றுக்குக் கிடைக்கும் நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக.

09) அ. இறக்கியேற்றுமிட வியாபாரம் (Entrepot Trade) என்பதாற் கருதப்படுவது யாது?

06. 09) ஆ. ஒரு நாடு சர்வதேச வியாபாரத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் யாவை?

10) கைக்காசுக்குக் கொள்வனவு செய்தல் (Buying) குத்தகைக்கு எடுத்தல் (Leasing) என்பவற்றை ஒப்பிட்டு வேறுபாட்டைக் காட்டுக.

11) 1. இலங்கையில் சில்லறை வியாபாரத்திற் காணப்படும் புதியபோக்குகளும் அபிவிருத்திகளும் யாவை?

2. ''மரபு ரீதியாக நடைபெற்று வந்த வியாபாரச் செயற்பாடுகள் தற்பொழுது மின் வணிகத்தினால் (E - Commerce) பெரிதும் கையேற்கப்பட்டு வருகின்றன.'' தெளிவுபடுத்துக.

3. இலங்கையின் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் அமுல்படுத்தி வரும் ஊக்குவிப்புக்கள் யாவை?

4. வணிகர்கள் சிலர் உள்ளூர்ச் சந்தையிற் புகுவதைக்காட்டிலும் வெளிநாட்டு சந்தைகளிற் புகுவதிலேயே ஆர்வம் கொண்டுள்ளனர். இதற்கான காரணங்கள் யாவை?

12) ஏற்றுமதி வியாபாரம் இலங்கைக்கு ஏன் முக்கியமானது? ஏற்றுமதிகளை மேலோங்கச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ள நடவடிக்கைகள் யாவை?

13) வணிகச் செயற்பாடுகளின் வினைத்திறனையும் பயனுறுதிப்பாட்டையும் மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நவீன தொடர்பாடல் முறைகளையும் கருவிகளையும் குறிப்பிட்டு அவை பற்றி விவரிக்கவும்.

14) ''இலங்கையில் நுகர்வோர் மத்தியில் சிறப்புச்சந்தை முறைமை (Super Market System) பிரபல்யம் பெற்று வருகிறது.'' இவ்வாறு அவை பிரபல்யம் பெற்றுவருவதற்கான காரணங்கள் யாவை?

15) வெளிநாட்டிலிருந்து ப்ண்டங்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளரொருவரினால் அனுசரிக்கப்பட வேண்டிய நடைமுறையைச் சுருக்கமாக விளக்குக.

16) பின்வருவனவற்றை விளக்குக.

அ. ஏற்றுமதி ''விசா'' அனுமதிப்பத்திரம் (Export Visa)

ஆ. உலக வர்த்தக அமைப்பு (W.T.O)

இ. சென்மதி நிலுவை

17) தனியார் கம்பனி ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு வணிகத்தை வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இம்மாற்றத்தின் நன்மைகள் யாவை?

18) வணிக ஒழுங்கமைப்பின். ஒரு வடிவமாக வியாபார அங்கீகாரம் பெற்ற கம்பனிகள் விரிவடையும் போக்குக் காணப்படுகிறது. இதற்கான காரணங்களைத் தருக.

19) பொது உடைமையின் (Public Ownership) ஆறு அநுகூலங்களைக் குறிப்பிடுக.

1. ''எப்பொருளாதார முறைமையின் கீழும் கூட்டுறவுச்சங்கங்களைத் தாபித்துப் பயனுறுதி வாய்ந்த வகையில் செயற்படுத்தி வரமுடியும்'' விளக்குக.

2. பணத்தின் இற்றை வரையான பரிணாம வளர்ச்சியின் பிரதான கட்டங்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

20) ஒப்பிடும்பொழுது பங்குடைமை ஒன்றின் பங்காளர்களுக்கு உள்ளதைக் காட்டிலும் வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் பங்குதாரர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை என விளக்குக.

21) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றுடன் ஒப்பிடும்பொழுது வரையறுத்த கூட்டுறவுச் சங்கம் ஒன்றிலே காணப்படத்தக்க வேறுபாடுகள் யாவை?

22) கொழும்புப் பங்குச்சந்தை தொடர்பில் 'மொத்த வருவாய்ச் சுட்டி'' (Total Return Index) எனும் பதத்தைத் சுருக்கமாக விளக்குக.

23) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் பங்குதாரர் ஒருவருக்குள்ள உரிமைகள் யாவை?

24) 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கக் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படத்தக்க கம்பனிகளின் வகைகள் யாவை?

25) ''இலங்கையில் பங்குடைமைகளை ஆளும் அதிகாரச் சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும் பல உள்ளன.'' அவற்றுள் மூன்றைக் குறிப்பிட்டு பங்குடைமைகள் மீது அவை ஒவ்வொன்றும் ஏற்படுத்தும் விளைவுகளைத் தனித்தனியே விளக்குக.

26) ஒரு தனியுடைமை வணிகத்தை வணிக நிறுவனங்களின் பிறவகைகளுடன் ஒப்பிடுகையில் தனியுடைமை வணிகத்தின் உள்ளார்ந்த, உறுதியான சிறப்பியல்புகள் யாவை?

27) கொழும்புப் பங்குச்சந்தை எவ்வாறு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அதன் தொழிற்பாடுகளையும் சுருக்கமாக விளக்குக.

28) ''மூலதனச்சந்தை'' என்பதாற் கருதப்படுவது யாது? இலங்கையிலான மூலதகச்சந்தையின் ஆக்கவமைப்பை எடுத்துக்காட்டுக.

## வணிகத்திற்கு அவசியமான துணைச்சேவைகள்

07. 01) ''இன்று வணிகக் கொடுக்கல்வாங்கல்களுக்காக கடன் அட்டைகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.''

1. ஒரு கடன் அட்டையின் முன்பக்கத்தில் காணப்படுகின்ற சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

2. காசுக் கொடுப்பனவுடன் ஒப்பிடும்போது ஒரு கடன் அட்டையாளருக்குக் (Card Holder) கடன் அட்டை மூலம் கொடுப்பனவு செய்வதனால் ஏற்படும் அநுகூலங்களும் பிரதிகூலங்களும் எவை?

02) ''இலங்கையில் நிதி நிறுவனங்களை உரிமம் பெற்ற வணிக வங்கிகள், உரிமம் பெற்ற விசேட வங்கிகள், பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் என வகைப்படுத்தலாம்.''

1. ஏனைய நிதி நிறுவனங்களில் இருந்து உரிமம் பெற்ற வணிக வங்கிகளை நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர்?

2. மேற்குறிப்பிட்ட மூன்று வகையான நிதி நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு உதாரணங்கள் தருக.

03) ஆயுளுறுதிக்கும் ஏனைய காப்புறுதிப் பூட்கைகளுக்கும் இடையிலான ஆறு வித்தியாசங்களை விளக்குக.

04) 1. வங்கி மேலதிகப்பற்று என்றால் என்ன?

2. வணிகர் ஒருவருக்கு இதன் நன்மைகளை விளக்குக.

05) 1. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

1) அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை (RTGS)

2) அண்மைக்காரணி (Proximate Cause)

2. ''இன்று நாணயத்தாள்களும் நாணயங்களும் பெறுமானத்திரட்டாகத் தொழிற்படுவதில்லை'' கருத்துரைக்குக.

06) 1. தன்னியக்க ரெலர் பொறி (ATM) அட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பணத்தை மீள எடுத்துக்கொள்வதற்கு மேலதிகமாக வேறு எச்சேவைகளையும் வசதிகளையும் ஒருவர் பெற்றுக் கொள்ளமுடியும்?

2. 2005ஆம் ஆண்டு முடிவெய்திய வேளையில் இலங்கையிலே கடன் அட்டைகளின் உபயோகம் துரிதமாக அதிகரித்து வந்தது. இதன் மூலம் முறையே வாடிக்கையாளர்கள், வங்கிகள்,வணிக உடைமையாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய இரு அநுகூலங்களைத் தனித்தனியே குறிப்பிடுக.

07) காப்புறுதி செய்யத்தக்க அபாயங்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் பிரமாணங்களைக் (அளவைக் கட்டளைகள்) குறிப்பிட்டு விளக்குக.

08) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.

அ. அரசாங்க பிசுக்கால் (அரசிறைக்) கொள்கை (Fiscal Policy)

ஆ. அரசாங்க பணக் கொள்கை (Monetary Policy)

இ. சமூக மூலதனம் (Social Capital)

09) அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்பு வங்கிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.

10) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.

அ. கூரியர் சேவை (Courier Service)

ஆ. குரல் அஞ்சல் (Voice Mail)

இ. வழிச் சீட்டு (Way Bill)

11) வணிகச் செயற்பாடுகள் தொடர்பில் போக்குவரத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குக.

12) காப்புறுதி எவ்வாறு வணிகங்களின் நிலைபேறுக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச்செய்ய முடியும் எனச் சுருக்கமாக விளக்குக.

13) இலத்திரனியல் கொடுப்பனவு உபகரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவைபற்றி விளக்குக.

14) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் (NRFC) கணக்கிற்கும் வதிவுடையோர் வெளிநாட்டு நாணயக் (RFC) கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

15) சிறு முதலீட்டாளர் ஒருவருக்கு அலகுப் பொறுப்பாட்சியில் முதலீடு செய்வதனால் கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவை?

16) கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் வரையறுத்த பொதுக்கம்பனிகளைப் பட்டியற்படுத்தும் நடைமுறையைச் சுருக்கமாக விளக்குக.

17) மத்திய வைப்பு முறைமையை (Central Depository System) விளக்கி, அதன் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

18) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.

அ. பெயரளவிற் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் (NEER)

ஆ. அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்பு வங்கிகள் (Licensed Specialised Banks)

இ. தொலை வங்கித் தொழில் (Telebanking)

19) ஆயுட் காப்புறுதிக்கும் காப்புறுதியின் பிற வகைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.

20) இலங்கையில் பயணிகளுக்கும் பண்டங்களுக்குமான போக்குவரத்து முறைமையின் வினைத்திறமையை மேம்படுத்துவதற்குச் செயல்ரீதியாக நீர் தரக்கூடிய ஆலோசனைகளை அவற்றுக்கான காரணங்களைத் தந்து விளக்குக.

21) இலங்கை காப்புறுதிச் சபையின் தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

22) இன்று காகிதாதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தொடர்பாடலைக் காட்டிலும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தும் தொடர்பாடல் பெருமளவில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இதற்கான காரணங்களை விளக்குக.

23) ஒரு வணிக நிறுவனத்தின் அகத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய மூன்று தொடர்பாடல் முறைகளைக் குறிப்பிடுக.

24) பண்டங்களை கொண்டுசெல்வதற்குப் பொருத்தமான போக்குவரத்துச் சாதனத்தை தெரிவு செய்யும்பொழுது ஒரு வணிக நிறுவனம் கருத்திற் கொள்ளவேண்டிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

25) மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் (Real Effective Exchange Rate - REER) என்பதாற் கருதப்படுவது யாது?

26) ''தற்பொழுது இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் போட்டி 'கரமாக தமது சேவைகளை வேறுபட்ட துறைகளுக்குப் பன்முகப்படுத்தியுள்ளன.'' இப்புதிய சேவைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

27) பின்வருவனவற்றை விளக்குக.

1. கரைகடந்த (கடல் கடந்த) கம்பனிகள் (Off Shore Companies)

2. பல்தேசியக் கம்பனிகள்

3. உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.

28) வங்கிகள் காசோலை ஒன்றை மதிப்பற்றதாக ஏற்க மறுக்கும் (Dishonour) நிலைமைகளைக் குறிப்பிடுக.

29) ஆயுட் காப்புறுதிக்கும் காப்புறுதியின் பிறவகைகளுக்குமிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

30) பின்வருவனவற்றை விளக்குக.

1. சனஸ (SANASA) அபிவிருத்தி வங்கி

2. தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture Capital Companies)

3. வர்த்தகத் தாள்கள் (Commercial Papers)

31) 1. தன்னியக்க வங்கித் தொழிற் சேவைகளை விரிவுபடுத்துவதனால் வாடிக்கையாளர்கள், வங்கிகள் ஆகிய இருபாலாருக்கும் கிடைக்கும் அனுகூலங்களைத் தனித்தனியே கூறுக.

2. இலங்கையில் புகையிரதப் போக்குவரத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நீர் வழங்கும் ஆலோசனைகள் யாவை? உமது ஆலோசனைகளுக்கான காரணங்களைத் தருக.

3. வணிகச் செயற்பாடுகளின் வினைத்திறனையும் பயனுறுதிப்பாட்டையும் மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நவீன தொடர்பாடல் முறைகளையும் கருவிகளையும் குறிப்பிட்டு அவை பற்றி விவரிக்கவும்.

32) இலங்கையிலுள்ள காப்புறுதிச் சேவையின் அண்மைக்காலப் போக்குகளை உதாரணங்கள் தந்து சுருக்கமாக விளக்குக.

33) சிறந்த தொடர்பாடற் செயன்முறை ஒன்றின் ஆறு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

(நிறைவுற்றது)

**அன்பு மாணவர்களே!**

**மேலே தரப்பட்டுள்ள பாடரீதியான வினாக்களைப் பயிற்சிசெய்த பின் பரீட்சைக்குச் செல்லுங்கள். இவை உங்களுக்கு நிச்சயம் கைகொடுக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 ★ 10 ★ 1933

உதிர்வு 01 ★ 04 ★ 2009



அமரர்

# தம்பு தியாகராசா

B.A (Hons-Madras), B.A(Spe) & Dip.in.Ed (Cey)

**தீத்: பூர்வபக்க ஸப்தமி (22.03.2010)**

எங்கள் பாசமிகு தந்தையே !
அன்போடும் பண்போடும் எமை வளர்த்தெடுத்த தெய்வமே
ஊராரும் உற்றாரும் உளம் குளிரும் வண்ணம்
உபகாரியாய் வாழ்ந்தீரே - அப்பா!
நல்லதையே எண்ணும் நெஞ்சம் நல்லன செய்யும் கைகள்
ஆசிரியனாய் புவியியலோடு கோயில் பணிதனை
பிழையற இறுதிவரை செய்தீரே அப்பா!
ஆண்டவன் அடியில் இனிதமர்ந்து ஓர் ஆண்டானாலும்
திரும்பும் இடமெல்லாம் உங்கள் திருமுகம் தெரியுதப்பா
தர்மத்தின் தலைவனாக நீங்கள் வாழ்ந்திட்ட வாழ்க்கையிலே
பூத்திட்ட ஏழுபூக்கள் நாங்கள் இங்கு ஏங்கி நிற்கின்றோம்
முடிந்த உங்கள் வாழ்வால் எழுந்திட்ட வெளியை
அடைத்திட இங்கு யார் உள்ளார் அப்பா!

22, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(இ/5659954)

## சந்நிதியில் மீட்கப்பட்ட வயோதிபரின் சடலம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் பகுதியில் இருந்து வயோதிபர் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் மீட்கப் பட்டு கிராம சேவையாளரால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மரணமானவர் முருகு பாலசிங்கம் (வயது 72) என்று அவரது தேசிய அடை யாள அட்டை மூலம் (381362418) தெரியவரு கிறது.

இவரது உறவினர்கள் எவரும் இருப்பின் உடலை அடையாளம் காட்டிடப் பொறுப் பேற்குமாறு பருத்தித்துறை வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.பத்ம நாதன் அறிவித்துள்ளார். (ஒ-10)

## தமிழ்த்தினப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்21

நல்லூர் கல்விக் கோட்டத்தின் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டிகள் தவிர்க்க முடி யாத காரணத்தால் அடுத்த மாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளன.

எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணிக்கு யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

அன்றைய தினம் போட்டியாளர்களும் நடுவர்களும் தவறா மல் கலந்து கொள்ளு மாறு கேட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக் கராசா கேட்டுள்ளர். (ஒ-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 28 ★ 11 ★ 1991

விண்ணில் 02 ★ 03 ★ 2009



திதி: 22.03.2010

# பாலசிங்கம் சசிக்குமார்

ஆண்டவன் தந்த ஆரமுதே நீ எங்கே?
பள்ளிவிட்டு வரும்வேளை - உன்
நகைச்சுவைச் சத்தம் கேட்டிடுமே!
எறிகணையால் காயப்பட்டு
உன் உயிரை பறித்தது ஏன் ?
என்ன பாவம் செய்தோம் !
இப்படி நாம் ஆகிவிட்டோம் !!
இறைவன் தந்த செல்வமே - எங்கள்
வீட்டின் ஒளி விளக்கே
உனைப்பிரிந்ததால் எங்கள் மனம்
துடியாய் துடிக்கிறது.
உனை இனி எங்கு காண்போம் எம் சசிக்குமாரே?

நிரந்தர முகவரி:கண்ணன் கடையடி,
பிரமந்தனாறு, தர்மபுரம்.
தற்காலிக முகவரி:கைதடி தெற்கு,
கைதடி.

என்றும் உன் நினைவில்
தாய்,தந்தை, சகோதரர்கள்,
உறவினர்கள்

(95666)


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010





(முன்னாள் மயிலிட்டி கிராமசபைத் தலைவரும் தெல்லிப்பழை பனை தென்னை வள அ.கூ.ச.தலைவரும்)

சி.கா.செந்திவேல்
முதன்மை வேட்பாளர்
இல. 06

கா.கதிர்காமநாதன்
(செல்வம்)
இல.03

T.V.கிருஷ்ணசாமி
(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
இல.08

* தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிக்க
* ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சியை வென்றெடுக்க
* உழைக்கும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மாற்று அரசியல் பாதையில் பயணிக்க
* கடந்தகாலப் பட்டறிவோடு சிந்தித்து

புதிய ஜனநாயக் கட்சியின்
சுயேச்சைக்குழு 06
கேத்தல் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

X


## மஹஜன சம்பத / මහජන සම්පත / Mahajana Sampatha

19.03.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2218

வெற்றி எழுத்து - வெற்றி எண்கள்

M 7 1 6 0 1 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M | 7 | 1 | 6 | 0 | 1 | 5 | ரூபா.10,145,822/= | பரிசு - |
| 1. பரிசுகள் | | 7 | 1 | 6 | 0 | 1 | 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 1 | 6 | 0 | 1 | 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 11 |
| 3 பரிசுகள் | | | | 6 | 0 | 1 | 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 130 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 1 | 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1304 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 5 | ரூபா. 100/= | பரிசுகள் 13092 |
| 6 பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 129750 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 1 | 6 | 0 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 7 | 1 | 6 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 129 |
| 9 பரிசுகள் | | 7 | 1 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1325 |
| 10 பரிசுகள் | | 7 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12935 |
| 11 பரிசுகள் | M | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 51725 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,670,950.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

★அதி உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றிட...
★ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலத்தை மீட்டிட...
★இடம்பெயர்ந்தோரைத் துரிதமாக மீள்குடியமர்த்தி புனர்வாழ்வு அளித்திட...
★நீதியான சமாதானத்தைப் பெற்றிட...
★நிரந்தர அரசியற் தீர்வினை வென்றிட...
★தமிழ்த் தேசியத்தைத் தக்க வைக்க...
★அரசியற் கைதிகளை விடுதலை செய்திட...
★இன அடையாளத்தை நிலை நிறுத்திட...

ஆதரிப்போம்
திரு.றெமிடியஸ்
அவர்களை

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)



X 9


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1175 சிவப்பு

19-03-2010

இடபம் 02 25 42 48

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 210,918 | 20/- | 4,218,360/- |
| 2 இலக்கங்கள் | 19,364 | 40/- | 774,560/- |
| 1 இல. + லக்கினம் | 19,128 | 60/- | 1,147,680/- |
| 2 இல. + லக்கினம் | 1,759 | 200/- | 351,800/- |
| 3 இலக்கங்கள் | 497 | 1000/- | 497,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| மொத்தம் | | | 9,939,400/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 251,729 | | 10,439,400/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : எல்.குணபால வெலிமட

கைத்தொலைபேசி வெற்றியாளர்: அசங்க மஹேஷ் பத்திராஜ பன்னல

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அனுராதபுரம் | 501094623-1-47 |
| அம்பாறை | 501084335-1-39 |
| கொழும்பு | 501081072-7-49 |
| பொலன்னறுவை | 501089631-5-11 |
| திருகோணமலை | 501086719-1-22 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம்

எல்லாச் செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்வி ஆகும். இதனால் நாம் கல்வியை கருத்தூன்றிக் கற்றல் வேண்டும். கற்றவர் நன்மை, தீமை ஆராய்ந்து அறியும் ஆற்றல் பெற்றவர்.

அதனால் தான் திருவள்ளுவரும்
"கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்"
என்று கூறுகிறார். எண்ணும் எழுத்தும் இருகண்களைப் போன்றவை. கற்பவற்றை சந்தேகமற்று கற்க வேண்டும். விளங்காதவற்றைக் கேட்டுக் கொள்ளல் வேண்டும்.

நாம் சிறப்பாகக் கல்வி கற்றால் விரும்பும் தொழிலை அடையலாம். அறிவைத்தரும் ஆசிரியராகவோ, சுகத்தைப் பேணும் வைத்தியராகவோ சேவையாற்றி சீரும் சிறப்பும் பெறலாம். கடல் போன்ற கல்வியைக் கருத்துடன் கற்று நலம் பல பெற்று நல் வாழ்வு வாழ்வோமாக.

ச. அருள்வாணி, தரம்-9, யா/ இணுவில் மத்திய கல்லூரி




## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங் கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.............................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்







ப.உசாந்தினி, தரம் -8 C,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.



ந.டிலக்ஸ்ஷா, தரம் - 6,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.



க.சிவாமுதரன், தரம் - 7A,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.




தி.விஷ்ணவன், தரம் -1 A,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.



பு.பிகானி, தரம் -6,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.



யோ. லிமோஜன், தரம் -7A,
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.



ம.வேணுஜன், தரம் - 4 D,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.



செ.கஜந்தன், தரம் -5A,
யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தி.



## ஓநாய்ச் சிறுவன் 25

ஆங்கிலத்தில்: 'ருத்யாட் கிப்லிங்'
தமிழில்: ரம்யன்

இந்த மாடு தின்னி இந்தப் பாறையில் ஓநாய்க் கூட்டத்தில் வைத்து என்னைக் கொன்று போடு வதாகக் கூறியிருந்தான். என்னைச் சிறு பிள்ளையாக இருந்தபோது கொல்லமுடியாமல் போய்விட்டதாம். அதனால்த்தான் இந்த முடிவு. ஆனால் நாய்கள் கடித்தால் மனிதர்கள் திரும்பிக் கடிப்பதில்லை. மீசையை ஆட்டினாயோ இந்த நெருப்பு முழுவதும் உன்னைப் பதம்பார்க்கும் தெரிந்துகொள்'' என்று கூறி நெருப்புத் தடியால் ஷேர்கானின் தலையில் அடித்தான். ஷேர்கான் செய்வதொன்றும் அறியாமல் முனங்கிக்கொண்டு பயத்தில் நடுங் கினார். தலையிலும் கழுத்திலும் அடர்த்தியாக இருந்த மயிர் பொசுங்கி மணம் வீசியது.

சரி போய்த் தொலைந்து விடு. ஆனால் நான் இன்னும் வளர்ந்து ஒரு மனிதனாக இந்தக் கூட்டம் நடக்கும் இந்தப் பாறைக்கு வரும்போது உன்னைக் கண் டேனோ உன் தோலை உரித்து போர்வையாக்கிவிடுவேன்.'' என்று கூறித் துரத்தினான்.

ஓநாய் கூட்டத்தைப் பார்த்து மீண்டும் கூறினான். "அகீலா சுதந்திரமாக அவர் விருப்பம் போல வாழவேண்டும். அவரைக் கொல்லக்கூடாது. அதுதான் என் விருப்பம். என்று கூறி ஓநாய்களைக் கலைத்தான். எரிந்து கொண்டிருந்த மரக் கொப்பை இடது, வலது என்று தலைமேலாகச் சுற்றி ஓநாய் களை அடித்தான். நெருப்புப் பட்டதால் மயிர்கள் பொசுங் கிய நிலையில் குளறிய படியும் பயத்தில் அனுங்கிய படியும் ஓநாய்கள் தப்பிப் பிழைத்தோம் என்று ஓடத் தொடங்கின. இறுதியில் மௌலி, அகீலா, பகீரா மற்றும் மௌலியை ஆதரித்த சில ஓநாய் களும் எஞ்சியிருந்தார்கள்.

இந்த நிலையில் ஏதோ ஒன்று இதற்கு முன் ஒருபோதும் நிக ழாத ஒன்று மௌலியின் நெஞ் சுக்குள் நிகழ்ந்தது. அவன் மூச் சைப் பிடித்துக்கொண்டு அமர்ந்துவிட்டான். கண்களில் இருந்து தாரைதாரையாக கண் ணீர் வழிந்தது. இது என்ன, எனக்கு என்ன நடக்கிறது. பகீரா நான் சாகப்போகிறேன்.'' என்று குளறினான் மௌலி.

பகீரா சொன்னார். " இல்லைத் தம்பி இது மனிதர்களுக்கு மட்டுமே ஏற்படும் ஓர் உணர்வு- நீ கண்ணீர் விடுகிறாய் எனக்கு விளங்குகிறது. இனியும் நீ சிறுபிள்ளையல்ல நீ ஒரு மனிதனாகிவிட்டாய். காட்டு வாழ்க்கை இனி உனக்கு இல்லை. கண்ணீர் நன்றாகப் பெருகி ஓடட்டும்......'' என்றார். எனவே



மௌலி வெகு நேரம் அவ்வாறே அமர்ந்து அழுது கண்ணீர் வடித்தான். இதற்கு முன் அவன் இந்த அளவில் ஒருபோதும் அழுததில்லை.

இறுதியில் நான் காட்டைவிட்டுப் போகப் போகிறேன். அதற்கு முன் என்னை வளர்த்த தாயைப் பார்க்க வேண்டும் என்று கூறிக் கொண்டு அம்மா ஓநாய் அப்பா ஓநாயுடன் வாழ்ந்த குகையை நோக்கிப் போனான். அங்கே அவர்களின் உடல்களில் தலையை வைத்து அழுதான். புலம்பினான் அவர் களின் குட்டிகளும் அழுது புலம்பின. (வளரும்)

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -55

01. விமானிகளுக்குரிய அனுமதிப்பத்திரத்தை உலகிலேயே முதல்முதலாகப் பெற்றவர்கள் யார்?
02. பவ்லோ பிக்காசோ என்பவர் எந்தக் கலை யில் நிபுணத்துவம் பெற்றுவிளங்கினார்.
03. அண்மையில் ஆயுள் காலத்தடை விதிக் கப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் யார்?
04. யாழ்ப்பாணத்தில் சிவராத்திரிதினம் விசேட மாக அனுஷ்டிக்கப்படும் ஆலயம் எது?
05 சிறுகுறிஞ்சா பொடியை நீரிழிவு நோய்க் கான பரிகாரமாக அறிமுகப்படுத்தியுள்ள யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனம் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 28.03.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? - 52** சரியான விடைகள்

01. நோர்வே, 1994 - 02 - 12
02. கிளைட்தொம்பக்.
03. 1945 - 09 - 24
04. இங்கிலாந்து.
05. சமாதானம்

சரியான விடைகளை எவரும் அனுப்பவில்லை.

**விடை தெரியுமா? - 53** சரியான விடைகள்

01. சச்சின்டெண்டுல்கர்.
02. யாழ்.மத்திய கல்லூரி.
03. ஏப்ரல் - 08
04. 2009 ஆம் ஆண்டு.
05. ரைகர் வூட்ஸ்.

### 53 இல் பரிசு பெறுவோர்

01.க.நிலோஜா, தரம்-11, யா/இந்து மகளிர் கல்லூரி.
02.நா.டர்சிகா, பட்டினசபை வீதி, சங்கானை.
03.ரா.உஷாந்தினி, தரம்-7M, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியேறிய மக்களுக்கு கொடுப்பனவு; சாவகச்சேரியில் இன்று ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் தொகை கொடுப்பனவு வழங் கும் ஆரம்ப வைபவம் இன்று திங்கட் கிழமை மு.ப.10 மணிக்கு சாவகச் சேரி கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகவும் நிக்கொட் நிறுவனத் தின் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் சிறப்பு விருந்தினராக வும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் வரவேற் புரை நிகழ்த்துவார்.

நாளை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் தொகைகளும் வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-சி)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி சாந்தநாயகி பொன்னம்பலம்
அவர்களின் அன்புத் தாய்

திருமதி சிவகாமசுந்தரி பொன்னம்பலம்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர்கள்,
பட்டப்பின்படிப்பு கல்விடிப்புளோமா, பகுதிநேரம் 2007/2009,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(95737)



யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும்
## மாபெரும் வர்த்தக கண்காட்சி - 2010

அனைவரையும் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிடுவதற்கு விஷேட கழிவு விலையில் பொருள்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்:
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்.மத்திய கல்லூரி

காலம்:
27, 28, 29 மார்ச் 2010
(சனி, ஞாயிறு, திங்கள்)

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை
உதயன்



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2106 திகதி 20-03-2010

ஆங்கில எழுத்திற்கும் E

வெற்றி எண்கள்: 09 12 17 48

போனஸ் இல: 02

ஜக்பொட் பரிசு ரூ. 12,448,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 174975 | 20/- | 3,499,500/- |
| 2 இல | 12505 | 100/- | 1,250,500/- |
| 3 இல | 267 | 1,000/- | 267,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6855 | 40/- | 274,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 506 | 1,000/- | 506,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,448,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 8295 | 100/- | 829,500/- |
| 2 இல + போனஸ் இல | 396 | 500/- | 198,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 336 | 200/- | 67,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,308,900/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 204176 | | 8,908,900/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - A.M. இந்ரபால - கிராந்துருகோட்டே.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - ரசிக சமந்த சேனாநாயக்க - ஹக்மன.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 301752005-3-00 |
| மாத்தளை | 301742957-0-11 |
| புத்தளம் | 301743589-1-29 |
| கொழும்பு | 301738746-3-04 |
| குருணாகல் | 301739258-0-02 |
| கம்பஹா | 301739687-6-48 |
| வவுனியா | 301744556-5-46 |
| கண்டி | 301750019-3-34 |
| காலி | 301753311-1-25 |
| கொழும்பு | 301750697-2-13 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 12,925,650/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 மார்ச் 24 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


# கல்வியியற்கல்லூரிக்கு அழைக்கப்பட்டோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 22

தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கு 2010 கல்வி ஆண்டுக்கான ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் புதிய மாணவர்களைச்சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர் வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியல் ஏற்கனவே பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தமக்குரிய பத்திரங்களை இன்று திங்கட்கிழமை யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் பெற்றுக் கொள்ள முடியும் என்று பீடாதிபதி எஸ்.கே.யோக நாதன் அறிவித்துள்ளார். (ஒ-10)

# ஏகாதசித் தீர்த்தம்

வண்ணை, மார்ச் 22

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரதநாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெறும்.

காலை 8மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகி முற்பகல் 10மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயண சுவாமி பூமாதேவி, ஸ்ரீதேவி சகிதராய் திருவீதி எழுந்தருளுவார். (ஒ-160)

# நெடுந்தீவில் உற்சவம்

நெடுந்தீவு,மார்ச் 22

நெடுந்தீவுகிழக்கு ஆல ாவணப்பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பத்துத்தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் 28ஆந்திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ரி-111)

# வலை திருத்தல், கடலுணவு பதனிடல் பயிற்சி

வண்ணை, மார்ச் 22

யாழ்.அரச அதிபரது மேற்பார்வையில் இயங்கும் 'சைல்ட்பண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் வலை திருத்தல், கடலுணவு பதனிடல் ஆகியவற்றின் நான்கு நாள் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இப் பயிற்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக உதவிப்பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

மேலும் இவ்வாண்டுக்கான விஞ்ஞானதொழில்நுட்பம், கடல் வள பாதுகப்பு வெளிக்கள இருநாள் பயிற்சிகள் தம்பாட்டி அம்பிகைநகர் மற்றும் கொக்குவில் மேற்குப் பகுதிகளில் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்தப் பயிற்சிகளை பெறவிரும்புபவர்கள் யாழ். கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளருடன் கடற்றொழில் பரிசோதகர் மூலமாக தொடர்பு கொண்டால் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-160)

அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்ந்த

# உடுவில், சாவகச்சேரி பிரதேச மக்களுக்கு ரூபா 25ஆயிரம் கொடுப்பனவுக் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தி னரால் வழங்கப்பட்டு வரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் உடுவில் பிரதேச செயலக பிரிவு மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவுகளில் குடியேறிய குடும்பங்களுக்கு இன்று வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 541குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 917 குடும்பங்களுக்கும் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே உரியவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, வங்கி வைப்புப் புத்தகம் என்பனவற்றுடன் சென்று அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-10)


## ஓராண்டு பூர்த்தி நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
பஞ்சலிங்கம் மங்கயர்க்கரசி

தோற்றம் 1939.04.29 — மறைவு 2009.04.01

திதி: சப்தமி

ஆசையாய் இவ் உலகில் எம்
உறவாய் அவதரித்தீர்
வஞ்சகமில்லாத உமது பூ முகத்தினை
நாம் எப்போது காண்பதுவோ
நெஞ்சம் எல்லாம் கொதிக்குது
உமது எழில் முகம் காண.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (95992)

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 25.04.2010ஆம் நாள் நடைபெறும். யாப்பின் திருத்தப் பட்ட உறுப்புரை 05.09இற்கமைய 2010ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோரே கூட்டத்திற் கலந்து கொள்ள உரித்துடையவர்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 10.04.2010க்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (C/565940)

க.வை.குணசேகரம்,
செயலாளர்.



## நினைவஞ்சலி



23ஆம் ஆண்டு
செல்வி
ப.இராமநாதன்
(ஓய்வுபெற்ற அதிபர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி)
தோற்றம் 24.06.1926 — மறைவு 05.04.1987



19ஆம் ஆண்டு
டாக்டர்
சி.வேலாயுதன்
(கண் வைத்திய நிபுணர்)
தோற்றம் 04.10.1925 — மறைவு 31.10.1991



18ஆம் ஆண்டு
திருமதி
ப.வேலாயுதன்
(குடும்பத்தலைவி)
தோற்றம் 14.10.1930 — மறைவு 16.06.1992

திதி: 22.03.2010

அல்லல்கள் வந்த போது அன்போடு அணைத்தவரை
நெஞ்சம் மறப்பதில்லை அஞ்சலிகள் பல
இறை அருளால் இறை அடியில் மீண்டும் சந்திக்க
பிரார்த்திக்கும்.

126/4, ஆரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

சகோதரி. (95962)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.09.1989
* வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து அமைதிப்படை வெளியேறிய பின்னர் அப் பகுதிகளிலுள்ள தமிழர்கள் மற்றும் தமிழ்க் குழுக்களது பாதுகாப்புக்கு யார் பொறுப்பு என்பதில் இழுபறி நிலை நிலவுவதாகத் தெரிவிப்பு.
* கொழும்பு-யாழ். ரயில் சேவை நாளை மறுதினம் முதல் தினசரி இடம்பெறுமென ரயில்வே வட்டாரங்கள் தெரிவிப்பு.

17.09.1989
* வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்த அறிவிப்பு வருவதாயின் அதற்கு இலங்கை அரசும், இந்திய அரசும் மட்டுமல்லாது, வடக்கு, கிழக்கில் உள்ள முக்கிய தமிழ் குழுக்களும் இணக்கம் தெரிவிக்க வேண்டுமென இந்தியத் தரப்பு வலியுறுத்துவதாக கொழும்பில் தெரிவிப்பு.
* ஜே.வி.பியுடன் இந்திய அரசு பேச்சு நடத்துகின்றது என வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் குறித்துக் கருத்துக் கூற இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் மறுப்புத் தெரிவிப்பு.

18.09.1989
* இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட என்ன விலையானாலும் கொடுக்க ஜனாதிபதி பிரேமதாஸ தயாராக இருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* கண்டி மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமங்களில் மூன்று நாள்களுக்கு முன்னர் இனந்தெரியாத ஆயுததாரிகள் புகுந்து நடத்திய அட்டகாசத்தில் 150 பொதுமக்கள் வரை சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

19.09.1989
* இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளிலிருந்து அமைதிப்படையை விலக்குவது தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நேற்று உடன்படிக்கையொன்று கைச்சாத்து.
* தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கத்தின் மறைவினால் காலியான இடத்துக்கு கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவிருப்பதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

20.09.1989
* இந்திய அமைதிப்படையின் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகள் நிறுத்தம் தொடர்பான விதிமுறைகள் குறித்த அறிக்கையை இந்திய அமைதிப்படையின் தளபதி வெளியிட்டுள்ளார்.
* மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கி, அதன் பின்னர் மாகாண சபையில் அனைத்து அரசியல் கட்சிகளும் இடம்பெறச் செய்வதற்காக சகல மாகாண சபைகளையும் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தப் போவதாக ரெலோ இயக்கம் தெரிவிப்பு.

05.02.1990
* 21.09.1989 ஆம் திகதி முதல் 04.02.1990 ஆம் திகதிவரையான 137 நாள்களாக தடைப்பட்டிருந்த உதயன் பத்திரிகை இன்று 05.02.1990 ஆம் திகதி முதல் மீண்டும் வெளிவருவதாக உதயன் நிர்வாகம் தெரிவிப்பு.
* இலங்கைக்கு வந்த இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளை இராணுவ அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கும் தனது திட்டத்தில் தோல்வியடைந்துவிட்டதாக விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் யோகி தெரிவிப்பு.
* இலங்கையின் 42 ஆவது சுதந்திரதின உரையை ஜனாதிபதி பிரேமதாஸ மும்மொழிகளிலும் நிகழ்த்தினார்.

06.02.1990
* வட பகுதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டம் சுதுமலையில் நடைபெறுமெனத் தெரிவிப்பு.
* கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் தொடர்ந்து புரிந்துணர்வு நிலவுகிறது என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் யோகி தெரிவிப்பு.

07.02.1990
* ஈழத்திலிருந்து பெருமளவு ஆயுதங்களைக் கடத்தி வந்து இந்தியாவில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடச் சில தமிழ்க் குழுக்கள் முயற்சித்து வருவதாக கிடைத்த தகவல்களையடுத்து தமிழ்நாடு அரசு தமிழக கரையோரப் பாதுகாப்பைத் தீவிரப் படுத்தியுள்ளது.
* சிவில் நிர்வாகம் இல்லை என்ற எண்ணத்தில் தாம் நினைத்த போக்கில் முறையற்ற விதத்தில் வர்த்தகம் மேற்கொள்ளும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் அமைப்பாளர் தெரிவிப்பு.

08.02.1990
* குடியகல்வு சட்டங்களை மீறி இந்தியா சென்றமைக்காக வடக்கு- கிழக்கு மாகாண முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு
* வடக்கு, கிழக்கு மாகாணச் செய்திகள் தொடர்பாக தகவல் வெளியிடுவதற்கு முப்படை அதிகாரிகளுக்கு அரசு கட்டுப்பாடு விதிப்பு.

09.02.1990
* இலங்கையின் இறைமையில் தலையிடும் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசின் உளவுப் பிரிவான 'றோ' வழிகாட்டிச் செல்வதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.
* இம்மாத இறுதியில் இந்தியப் படையினர் யாழ். குடாநாட்டிலிருந்து முற்றாக வெளியேறுவர் என இந்திய அரசு உறுதி அளித்திருப்பதாக இலங்கை அரசு வட்டாரங்கள் தெரிவிப்பு.

10.02.1990
* ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, ஈ.என்.டி. எல்.எவ், மற்றும் புளொட் ஆகிய அமைப்புக்கள் இணைந்து உருவாக்கிய தமிழ் தேசிய சபை கலைக்கப்படும்நிலை உருவாகியுள்ளதாக கொழும்பில் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பு.
* ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் கொழும்பில் இரண்டு மணிநேரம் இடம் பெற்றதாகத் தெரிவிப்பு.

11.02.1990
* குடிவரவு, குடியகல்வு, சட்டங்களை மீறி இந்தியாவுக்கு பயணங்களை மேற்கொண்டமை தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கு ......
* இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இராணுவத்தின் உதவியுடன் அரசைக் கவிழ்க்கும் சதியொன்று இடம் பெறலாம் எனத்தாம் அஞ்சியதாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

12.02.1990
* தமிழக முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழு சென்னை பயணம்.
* திருகோணமலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பயணித்துக் கொண்டிருந்த படகு கடலில் கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் 22 இயக்கப் போராளிகள் மரணம்.

13.02.1990
* 'சார்க்' அமைப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறுவதைத் தடுக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவிப்பு.
* இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் எழுநூறு பேரும் இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படுவர் என இந்திய அமைதிப் படையின் வடபகுதிக்குப் பொறுப்பான தளபதி தெரிவிப்பு.

14.02.1990
* வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்து நியாயமான சுதந்திரமான தேர்தலை நடத்துமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசிடம் கோரிக்கை. அத்துடன் இத்தேர்தலில் பங்குபற்றுமாறு சகல குழுக்களுக்கும் கட்சிகளுக்கும் அழைப்பு.
* ஈரோஸ் அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் அன்ரன் பாலசிங்கம் கோரிக்கை.

15.02.1990
* சட்ட விரோத இராணுவக் குழுக்கள் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களை நிராயுதபாணிகளாக்க அரசு அவசர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸ சர்வகட்சி மாநாட்டில் தெரிவிப்பு.
* இலங்கையின் ஸ்திரப்பாட்டைக் குலைக்க இந்திய உளவு அமைப்பு 'றோ' முயல்வதாக பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்த கருத்துக் குறித்து இந்தியா அதிர்ச்சி தெரிவிப்பு.

## தவக்கால ஆற்றுகை 'வெள்ளியில் ஞாயிறு'
# 150 அடி நீளமான விசேட மேடையில் திருப்பாடுகளின் காட்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்.மார்ச் 22

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'வெள்ளியில் ஞாயிறு' என்னும் திருப்பாடுகளின் காட்சி இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ள இவ்வாற்றுகை வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நூற்றுக்காணக்கான கலைஞர்கள் பங்கேற்கின்ற 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் காட்சிக்காக 150 அடி நீளமான மேடை விசேடமாக அமைக்கப்பட்டுள்ளது. திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய இப்படைப்புக்கு திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் மீள்வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்துள்ளார். இதற்கான இசையமைப்பை இளம் இசையமைப்பாளர் கு.அற்புதன் வழங்குகின்றார்.

திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாவதற்கு முன்பாக ஒவ்வொரு நாளும் அருளுரைகள் இடம்பெறும். இவற்றை முறையே அருட்திரு செ.நேசகுமார், இ.மெ. ஜெயசீலன், திருமதி சுனித்தா வெனான்சியஸ், அருட்சகோதரி ம.அருள், அருட்திரு மேர்வின் பெர்னாண்டோ, அருட்திரு ஜெரிபெல் கிருபாகரன், அருட்திரு.பயஸ் இருதயதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

ஈழத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் சடங்கு நிலை ஆற்றுகையாகவும், விழா நிலை ஆற்றுகையாகவும் காணப்படும் 'பாஸ்' என அழைக்கப்படும் திருப்பாடுகளின் காட்சியை காண்பிக்கும் செயற்பாட்டை அறுபதுகளில் இருந்து திருமறைக்கலாமன்றம் மேற்கொண்டு வருகின்றது. அருட்திரு நீ.மரியசேவியர் அடிகள் தமிழ் மரபுக்குரியதான வகையில் முதன்முதலில் திருப்பாடுகளின் நாடகத்துக்குரிய எழுத்துருக்களை எழுதி நூற்றுக்கணக்கானோரை ஒன்றிணைத்து 1963 இல் இருந்து இப் பணியை மேற்கொண்டு வருகின்றார். (ஒ)

# மீள்குடியேறிய துணுக்காய், ஒட்டுசுட்டான் மக்களின் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்பு
## இலவசமாக நெல், விதைகள்; உர வகைகள் மானிய விலையில்

வவுனியா, மார்ச் 22

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கிராம மீள் எழுச்சித் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய்,மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய மூன்று பிரதேசத்தில் 5935 குடும்பங்கள் இதுவரைக்கும் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தில்லையம்பலம் சிவபாதம் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேறிய மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம் முன்னெடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் 5935 குடும்பங்கள் அடங்கிய 18600 அங்கத்தவர்கள் தமது நாளாந்த உணவுத் தேவைக்கான சுயமுயற்சி வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்காக நெல் மற்றும் மறுவகைப் பயிர்ச் செய்கையை விவசாயத் திணைக்களம் ஊக்குவித்து வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 10 டிராக்ரர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளமை இவற்றின் மூலம் உற்பத்தியாளருக்கு நெல் 2ஏக்கர் அல்லது மேட்டுப் பயிர்ச் செய்கைக்கு ஒரு ஏக்கர் இலவசமாக உழவு செய்து கொடுக்கப்படுகிறது.

மக்கள் நெல் மற்றும் மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இம்மாவட்டத்தில் நான்காயிரம் ஏக்கர் நெல் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தற்போது 2600 ஏக்கரில் பயிடப்பட்டுள்ளதாகவும், மேட்டுப் பயிர்கள் 1200 ஏக்கரில் பயிரிடுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பயிர் உற்பத்திக்கான உரவகைகளை அரசாங்கம் உற்பத்தியாளருக்கு மானிய விலையில் வழங்கி வருகிறது. மீள்குடியேறிய மக்கள் நிலத்தில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்தி கௌபி,பயறு என்பன பயிரிட்டிருந்தனர். தற்போது அவை அறுவடை செய்யக்கூடிய நிலையில் உள்ளன. மக்களின் அன்றாட தேவைக்கான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்காக பல்வேறு வகைப்பட்ட மரக்கறி விதைகள் அடங்கிய 3200 பைக்கற்றுக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி செய்ப்பட்ட மரக்கறி வகைகளை எடுத்துச் சென்று சந்தையில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளையும் விவசாயத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது. இதற்கமைய ஐந்து பயனாளிகளுக்கு 50வீத மானியத்தில் ஐந்து சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளது. மரக்கறி வகைகளை சந்தைக்கு எடுத்துச் செல்லக் கூடிய வகையில் எண்ணூறு பிளாஸ்ரிக் கூடைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

நெற் செய்கையாளருக்கு ஒரு ஏக்ருக்கு மூன்று புசல் விதை நெல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 50 வீத மானியத் திட்டத்தின் கீழ் 95 தண்ணீர் இறைக்கும் பம்பிகளும், 98மருந்து தெளிகருவிகளும் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தில்லையம்பலம் சிவபாதம் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-352)

# பஸ்சேவை அடிக்கடி சீர் குலைவதால் மாணவர், அரச ஊழியர்கள் பாதிப்பு

நாவற்குழி,மார்ச் 22

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில் பஸ்கள் பற்றாக்குறை, ஆளணிப்பற்றாக்குறை காரணமாக போக்குவரத்துச் சேவைகள் அடிக்கடி சீர் குலைகின்றன.

குறிப்பாக பாடசாலைச் சேவை, அரச ஊழியர்சேவை என்பன அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. இதனால் இச் சேவைகளை நம்பியுள்ள மாணவர்கள், அரச பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, ஆளணிப் பற்றாக்குறை குறித்து சபையின் தலைமைப்பீடத்திற்கு பலமுறை அறிவித்துள்ள போதும் உரிய நடவடிக்கை இதுவரை எடுக்கப்படாதமை குறித்து யாழ். சாலை அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஒ-121)

# நெடுந்தீவில் மாதத்தில் ஒரு தடவை நீதிமன்ற விசாரணைகள்

நெடுந்தீவு,மார்ச்.22

நெடுந்தீவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா நீதிமன்றம் மாதத்தில் ஒரு தடவை வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த [illegible] ஆண்டுகளின் பின்னர் மீண்டும் நெடுந்தீவில் நீதிமன்றச் செயற்பாடுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-111)

# பேச்சுத் திறன் போட்டி

நீர்வேலி,மார்ச்.22

நீர்வேலி அச்செழுப்பகுதி குடும்ப முன்பள்ளிகளின் மாணவர்களுக்கான பேச்சுத்திறன் காண் போட்டி இம்மாதம் 31 ஆம் திகதி பிற்பகல்3 மணிக்கு நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை மண்டபத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி அச்செழு கிராமப் பகுதிகளில் உள்ள முன்பள்ளிச் சிறுவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்வுள்ளனர்.

திருக்குறள், ஆத்திசூடி என்பன போட்டிக்குரியவையாகும். (ஒ-110)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்கள் பாடசாலைச் சமூகத்தினரால் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும் செஞ்சிலுவைச் சங்க பிரமுகர் டாக்டர் எஸ்.தியாகராசா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.

(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# கிராமப்புற மக்களைக் கவரும் விழிப்புணர்வு நாடகங்கள்

## வலிகாமம் மேற்கில் நடத்தப்படுகின்றன

சங்கானை, மார்ச் 22

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினர் காவேரி கலாமன்றத்துடன் இணைந்து இப்பிரதேச ரீதியாக விழிப்புணர்வு நாடங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நாடகங்கள் மூலம் சமூகப் பிரச்சினைகள், கணவன், மனைவி மற்றும் குடும்பங்களுக்குள் ஏற்படும் சிறு, சிறு பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றிய விளக்கம், பிறப்பு, திருமண, மரணச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான வழிமுறைகள் அவற்றின் அவசியம் தொடர்பான விளக்கங்கள் மக்களுக்கு தெரிவிக்கப் படுகின்றன.

அவை மட்டுமன்றி இளவயது திருமணங்களால் ஏற்படக் கூடிய தீமைகள், பாடசாலைக்குச் செல்லாமல் சிறு வயதிலே வேலைக்குச் செல்லும் இளம்பிள்ளைகளுக்கு எவ்வாறு வழிகாட்டி அவர்களின் பாடசாலைக் கல்வியைத் தொடரவைப்பது மற்றும் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான விளக்கங்கள் என்பன குறித்தும் விரிவாக மக்கள் மத்தியில் உணரவைக்கப்படுகின்றன.

இந்த நாடகங்களை கிராம மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பார்ப்பதோடு நாடகங்களின் நிறைவின்பின் மனத் தெளிவுடனும், நம்பிக்கையுடனும் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர். (ஒ-க-29)


## வீடுவளவு விற்பனைக்கு

உடுப்பிட்டி, இலக்கணாவத்தை கற்பக விநாயகர் கோயிலுக்கருகில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: ப.சுதா
கலைவாணிவீதி, கொக்குவில் கிழக்கு.
ந.ராஜேந்திரம்
இலக்கணாவத்தை, உடுப்பிட்டி
தொ.பே. 0777294249
(95735)

## வேலைக்கு ஆள்கள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

தொடர்பு:
புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி லேன், பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(757554)

## பதவி வெற்றிடம்

செல்வி பரிமளம் நாகலிங்கம் தனிநபர் நியமன அறங்காவற் குழுவிற்கு சங்கானை கிராமத்திலிருந்து தலைவர் பதவிக்கு உறுப்பினர் ஒருவர் தேவைப்படுவதால் தகுதியுடைய ஒருவர் விளம்பரத்திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் கீழ் தரப்படும் விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பம் செய்யலாம் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

குறிப்பு: 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரிடமிருந்தும் தன்னலம் கருதாத சமூகசேவையில் ஈடுபடக் கூடிய விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் விரும்பத்தக்கதாகும்.

கு.சண்முகரத்தினம்
(செயலாளர்),
செல்வி பரிமளம் நாகலிங்கம்
தனிநபர் நியமன அறங்காவற் குழு.

பாரதி லேன்,
சங்கானை. (சி/565948)


## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவில்...

செல்வி பிருந்தா
சுப்பிரமணியம் (ஷாய்)



அகம் மகிழ 08✱11✱1987
உளம் நெகிழ 22✱03✱2008

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறவில்லை என் துயரம்
ஆயுள் என்னுள் உள்ளவரை
மாறுமா உன் நினைவு
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
உன்போல் ஓர் நண்பி கிடைக்குமா....

என்றும் உன் நினைவுடன்:
P.லோஜி (நண்பி).

அரியாலை,
யாழ்ப்பாணம். (95755)

## "இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை"

### தவக்காலச் சிந்தனை

இக்கூற்று பவுல் உரோமையருக்குக் கூறப்பட்டவை. இது உரோமையருக்கு மட்டுமல்ல. இன்றைய எம் சீர்கெட்ட சமுதாயத்திற்கும் கொடுக்கப்படும் செய்தி. நாம் வெறுமனே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்பதற்காக நாம் செய்த அனைத்துப் பிழைகளுக்காகவும் எம் ஒவ்வொருவரின் பாவத்திற்காக அல்ல. உலக மக்களின் அனைத்துப் பாவங்களுக்காகவும் மாசற்ற செம்மறியாகிய இயேசு தனது இன்னுயிரை ஈர்ந்தார். அவ்வாறாக எமக்காகப் படைக்கப்பட்டவனாலேயே பல அவஸ்தைகளை அனுபவிக்கும் போது வெறுமனே சேற்றினுள் புதையுண்டு அதற்குள்ளேயே வாழ்ந்து பாவம் எனும் சீருடையை எம் நாளாந்த வாழ்வில் அணிந்தவர்களாக பாவிகளாக வாழும் நாம் எம் பாவங்களுக்காக இறப்பதில் ஏன் தயக்கம்? உலக மக்களின் பாவங்களுக்காக அல்லது உன் தாய், தந்தை, உறவினர்களது பாவத்திற்காக இறக்கும்படி பரமன் இயேசு உன்னை அழைக்கவில்லை. உனக்காக நீ இறக்க வேண்டும். உன்னை நீ அறிய வேண்டும். தவறு செய்வது மனித இயல்பு. அதைத் திரும்பத் திரும்பச் செய்வது மனிதனுக்குப் பண்பானதல்ல.

எனவே எம் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காகவும் நாம் இறப்போம். விடுதலை எனும் உடை அணிந்து புதிய மனிதர்களாக இயேசுவின் பாடுகளை, இறப்பை நினைத்து என்னுள் இருக்கும் அனைத்துத் தீய குணங்களுக்காகவும் இறந்து கிறிஸ்தவன் (கிறிஸ்து+அவன்/அவள்) என்பதைச் சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் காட்டுவோம். நல்ல கிறிஸ்துவாக வாழ முற்படுவோம்.

பங்கிராஸ் பலோமியற்
யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.


## தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் மற்றும் டிப்ளோமா நிலைகளுக்கான கற்கைநெறிகள்




GAA

மாணவர்கள் தெரிவு செய்யும் பாடநெறியின் கட்டணத்தில் 50% கட்டணத்தை மகேஸ்வரி நிதியம் செலுத்த முன் வந்துள்ளது. என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இச் சலுகை 28-3-2010 வரை மட்டுமே..!

- Diploma In Microsoft Office 2007
- Diploma In Desktop Publishing
- Diploma In Web Design
- Diploma In Computer Applications
- Ad.Diploma In Digital Pre Press
- Ad.Diploma In Video Editing

100% Practical

Student Visa, மற்றும் உள்நாட்டு,வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற சான்றிதழ்.

**Global Academy of Automations**

#5,First Floor, New Market Building,
Jaffna.
Tel : 011-3050111

## விற்பனைக்கு

பான்சிக் கடைக்குப் பாவித்த நல்ல நிலையில் உள்ள 08கண்ணாடி அலுமாரிகள், கண்ணாடிக் கவுண்டர், மேசை 02,கண்ணாடி சோக்கேஸ்02, முழுவதும் கலர் அலுமினியம் பிற்றிங்கினால் ஆனவை. பருத்தித்துறை பகுதியில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 077 4366704 (சி/565959)

## புறொயிலர் விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வீதியில் புறொயிலர் விற்பனை நிலையத்தில் தினமும் காலை 6 மணிமுதல் பிற்பகல் 7 மணிவரை உங்கள் முன்நிலையில் உடன் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் குறைந்த விலையில் தரமான புறொயிலர் கோழிகளைப் பெற்றுக் கொள்ளலாம். முற்பதிவுகளுக்கும், தொடர்புகளுக்கும்: 0772479332

## VISA VISA VISA

எந்த நாட்டுக்கும் எவ்வகையான VISAவுக்கும் தகுந்த ஆலோசனை பெற, அழையுங்கள் 0776953726 (ரவிக்குமார்)

## தவறிவிட்டது

கரம்பைக்குறிச்சி, வாணி என்னும் முகவரியுடைய அம்பிகைபாகன் முத்துலட்சுமி அம்மா எனபவரின் தே.அ.அ.இல (488282352V), லீசேட அண்டபாள அட்டை (091009076) நாச்சிமார் கோயிலடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 572/6, கஸ்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொடர்பு- 0776173039

## வாடகைக்கு

A9வீதியிலிருந்து 100மீற்றர் தூரத்தில் புங்கன்குளம் வீதியில் 3அறைகள் (ஒன்று குளியலறை இணைந்தது) குசினி,ஹோல் மற்றும் 6வாகனங்க [illegible]
[illegible] C.N.C.O.BANK நிறுவனங்களுக்கு ஏற்றது. TP.0779937402 (95730)

## ஜாதிக சம்பத

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 06
திகதி - 20.03.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து V அதிர்ஷ்ட இலக்கம் 2 வெற்றி இலக்கம் 7 7 6 4 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 2 | 7 | 7 | 6 | 4 | 5 | ரூ. 19,689,397.00 | பரிசு - |
| 1 பரிசு | | 2 | 7 | 7 | 6 | 4 | 5 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 7 | 7 | 6 | 4 | 5 | ரூ. 100,000.00 | பரிசு 04 |
| 3 பரிசு | | | | 7 | 6 | 4 | 5 | ரூ. 10,000.00 | பரிசு 29 |
| 4 பரிசு | | | | | 6 | 4 | 5 | ரூ. 1,000.00 | பரிசு 284 |
| 5 பரிசு | | | | | | 4 | 5 | ரூ. 50.00 | பரிசு 2791 |
| 6 பரிசு | | | | | | | 5 | ரூ. 20.00 | பரிசு 26764 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 7 | 7 | 6 | 4 | | ரூ. 1,000.00 | பரிசு 25 |
| 8 பரிசு | | | 7 | 7 | 6 | | | ரூ. 100.00 | பரிசு 278 |
| 9 பரிசு | | | 7 | 7 | | | | ரூ. 50.00 | பரிசு 2793 |
| 10 பரிசு | V | | | | | | | ரூ. 20.00 | பரிசு 11033 |
| 11 பரிசு | V | 2 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1221 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,184,040.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.20,128,921.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசு வரைந்துள்ள கோட்டுக்குள் சிக்கித்திணறி வரும் கூட்டமைப்பினர்

## தமிழருக்கும், சிங்களவருக்கும் தனித்தனி சுய அரசுகள் இரண்டும் இணைந்த கூட்டரசு என்பதே எமது கோரிக்கை

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இடதுசாரி விடுதலைமுன்னணிக் கட்சி சார்பில் வேட்பாளரு மாகப் போட் டியிடும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா 'உதயனுக்கு' வழங்கிய செவ்வி இது.

கேள்வி: எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் கட்சி போட்டியிடுவதன் நோக்கம் என்ன?

பதில்: தமிழ் இனம் இன்றைய கால கட்டத்தில் மிக நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளது. இந்த நிலையில் நேர்மையுடனும், துணிச்சலுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் செயற்படக்கூடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையென்பதால் நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

நீண்ட காலமாக எமது மக்கள் நீதிக்காகவும், அமைதியும், நிம்மதியும் நிலவும் உரிமை வாழ்வுக்காகவும் ஏங்கித் தவிக்கிறார்கள். அந்த மக்களை ஏமாற்றாமல் துரோகம் செய்யாமல் நேர்மையாகவும் தமது சக்திக்கு எட்டிய வகையிலும் முழு மூச்சோடு செயற்படக்கூடிய ஒரு தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்ற உறுதிப்பாட்டுடன் தான் நாங்கள் இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளோம்.

கேள்வி: தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து நீங்களாக விலகினீர்களா? அல்லது விலக்கப் பட்டீர்களா?

பதில்: நானோ அல்லது எனது அரசியல் சக நண்பர் சிவாஜிலிங்கமோ கூட்டமைப்பில் இருந்து விலகவில்லை.

### பிளவு வந்ததற்கு இதுவே காரணம்

இந்திய அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பொன்சேகா அணிக்குள்ளே தனது தலைமைப் பீடமொன்றை செயற்படும் விதத்தில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த விவகாரத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு அணியினராகப் பிளவு பட்டிருந்தனர்.

22பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் 18பேர் மட்டும் கலந்து கொண்ட கூட்டமொன்றில் 10:8 என்ற அடிப்படையில் பொன்சேகாவை ஆதரிப்பது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்த நேரம் லண்டனில் இருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தொலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பந்தருடன் உரையாடிய போது அவரும் பொன்சேகாவை ஆதரிப்பது என்ற விடயத்தில் உடன்படவில்லை. இருப்பினும் சம்பந்தர் அவருடைய கருத்தையும் செவிமடுத்ததாக இல்லை.

### சோனியா விரும்பிய முடிவை எடுத்தனர்

மாறாக சம்பந்தர், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகிய மூவரும் இணைந்து சோனியா காந்தி அரசாங்கம் விரும்பியபடி முடிவெடுத்தனர்.

கூட்டமைப்பு பொன்சேகாவை ஆதரித்தால் மட்டுமே ஜனாதிபதி மஹிந்த சிங்கள இனவாதத்தை முன்வைத்து விடுதலைப்புலிகளை தோற்கடித்த யுத்தத்தின் வெற்றியை சிங்கள வாக்குகளாக அறுவடை செய்ய முடியும் என்று இந்திய அரசாங்கம் கணக்குப் போட்டது. தனது நண்பனான மஹிந்தவை வெற்றி பெறச் செய்ய சோனியா காந்தி தலைமையிலான இந்தி அரசு திட்டம் தீட்டியது. அது கனகச்சிதமாக ஜனாதிபதித் தேர்தலில் அரங்கேறியது. மஹிந்தவும் மகத்தான வெற்றியைப் பெற்றார்.

இத்தகைய நிலையைக் கருத்திற் கொண்டுதான் போர் வெறியர்களான மஹிந்த ராஜபக்ஷவும், பொன்சேகாவும் வேண்டாம். இருவரையும் நிராகரிப்போம் என்று முடிவெடுத்தோம்.

அதனால் தான் நண்பர் சிவாஜிலிங்கத்தை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கினோம். சிவாஜிலிங்கம் தேர்தலில் எதிர்பார்த்த ஆதரவைப் பெறமுடியாவிட்டாலும் தேர்தலில் போட்டியிட்டதற்கான அறிவு பூர்வமான அடிப்படைக்காரணம் தேர்தல் முடிவுக்குப் பிறகு எமது மக்களால் மெல்லமெல்ல உணரப்பட்டது.

கூட்டமைப்பை எதிர்த்து நாம் இந்த முடிவெடுத்ததனால் அதன் எதிரொலியாக நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் இருந்து எம்மை தூக்கியெறிந்தது.

### எதிர்பார்த்தது தான் நடைபெற்றது

இத்தகைய முடிவை எதிர்பார்த்துத்தான் காத்திருந்தோம். நாம் நினைத்தது போல வேட்பாளர் பட்டியலில் எமது பெயர் இடம் பெறவில்லை. அதனை அடுத்தே "தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பு" என்ற பெயரில் கட்சியொன்றினை உருவாக்கினோம்.

வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை என்பதனால் தான் தங்கேஸ்வரி, கிஷோர் ஆகியோர் ஆளுங் கட்சியில் வேட்பாளர்களாக மாறினார்கள்.

நான்கு கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது நான்கு




துண்டுகளாகப் பிரிந்து, பிளவுபட்டுள்ளது. இதற்கெல்லாம் சம்பந்தர், சுரேஷ், மாவை ஆகியோர் மூலகாரணமாக விளங்கியுள்ளனர்.

கேள்வி: உங்களை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விலக்கி விட்டது என்றவுடன் உங்களுக்கு ஆளுங்கட்சியில் இருந்து அழைப்பு வந்ததா?

பதில்: ஆளும் கட்சிக்கு நாங்கள் யாரென்பது நன்கு தெரியும். வன்னியில் கொடூரமான அழிவு நடந்து கொண்டிருந்த போது சித்திரை மாதம் 22ஆம் திகதி நான் நாடாளுமன்றில் "வன்னியில் நேற்று மட்டும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளார்கள்" என்று உரையாற்றினேன்.

### நகைப்புக்கிடமானது

அப்போது ஆளுந்தரப்பில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னைப் பார்த்து 'உன்னை நாடாளுமன்றில் இருந்து தூக்கி எறிவோம்' என்று அச்சுறுத்தினார்கள்.

இந்தப் பின்னணியில் உங்களை ஆளுங்கட்சி அழைக்கவில்லையா? என்று கேள்வி கேட்பது நகைப்புக்கிடமாகவுள்ளது.

என்னையும் நண்பன் சிவாஜிலிங்கத்தையும் பொறுத்தவரை எங்கள் இருவரையும் விலைகொடுத்து வாங்குமளவுக்கு வலிமையானவர்கள் எவரும் இன்னும் பிறக்கவேயில்லை என்று மிகவும் தாழ்மையுடன் சொல்லிக் கொள்கின்றேன்.

கேள்வி:தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கையில் இருந்து விலகிவிட்டது என்று சொல்லிக் கொள்கிறார்களே. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கையில் இருந்து விலகிவிட்டது என்பது நூற்றுக்கு நூறு சரியானதே.

### இந்திய அரசின் கைப்பொம்மைகள்

இந்திய அரசின் கைப்பொம்மைகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்திய அரசு விரும்புகின்ற; இலங்கைத் தீவில் சிங்கள ஒற்றையாட்சியில் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் என்கிற அரைகுறை ஏற்பாட்டுக்குத் தூசு தட்டி, வெள்ளை அடித்து அங்குமிங்குமாகச் சில மாற்றங்களைச் செய்து ஒரு தீர்வுத் திட்டத்திற்கு இந்தியா தயாராகி வருகிறது.

இந்திய அரசாங்கம் வரைந்துள்ள கோட்டுக்குள் சம்பந்தர், சுரேஷ், மாவை ஆகிய அதிகாரத்தரப்பினர் சிக்கித்திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூட்டமைப்பு தனது கொள்கையில் இருந்து விடுபட்டுள்ளது என்று கூறுகிறார். நீங்களும் அதைத் தான் கூறுகிறீர்கள். அப்படியானால் கொள்கையில் இருந்து விலகிக்கொள் ளாத நீங்கள் அனைவரும் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டிருக்கலாமே?

பதில்: கஜேந்திரகுமாருக்கும் எங்களுக்குமிடையே ஒரு இணைப்பு முயற்சியொன்று தீவிரமாக நடைபெற்று வந்தது. கஜேந்திரகுமாருடன் நேரடியாகப் பேசுவதற்கு சிவாஜிலிங்கம் பலதடவை முயற்சியெடுத்தும் அது பலனளிக்கவில்லை. இருப்பினும் கஜேந்திரகுமார் அணியில் உள்ள தரப்பினர் எங்களுடன் பேச முயற்சித்து அந்தப் பேச்சுவார்த்தையில் சிவாஜிலிங்கம் மற்றும் எனது நீண்டநாள் நண்பரான கலாநிதி கெனடியையும் தமது கட்சியின் வேட்பாளர்களாகத் தந்துவிட்டு என்னையொரு ஆலோசகராக இருக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

### நான் ஆலோசகரா?

என்னை நம்புங்கள் கட்சியின் ஆலோசகராக இருக்கச் சொல்லுமாறு விடுக்கும் இந்தக் கோரிக்கை எவ்வளவு நகைப்புக்கிடமானது. இந்தக் கோரிக்கையினால் புதுவிதமான அரசியல் பண்பரடு உருவாகிறது. எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை அடக்கியபடி முடியுமானால் சிவாஜிலிங்கத்தை என்னிடமிருந்து பிரித்தெடுக்க முயற்சித்துப் பாருங்கள். அது உங்கள் கெட்டித்தனம் என்று கூறினேன்.

இருப்பினும் நண்பன் கலாநிதி கெனடியை தங்கள் பக்கம் கூட்டிச் சென்றுவிட்டார்கள். அவர் இப்போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

### கஜேந்திரகுமாரின் இரட்டை வேடம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றி மிகவும் கெட்டித் தனமாகப் பேசிவருகின்றனர்.

இலங்கைத் தீவில் இறையாண்மை, நில ஆதிபத்திய முற்றுகையையும் பேணிப்பாதுகாப்போம் என்று வேட்பாளர் நியமனப் பத்திரத்தில் அரசியலமைப்பின் கீழ் சத்தியப் பிரகடனம் செய்து கையொப்பமிட்டு இந்தத் தேர்தலில் போட்டியிடுவது நேர்மையானதல்ல. அது அவரின் இரட்டை வேடத்தைப் படம் போட்டுக் காட்டுகிறது.



கஜேந்திரகுமாரைப் போல மக்களை ஏமாற்றும் பம்மாத்து அரசியலுடன் நாங்கள் ஒத்துப்போக முடியாது. மக்களுக்கு நாங்கள் உண்மையாக - நேர்மையாக நடக்க வேண்டும்.

இன்றைய சர்வதேச நிலையில் நடந்துமுடிந்த யுத்தம் தந்திருக்கும் அனுபவப்படிப்பை வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றி எவரும் பேச முயற்சித்தால் அது வெறும் வாய் ஜாலமே.

கேள்வி: நீங்கள் இடதுசாரி விடுதலை முன்னணியில் போட்டியிடுவதன் நோக்கம்?

பதில்:எமது தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பானது புதிய அரசியல் கட்சி. அதனைப் பதிவு செய்வதற்குத் தேர்தல் ஆணையாளரிடம் அங்கீகாரம் கோரியிருந்தேன். அதற்கான கால அவகாசம் நீண்டு சென்றதால் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று நிற்கின்ற கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவின் கட்சியில் வடக்கு கிழக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களில் நாம் போட்டியிடுகின்றோம்.

### கடனுக்கு வாங்கிய குடைச் சின்னம்

தேர்தல் தேவைக்காக எதிர்வீட்டு நண்பனிடம் இருந்து குடைச் சின்னத்தைக் கடன் வாங்கியுள்ளோம். அவ்வளவுதான்.

கேள்வி: நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றால் எதிர்கால அரசியல் நகர்வுகள் எவ்வாறிருக்கும்?

பதில்: தமிழ் மக்களுக்கு ஒரு சுய அரசு, சிங்கள மக்களுக்கு ஒரு சுய அரசு இரண்டும் இணைந்த ஒரு கூட்டரசு. இத்தகைய கோரிக்கையை முன்வைத்தே நாம் நேர்மையாக எதிர்காலத்தில் செயற்பட விரும்புகின்றோம். எமது பலத்தையும் பலவீனத்தையும் உணர்ந்தவர்களாகச் செயற்பட விரும்புகிறோம். அதே நேரத்தில் எமது மக்களின் உடனடிப்பிரச்சினைகளான புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்ட மக்களினதும் இளைஞர் யுவதிகளினதும் விடுதலைக்காகப் பாடுபடுவேன்.

**சந்திப்பு: கவிநேசன்**

சட்டவிரோதமான சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவும் இராணுவ முகாம்களை அகற்றவும் கோரி தென்னிலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் ஆதரவு தேடும் நடவடிக்கையில் தீவிரமாகச் செயற்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா கோபாலரத்தினம்

(முன்னாள் குடியேற்ற அதிகாரி)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (சிறாம்பியடிலேன்) கொண்ட தம்பையா கோபாலரத்தினம் (19.03.2010) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- கண்ணம்மா தம்பதியரின் அருமை மகனும், மயில்வாகனம்-இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற சசிகலாவின் அன்புக் கணவரும், சியாமளா (ஜேர்மனி), சித்திரகுமாரன், இலங்கேசன் (பாரின்) ஆகியோரின் அன்புத்தந்தையும், நல்லம்மா, தங்கம்மா, பத்மநாதன், பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், மயில் அமிர்தலிங்கம் (முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி), சசிட தி சபாரத்தினம் (முன்னாள் ஆசிரியர், ஈழநாடு பத்திரிகை) ஆ ாரின் அன்பு மைத்துனரும், திருக்குமார் (ஜேர்மனி), பத்ம கே ரி, பத்மினி (பாரின்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்மினா, கஜினா, கார்த்திகா, சஞ்சயன், லிதேஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (22.03.2010) திங்கட்கிழமை மு.ப 10 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதன்பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 4 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ.சந்திரகுமாரன் (மகன்),
கோ.இலங்கேசன் (மகன்), தொ.பே: 0776140377

கொழும்பு.

## திருமதி கண்மணி துரைச்சாமி



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், நாவலர் றோட், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டு தற்போது வவுனியா, வேப்பங்குளத்தில் வசித்தவருமான திருமதி கண்மணி துரைச்சாமி (20.03.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்துவேலு- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், துரைச்சாமியின் அன்பு மனைவியும், துமாகாந்தன், காலஞ்சென்ற ரூபகாந்தன் மற்றும் செல்வகாந்தன், பிறேமளா, மஞ்சுளா, சியாமளா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சரவணமுத்து காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் சௌந்தரம், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நாகேஸ்வரி மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா வேப்பங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் -மு.சரவணமுத்து
தொ.பே: 0242220355.

இந்துக்கல்லூரி வீதி,
வடலியடைப்பு, யாழ்ப்பாணம்.

(95769)

## ஊமலுக்கும் திடீரென கிராக்கி

தென்மராட்சி கிழக்கு, மார்ச் 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் தேடுவாரற்றுக் கிடந்த ஊமலுக்கு தற்போது கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் குறிப்பாக வடமராட்சியில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளதை அடுத்தே ஊமலுக்கு கிராக்கி நிலவுகிறது.

புகையிலை உலர்த்துவதற்கு ஊமல் மற்றும் தேங்காய்மட்டை போன்றவையே பயன்படுத்தப்படுகின்றன.

சிறிய வாகனங்கள், மாட்டு வண்டில்களில் வருபவர்கள் வரணி மற்றும் கொடிகாமம் பிரதேசங்களில் வந்து ஊமல் ஏற்றுச்செல்வதை நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது.

(ஒ-122)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 79ஆம் ஆண்டு பூரட்டாதி 2 ஆம் பாதம், 7இல் ஆட்சி செவ்வாய், 63 கிரகபாவம், உயரம் 5'11'', சிவில் பொறியியலாளர், பட்டதாரியும் அதற்கு மேலுள்ள தகைமையும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021-3008263

## பிறின்சி போல்றி பாம்

புறொய்லர் குஞ்சு (நியூ பேணாட்ஸ்), முட்டைக்குஞ்சு, கோழி இறைச்சி, கால்நடைத் தீவனம் என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நாளை (23.03.2010) செவ்வாய்க்கிழமை குஞ்சு விநியோகம் நடைபெறும். அடுத்த விநியோகத்துக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.

380, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
இ.பீற்றர்தாஸ், 0776095749

## உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு

மெசி பெர்குசன் 135 மொடல் 49 XXXX இலக்கமுடைய உழவு இயந்திரம் பெட்டியுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு முகவரி: இல.15, நிறுநாக்கற், சுன்னாகம்.


# 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## முருகேசு பாலசிங்கம்

(சந்தம்புளியடி, காரைநகர்)

சப்தமி திதி: 2010.03.22

இவ்வுலகில் 1942.06.19

இறையுலகில் 1996.03.25

ஆண்டுகள் எத்தனை ஓடிமறைந்தாலும்
அகத்தினில் நிறைந்த உங்களை எப்படி மறப்பது
வேண்டுதலாலே உங்கள் விருப்பம் நிறைந்திட
வேளைகள் முழுதும் உங்கள் நினைவுகளுடன்......

118/2, சிவராசா அவெனியு.
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

திருமதி பா.யோகமலர் (மனைவி),
குடும்பத்தினர்.

(95761)

# மரண அறிவித்தல்

## திருமதி தவபாக்கியம் துரைராஜசிங்கம்



இடைக்காடு, பாடசாலை வீதியைச் சேர்ந்த திருமதி தவபாக்கியம் துரைராஜசிங்கம் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட மருத்துவ தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) நேற்று (21.03.2010) ஞாயிறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், துரைராஜசிங்கத்தின் அருமை மனைவியும், யசோதை (ஆசிரியை, இடைக்காடு ம.வி), சயந்தன் (ஆசிரியர், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), சனந்தனன் (ஆசிரியர், இடைக்காடு ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சி.இராசம்மா, மு.மனோன்மணி மற்றும் இ.சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
இடைக்காடு.

(95756)

தகவல்:
குடும்பத்தினர்.


# ஈழத் தமிழர்களுக்கு எதிரான இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை தோற்கடிக்க.......



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீகாந்தா-சிவாஜிலிங்கம் தலைமையில் வட-கீழ் மாநிலத்தின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் (யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

(இடதுசாரி விடுதலை முன்னணியின் சின்னத்தில்)

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு (TNLA)






X


# 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 29 ★ 12 ★ 1937



உதிர்வு 20 ★ 02 ★ 2010

தனங்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட

## மயில்வாகனம் பத்மநாதன்

எமது குடும்பத்தலைவர் இறைபதம் அடைந்த வேளையில் உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (22.03.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வீதி,
தலையாழி.

(சி/565966)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்; அமெரிக்கா - ரஷ்யா கைச்சாத்திடும்

மாஸ்கோ, மார்ச் 22

அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் கையெழுத்திட உள்ளன. இரு நாடுகளிடையிலான இந்த வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஏப்ரல் மாதம் கையெழுத்தாகும் எனத் தெரிகிறது. இத்தகவலை ரஷ்யாவிலிருந்து வெளியாகும் நாளிதழ் 'கோமர்சன்ட்' தெரிவித்துள்ளது.

செக்கோஸ்லோவேகியா தலைநகர் பிராகில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இந்த ஒப்பந்தத்தில் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்கி லாவ்ரோவும், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனும் கையெழுத்திட உள்ளனர்.

இந்த ஒப்பந்தம் இறுதி செய்வது தொடர்பாக இரு நாடுகளின் தலைவர்களும் ஜெனி வாவில் பேச்சு நடத்தியுள்ளனர். அணு ஆயுதங்களைக் குறைப்பது தொடர் பாக இரு நாடுகளிடையே 1991 ஆம் ஆண்டில் கைச்சாத் தான ஒப்பந்தம் கடந்த ஆண்டு டிசம்பரில் காலாவதியானது. இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுகளில் இதுவரை எவ்வித முடிவும் எட் டப்படவில்லை.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ரஷ்ய ஜனா திபதி திமித்ரி மெத்வதேவ் ஆகியோர் புதிய ஒப்பந்தம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் இரு நாடுகளிடமும் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 1,500 முதல் 1,675 ஆகக் குறையும்.

அடுத்த மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிக ளில் அணுசக்தி மாநாட்டை நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதற்கு முன்னர் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப் படவேண்டும் என்பதில் இரு நாடுகளின் தலைவர்களும் உறுதியாக உள்ளனர்.

இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு கீவ் தீவு தேர்வு செய்யப்பட்டது. ஆனால் அந்த இடத்தை அமெரிக்கா ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து தற்போது பிராக் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## நடுத்தர வயது எப்போது ஆரம்பம்?

சராசரியாக ஒரு மனிதனின் நடுத்தர வயது, 35 இல் ஆரம்பித்து 58 இல் முடிவடைகிறது என லண்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது. மனிதர்களின் வாழ்க்கை இளம் வயது, நடுத்தர வயது, முதுமை என மூன்றாகப் பிரிக்கப்படு கிறது. இந்த மூன்று பருவங்களின் வயது கணக்கீடு நாட்டுக்கு நாடு வித்தியாசப் படுகிறது.

போர்த்துக்கேயர்கள் 29 வயது வரை இளம் பருவமாகவும், 51 வயதானதும் கிழவராகவும் கருதுகின்றனர். சைப்ரஸ் நாட்டினர் 45 வயது வரை இளைஞராக நினைக்கின்றனர். பெல் ஜியம் நாட்டவர் 64 வயதில் தான் முதுமை பருவம் ஆரம்பமாகிறது எனக் கணக்கிடுகின்றனர்.

பிரிட்டனைப் பொறுத்தவரை இளம் பருவம் 35 வயதில் முடிகிறது. வயோதிகம் 58 இல் ஆரம்பிக்கிறது. 15 வயது முதல் 24 வயது வரை இளம் பருவமாகக் கருதப்படுகிறது. ஐரோப்பா முழுவதும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களிடம் எடுக்கப்பட்ட ஆய்வில் பிரிட்டனில் மேற்கொள்ளப்படும் கணக்கு தான் சரி என்கின்றனர்.

இன்னும் சிலர் 28 வயது வரை இளம் பருவம் என்றும் 54 வயது வரை நடுத்தர பருவம் என்றும் 67 வயதில் முதுமை தோன்றுகிறது என்றும் கூறுகின்றனர்.

# வடகொரிய அணுத் திட்ட விவகாரம்: 5 நாடுகளுடன் பேசுவதற்கு சீனா முடிவு

பீஜிங், மார்ச் 22

வடகொரிய அணுத் திட்டம் தொடர்பான 6 நாடுகள் பேச்சுகளை மீண்டும் தொடங்குவது குறித்து அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், வடகொரியா, தென்கொரியா ஆகிய 5 நாடுகளிடமும் விவாதிக்க சீனா முடிவெடுத் துள்ளது.

வடகொரியா அணுத் திட்டம் தொடர்பாக நடந்து வந்த 6 நாடுகள் பேச்சுகள் தடைப் பட்டுள்ளன. இந்தப் பேச்சுகளை மீண்டும் தொடங்குவது தொடர்பான ஆயத்தக் கூட்டத்தைக் கூட்ட அமெரிக்கா உள்ளிட்ட 6 நாடுகள் திட்டமிட்டுள்ளன.

இந்நிலையில், இந்தக் கூட்டத்தைக் கூட் டுவதற்கு முன்னர் 5 நாடுகளையும் அழைத்து அதிகாரபூர்வமற்ற பேச்சுகளை நடத்த சீனா திட்டமிட்டுள்ளது என அந்நாட்டு அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டத்தை தலைநகர் பீஜிங்கில் கூட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதில் சீனாவின் முயற்சி எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது தெரியவில்லை. ஆனால் தடைபட்டுள்ள வடகொரியா அணுத் திட்டம் தொடர் பான 6 நாடுகள் பேச்சுகளை மீண்டும் தொடங்க இக்கூட்டம் பெரும் உதவியாக இருக்கும் என்று சீனா நம்புகிறது என்றும் இந்த அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆக்கபூர்வமான விடயங்களுக்கு மட்டுமே வடகொரியா அணுத் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தவேண்டும் என்று சீனா விரும்பு கிறது. இதுகுறித்து அந்நாட்டிடம் பல தடவை கள் வலியுறுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் வட கொரிய துணை வெளியுறவு அமைச்சர் கிம் கேகுவான் சீனா வந்த போதும் இதுகுறித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது என்று சீன அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் விளம்பர நாயகியாகும் பொலிவூட் நடிகை கரீனா கபூர்!

கராச்சி, மார்ச் 22

பாகிஸ்தான் விளம்பரங்களில் கொடி கட்டிப் பறந்து வருகிறார் பொலிவூட் நடிகை கரீனா கபூர். 'பாகிஸ்தான் விளம்பர நாயகி' என்று சொல்லும் அளவுக்கு முக்கிய நகரங்களில் திரும்பும் திசைகளிலெல்லாம் விளம்பரப் பலகைகளில் கரீனா கபூரைத்தான் காணமுடிகிறது.

கரீனா கபூரை தங்களது பக்கம் இழுத்து விட வேண்டும் என்ற கடும் போட்டி பாகிஸ்தான் வர்த்தக நிறுவனங்களிடையே நிலவுகிறது. சில சிறிய நிறுவனங்களும் கரீனா கபூரை தங்கள் பக்கம் கவர போட்டிக்களத்தில் வரிந்து கட்டி நிற்கின்றன. இதற்காக எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் கரீனாவுக்கு கொட்டிக் கொடுக்கத் தயாராகவும் உள்ளன.

பாகிஸ்தானில் முன்னணி ஆடை தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான பிர்தொஸ் லோன்ஸ் என்ற நிறுவனம் தங்களது விளம்பரத்தில் நடிக்க கரீனா கபூருக்கு ரூ. 9 கோடி கொடுத்துள்ளது.

பாகிஸ்தானில் கரீனாவை தங்களது விளம்பரங்களில் நடிக்க வைக்க முயற்சிக்கும் அனைத்து வர்த்தக நிறுவனங்களுமே தங்க ளுக்குப் பணம் பெரிதல்ல. அவர் எங்களது விளம்பரத்தில் நடித்தாலே போதும் என்றே கூறுகின்றன. இதை உற்று நோக்கும் அந்நாட்டு சினிமா விமர்சகர்கள், கரீனா காட்டில் காசு மழை கொட்டத் தொடங்கி விட்டது என்கின்றனர்.



கரீனா வருகையால் உற்சாகம் அடைந்துள்ள பாகிஸ்தான் விளம்பர முகவர்கள், கரீனாவால் எங்கள் நாட்டின் விளம்பரச் சந்தை புதிய காற்றை சுவாசிக்கத் தொடங்கியுள்ளது என்கின்றனர். பொலிவூட் ரசிகர்களின் கனவுக் கன்னியாக வலம்வரும் கரீனா கபூர், பாகிஸ்தான் விளம்பரத்தால் கவரப்பட்டுள்ளதால் அவரது இரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

அவர் சினிமாவுக்கு முழுக்குப்போட்டு பாகிஸ்தான் விளம்பரத்திலேயே மூழ்கிடுவாரோ, மூட்டையைக் கட்டிக்கொண்டு அவர் அங்கு சென்றிடுவாரோ என்று அவரது இரசிகர்கள் நினைக்கத் தொடங்கியுள்ளனர்.

# மனிதர்கள் நினைப்பதை கண்டுபிடிக்க கணனி

லண்டன், மார்ச் 22

பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள், மனிதர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை படிக்கும் வகையிலான கணனிகளை வடி வமைத்துள்ளனர். இதுகுறித்து, லண்டன் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மற்றும் அவரது சகாக்கள் கூறியவை வரு மாறு:-

கணனியால் மனிதர்களின் மூளையை ஸ்கேன் செய்வதன் மூலம், அவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை புரிந்து கொண்டு, அவற்றை அப்படியே வெளிப் படுத்த முடியும்.

இதற்காக, பத்து தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களுக்கு சில பெண்கள் கடிதங்களைத் தபால் பெட்டி யில் போடுவது, பேப்பர் கப்பில் கோப்பி அருந்துவது போன்ற காட்சிகள் அடங்கிய, சில வினாடிகள் மட் டுமே ஒளிபரப்பாகக் கூடிய படம் காண்பிக் கப்பட்டது.

அதன் பின்னர், அவர்கள் என்ன பார்த்தனர் என்பதை திரும்ப நினைவுப் படுத்திப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டனர். அப்போது ஸ்கேனர் கருவி மூலம் மூளையில் ஏற்படும் இரத்த ஓட்ட மாறுதல்களை வைத்து அதன் செயல்பாடு பதிவுசெய்யப்பட்டது.

பின்னர், அந்த மின்சாரத் தகவல்களை அதற்கென உருவாக்கப்பட்ட கணினி நிகழ்ச்சி மூலம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் நினைவுகூர்ந்ததில் 50 சதவீதம் துல்லியமாக வெளிப்ப டுத்தப் பட் டது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தென்கொரிய ஆண்களை மணக்க கம்போடியப் பெண்களுக்குத் தடை

நாம்பென், மார்ச் 22

கம்போடியாப் பெண்கள், தென்கொரியாவைச் சேர்ந்த ஆண்களை திருமணம் செய்துகொள்ளத் தடைவிதிக்கப் பட்டுள்ளது. ஆட்கடத்தலை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கம்போடியா அரசின் செய்தித்தொடர்பாளர் கோய் குவாங் இது குறித்துக் குறிப்பிடுகையில், "கம்போடியாவில், கிராமப் பகுதியைச் சேர்ந்த 25 பெண்களை, ஆசைக்காட்டி அழைத்துச் சென்ற ஒரு பெண் சமீபத்தில் கைதுசெய்யப்பட்டார். அந்தப் பெண்கள் ஒவ்வொருவருக்கும், தென்கொரிய ஆண்களை திருமணம் செய்துகொள்ள பணம் கொடுக்கப்பட்டிருந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணுக்கு கம்போடியா நீதிமன்றம் சமீபத்தில், 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது" என்றார்.

"எனவே, ஆட்கடத்தலை தடுக்கும் வகையில், கம்போடியாப் பெண்கள், தென் கொரியாவைச் சேர்ந்த ஆண்களைத் திருமணம் செய்துகொள்ள தற்காலிகத் தடைவிதிக் கப்பட்டுள்ளது. இந்த விவரம், கடந்த 5 ஆம் திகதியே, நாம்பென்னில் உள்ள தென்கொரிய தூதரகத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. தடை உத்தரவு பின்னர் நீக்கப்படுமா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கமுடியாது" என்றும் கோய்குவாங் கூறினார்.

"ஆட்கடத்தல் தடுப்புத்துறையின் பொலிஸ் உயரதிகாரி பித் கிம்ஹாங் கூறுகை யில், "தென் கொரிய ஆண்களை மணமுடிக்க சம்மதித்த ஒவ்வொரு பெண்ணிடமிருந்தும், குற்றஞ்சாட்டப்பட்ட பெண் பெரும்தொகையான கட்டணம் வசூலித்துள்ளார். திருமணங்களுக்கு முகவர்கள் உதவிசெய்ய தடைவிதிக்கப் படுகிறது. திருமணங்களுக்கு கமி ஷன் வாங்குவது சட்டவிரோதமானது. கம் போடியாப் பெண் மனைவியாக வரவேண் டும் என விரும்புவோர், கிராமம் அல்லது சமு தாய அளவில் பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்துகொள்ளலாம்" என்றார்.

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்தோப்பர் பிறேமன் (G.A.Q மாணவன் 2011)



அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோபர் பிறேமன் நேற்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற எறிக்யேசுதாஸ் கிறிஸ்தோபர் மற்றும் ரஞ்சனி (சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை) தம்பதியரின் அன்பு மகனும் சாமினியின் (விரிவுரையாளர், Computer Express, Jaffna) அன்புச் சகோதர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
ரஞ்சனி கிறிஸ்தோபர் , கி. சாமினி,
பீ. இராஜலிங்கம் (தாத்தா).

10 A, வைமன் வீதி,
நல்லூர். (95718)

### விசாலாட்சி இராமலிங்கம் (வேலணை, நெடுந்தீவு)



வேலணை, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவில் வாழ்ந்தவருமான திருமதி விசாலாட்சி இராமலிங்கம் நேற்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி பெரியதம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மருதப்பு இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், செல்லத்துரை (வேலணை), அமரர் பகவதி நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேலணை தெற்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செல்லத்துரை (சகோதரர்).

வேலணை - 6 (95779)

## மரண அறிவித்தல்

### ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி



புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், ஓராம் கட்டை, புலோலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (உரிமையாளர், வட.இந்துமகளிர் கல்லூரி முன்பாக உள்ள பாப்பா கடை) 19.03.2010 வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்ளான வெற்றிவேல் தம்பதியினரின் மருமகனும், சாவித்திரியின் அன்புக் கணவரும், சுபாகினி (அவுஸ்திரேலியா), சிவநேசன் (அவுஸ்திரேலியா), புனிதினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவிதன் (அவுஸ்திரேலியா), மயூரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விநாயகமூர்த்தி (முன்னாள் முகாமையாளர், புலோலி ப.நோ.கூ.ச.), திருபாக்கியம் (திருமகள்), தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தில்லை நடேசன் மற்றும் பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஹரினி, சிரானி, துளசி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (20.03.2010) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. விநாயகமூர்த்தி
(ஓய்வுபெற்ற முகாமையாளர்,
புலோலி ப.நோ.கூ. சங்கம்)

புளியடி வளவு,
புலோலி தெற்கு,
புலோலி. (சி-565975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா ஹெட்லியிடம் விசாரணை நடத்த முடியும் என்கிறார் சிதம்பரம்!



புதுடில்லி, மார்ச் 22

அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ள தீவிரவாதி ஹெட்லியிடம் இந்தியா விசாரணை நடத்தும் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.

ஹெட்லி, தன் மீதான 12 குற்றச்சாட்டுகளையும் அமெரிக்காவின் சிகாகோ நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

அவருக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது. மரணதண்டனையிலிருந்து தப்பிக்கவே அவர் தன் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ஹெட்லி விவகாரம் குறித்து உள்துறை அமைச்சர் சிதம்பரம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஹெட்லி விவகாரம் தொடர்பாக வெள்ளிக்கிழமை இரவு அமெரிக்க சட்டமா அதிபர் மற்றும் நீதித்துறை தலைவர் எரிக் ஹோல்டருடன் தொலைபேசியில் பேசினேன்.

அவருடன் ஆலோசனை நடத்திய பின்னர் ஹெட்லியிடம் கேட்கவேண்டிய கேள்விகள் குறித்து அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்புக்கும் (என்.ஐ.ஏ.), மற்றப் புலனாய்வு அமைப்புகளுக்கும் யோசனை தெரிவித்தேன்.

முறையான, சட்டப் படியான வழிமுறைகள் மூலம் ஹெட்லியிடம் இந்தியா விசாரணை நடத்தும். இதில் எனக்கு நம்பிக்கையுள்ளது. இந்தியாவின் விசாரணைக்கு ஹெட்லி முழு ஒத்துழைப்பு கொடுப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



இந்தியாவில் நடந்த தாக்குதல்களுக்காகப் பாகிஸ்தானில் உள்ள லஷ்கர்-இ-தொய்பா கூட்டாளிகளுடன் சதியில் ஈடுபட்டுள்ளார் என ஹெட்லியே தெரிவித்துள்ளார். மேலும் அங்குள்ள தீவிரவாதிகளுடன் அவர் நெருக்கமாக பழகியுள்ளார். லஷ்கர்-இ-தொய்பா மட்டுமல்லாமல் வேறு சில தீவிரவாத அமைப்புகளுடன் அவருக்குத் தொடர்பு இருந்துள்ளது.

ஹெட்லியுடன் தீவிரவாத சதியில் சம்பந்தப்பட்டவர்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க அமெரிக்கா வலியுறுத்த வேண்டும். இந்த நடவடிக்கையை பாகிஸ்தான் எடுத்தால் மட்டுமே இந்தியாவும், மற்ற உலக நாடுகளும் திருப்தி அடையும் - என்றுள்ளது.

இதேவேளை, தீவிரவாதி ஹெட்லியிடம் விசாரணை நடத்த இந்தியாவுக்கு அனுமதி அளிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறைத் துணை அமைச்சர் ரொபா[illegible] எனக் கூறினார்.

அதே நேரத்தில் அவரை இந்தியாவுக்குக் கொண்டுசென்று விசாரிக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# வீட்டு உபயோகப் பொருள்களை இலங்கைக்குக் கடத்தத் திட்டம்

## புலனாய்வுத் துறை விசாரணை

இராமேஸ்வரம், மார்ச் 22

இலங்கைக்கு வீட்டு உபயோகப் பொருள்களைக் கடத்தத் திட்டமிட்டுள்ள கும்பல் குறித்து, புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் அமைதி திரும்பியுள்ளதால், தமிழக முகாம்களில் உள்ள அகதிகள், இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கை மேற்கு கடலோரக் கிராமங்களில் தமிழர்கள் குடியேற தொடங்கியுள்ளனர். இவர்களுக்கான வீட்டு உபயோகப் பொருள்களை, தமிழகத்திலிருந்து கடத்திச் செல்ல பலர் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பலர் கடவுச்சீட்டு மூலம் இலங்கை சென்று, மன்னார் உள்ளிட்ட கடலோரப் பகுதியில் முகாமிட்டு இதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என இங்குள்ள புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. மீன்பிடித் தொழில் சீராக இல்லாததால் வருமானத்திற்காக இது போன்ற கடத்தலுக்கு மீனவர்கள் சிலரும் துணை போகத் தயாராகி விட்டனர்.

இலங்கையர்களுடன் சேர்ந்து வீட்டு உபயோகப் பொருள்கள் கடத்தல் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட இருப்பது குறித்து தகவல் கிடைத்துள்ளதால், இராமேஸ்வரம், பாம்பன் மற்றும் மண்டபம் பகுதி கடத்தல்காரர்கள் குறித்து பல்வேறு தகவல்களை, தமிழக புலனாய்வுத் துறையினர் சேகரித்து வருகின்றனர். இதையறிந்த இராமேஸ்வரம் பகுதி முன்னாள் கடத்தல் புள்ளிகளும், சமீபத்தில் கடவுச்சீட்டு விசாவில் அடிக்கடி இலங்கை சென்று வந்தவர்களும் தலைமறைவாகி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம்களுக்கு ஒதுக்கீடு அளித்தால் பெண்கள் பிரேரணையை எதிர்ப்போம்

## பா.ஜ.க. திட்டவட்டம்

புதுடில்லி, மார்ச் 22

மக்களவை, சட்டப்பேரவைகளில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கும் வகையில் மகளிர் இட ஒதுக்கீட்டுப் பிரேரணையில் திருத்தம் செய்தால் அதை பா.ஜ.க. கடுமையாக எதிர்க்கும். பிரேரணையை மக்களவையில் ஆதரிக்காது - என்று அக்கட்சியின் முன்னாள் தலைவர் ராஜ்நாத் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஆங்கில இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போதே அவர் இதைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

மகளிர் இடஒதுக்கீட்டுப் பிரேரணையில் சமய அடிப்படையிலான உள்ஒதுக்கீட்டை புகுத்தாததையே அந்தப் பிரேரணையின் பலமாக பா.ஜ.க. நினைக்கிறது. இதனால் தான் தனது முழு ஆதரவையும் அந்தப் பிரேரணைக்கு அளித்து மாநிலங்களவையில் நிறைவேற ஒத்துழைத்தது.

இந்நிலையில் முஸ்லிம்களுக்கு உள் ஒதுக்கீடு அளிக்கும் விதத்தில் பிரேரணையில் திருத்தத்தைக் கொண்டுவர காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு திட்டமிட்டுள்ளது என தெரியவந்துள்ளது.



இதுதொடர்பாக முலாயம் சிங், லாலு பிரசாத், சரத் யாதவ் ஆகிய மூவரிடமும், தேசியவாத காங்கிரஸ் தலைவரும், மத்திய அமைச்சருமான சரத் பவார் உறுதி அளித்துள்ளார் எனக் கேள்விப்பட்டுள்ளோம்.

முஸ்லிம்களுக்கு உள் ஒதுக்கீடு அளிக்க பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் சம்மதித்துள்ளனர் என எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் இந்த அணுகுமுறையை பா.ஜ.க. கண்டிக்கிறது -

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 03 ★ 12 ★ 2005



உதிர்வு 20 ★ 02 ★ 2010

## செல்வன் மதியழகன் பிரவின்

எம் பிரியமான பிரவினே!
நெஞ்சம் வலிக்குதய்யா - உந்தன் பிரிவதனால் ..
நெகிழ்ந்து துடிக்கின்றோம் - கஞ்சன்
உன்னிடமா வந்தான்
வாழ்வைத் தொடங்க முன்னம் - உன்னை
எம்மிடமிருந்து தட்டிப் பறித்தின்று முப்பத்தொரு நாள்!
காலக் கடிகாரம் எம் வீட்டில்
நின்றின்று முப்பத்தொருநாள் !
கனவு போல் இருக்கிறதடா
எப்படி வந்தான் ஜமன் உன்னிடமென்று
நம்ப மனம் மறுக்குதடா
ஒன்றுமில்லை ஒன்றுமில்லையென்றார்கள்
அவர்கள் தான் உனக்கு ஜமனாக நின்றார்கள்
எம் வீட்டுப் பூமலரை பிய்த்தல்லோ எறிந்தார்கள்
வீடெங்கும் வெறிச்சோடிக்கிடக்குதடா..
உன் செல்லக் குரல் கேட்டு ஒரு மாசமானதடா ..
ஓடியாடா.... என் செல்லப் பிரவின் குட்டி !
மீண்டும் எம்மோடு வந்து விளையாட மாட்டாயா?
நீ எறிந்த எறிந்த இடத்தில் கிடக்கிறது
உன் விளையாட்டுச் சாமான்கள்
உன் ஞாபகத்தைச் சுமந்தபடி ....
விதியென்ற ஒன்று எல்லோர்க்கும் பொதுதான்
ஆனாலும் .... அவசரப்பட்டு விட்டாய்
காலங்கள் கடந்தாலும் உன் நினைவு அழியாது
உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்தபடி

பிறீமன், ஜேர்மனி.

உன் அப்பா,
அம்மா, அண்ணா.

# தமிழகத்தில் காங். தனித்துப் போட்டி; திருச்சி வந்த ராகுல் காந்தி சம்மதம்

திருச்சி, மார்ச் 22

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி கூட்டணியின்றி தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் காந்தி சம்மதம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் திருச்சி வந்த ராகுலும், பிரியங்காவும் இளைஞர் காங்கிரஸ் தேர்தலை நேரில் பார்வையிட்டனர். தேர்தல் நடக்கும் இடங்களைப் பார்வையிடும்போது, கட்சி நிர்வாகிகள் யாரும் அவருடன் அனுமதிக்கப்படவில்லை.

வாக்குப்பதிவுப் பணிகளைப் பார்வையிட்டு வெளியே வந்த ராகுல், ஊராட்சித் தலைவர் விஜயா சேகரிடம், இளைஞர் காங்கிரஸ் தேர்தல் எப்படி நடக்கிறது எனக் கேட்டார். அதற்கு அவர், தேர்தல் மிகவும் சிறப்பாக நடத்தப்படுகிறது எனச் சான்றளித்தார்.

மாவட்ட காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு நிர்வாகி நாகராஜன், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேளாண் பணிகளையும் இணைக்க வேண்டும் எனக் கேட்டதற்கு ராகுல், பரிசீலிக்கலாம் - என்றார்.

கட்சியினர் பலர், இளைஞர் காங்கிரஸ் தேர்தல் சிறப்பாக நடத்தப்படுவது போலவே கட்சி நிர்வாகப் பொறுப்புகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்றனர். இதுகுறித்து, கட்சி உயர்மட்டக் குழுதான் முடிவெடுக்க வேண்டும் - என்றார்.

ஒய்.எம்.சி.ஏ. வளாகத்தில் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர் ஹரிணி, ராகுலிடம் கூறும் போது, நான் இளைஞர் காங்கிரஸில் உறுப்பினராக இருப்பதால் பயன் என்ன எனக் கேட்டார். அதற்கு அவர் பதில் அளிக்கும் போது, சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, சட்டசபை உள்ளிட்ட தேர்தல்களில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படும் - என்றார்.

திருச்சி லோக்சபா தொகுதி இளைஞர் காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஷ், நாம் தேர்தலில் (தமிழகத்தில்) கூட்டணியின்றி தனித்துப் போட்டியிட வேண்டும் என்றார். அனைவரும் ராகுலின் பதிலை ஆர்வத்தோடு எதிர்பார்க்க, தலையை அசைத்தவாறு, 'ஆம்' எனச் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

[illegible] இளைஞர் காங்கிரஸ் தேர்தல் [illegible] பெற்றுள்ளது எனக் கூறப்படுகிறது.


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 541
திகதி 2010/03/20

சுப்பர் இலக்கம் 03
வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 31 45 63

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின | ரூ. 24,077,861.60 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | [illegible] | ரூ. 50,000.00 | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 | 201 |
| நான்காம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 | 398 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 | 10,437 |
| ஆறாம் பரிசு | [illegible] | ரூ. 50.00 | 5,981 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 | 150,696 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 30.00 | 24,151 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,581,200.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 24,163,428.00

தேசிய லொத்தர் சபை



## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம்

மீண்டும் யாழில்

20.03.2010-25.03.2010 வரை சந்திக்கலாம்

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம், நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப்பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு)(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்த வித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

மானிப்பாய் வீதியில் ஜனசக்திக்கும் வைத்தீஸ்வராச் சந்திக்குமிடையில் "செல்வ மாளிகை" இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

(சி/565908) T.P: 0719315664, 0777569205


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. இனவாதக் கட்சியல்ல; இனமுரண்பாடுகளை நீக்க முயல்கிறோம்

## உடுப்பிட்டியில் சோமவன்ஸ தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 22

ஜே.வி.பி.இனவாதக் கட்சியல்ல, இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒன்றுபட்டு முரண்பாடு அற்ற நிலையில் வாழக்கூடிய சூழல் உருவாக வேண்டும் என்பதற்காகவே ஜே.வி.பி. போராடி வருகிறது.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உடுப்பிட்டிச் சந்திக்குச் சமீபமாக ஜே.வி.பியின் கிளை அலுவலகம் ஒன்றை நேற்று மாலை திறந்து வைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரசேகரன் மற்றும் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிளை அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் சோவன்ஸ மேலும் தெரிவித்தவை வருமாறு :-

எமது கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை தமிழ் மக்களுக்கு விரோதமாக எந்தவிதச் செயற்பாடுகளிலும் நாம் ஈடுபடவில்லை.

ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டன; செயற்பட்டு கொண்டிருக்கின்றன.

அக்கட்சிகள் போன்று தமிழர்களை நாம் கொன்று குவிக்கவில்லை. அவர்களின் உடைமைகளை அழிக்கவில்லை; சூறையாடவில்லை.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையைக் கட்டி எழுப்பும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வந்துள்ளோம்.

எமது கட்சியின் கிளைகள் ஏற்கனவே கிளிநொச்சி, சுன்னாகம் ஆகிய இடங்களில் இயங்கின. எனினும் நாட்டு நிலைமை காரணமாக அவை செயலிழந்தன. மீண்டும் இங்கு இன்று எமது கட்சியின் கிளை திறக்கப்பட்டுள்ளது - என்றார்.

கிளை திறப்புவிழா நிகழ்வை அடுத்து அந்தப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டி பிரசாரப்பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர். (1-120)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி வடக்கு, மார்ச் 22

ரஞ்சனாஸ் புடைவையக நிறுவனத்தின் ஆதரவுடன் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

பெண்கள்

காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர் அளவெட்டி டயானா வி.க.

ஆண்கள்

அச்சுவேலி ஆவரங்கால் மத்தி வி.க. எதிர் அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.க.

மற்றும் காட்சிப் போட்டி, இசையும் அசைவும் என்பனவும் நடைபெறவுள்ளன.

இந்த இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கழக மைதானத்தில் சி. தயாளபாலன் தலைமையில் மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாகவும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் வீரசிங்க, யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கச் செயலாளர் கி.மனோகரன், ரஞ்சனாஸ் நிறுவன உரிமையாளர் சு.கன கநாயகம் ஆகியோர் கலந்துகொள்வுள்ளார்கள்.

(ஒ-1-86)

# அனோமா பொன்சேகாவும் அனுரகுமரவும் இரகசியப் பொலிஸாரால் விசாரிக்கப்படுவர்

கொழும்பு, மார்ச் 22

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் மீதும் விசாரணை நடத்த புலனாய்வுப் பிரிவினர் திட்டமிட்டுள்ளனர் என்று பொன்சேகாவின் கட்சியான ஜன நாயக தேசிய முன்னணி நேற்றுத் தெரிவித்தது.

எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ளத் தாம் தயார் என்றும் தம்மிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை என்றும் அக்கட்சி மேலும் கூறியுள்ளது.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செய லாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொன்சேகாவும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இப்போது பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரையும் விசாரணை செய்யப் புலனாய்வுப் பிரிவினர் முடிவெடுத்துள்ளனர்.

இந்த மாதம் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் விசரணைகளுக்காக புலனாய்வுத் துறையினரின் அலுவலகத்துக்கு வருமாறு அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேசத் துரோக நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழேயே அநுரகுமார விசாரிக்கப்படவுள்ளார் என்று புலனாய்வுத் துறையினர் அவரிடம் தெரிவித்துள்ளனர்.

அதேபோல், அனோமா பொன்சேகாவையும் விசாரிக்கப் போகிறார்கள் என்று புலனாய்வுப் பிரிவினர் அனோமாவிடம் தொலைபேசியில் கூறியிருக்கின்றனர். இது எம்மை அடக்கி ஒடுக்கும் அரசின் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

அரசின் எந்தவிமான மிரட்டல்களுக்கும் நாம் பயப்படமாட்டோம். .எதையும் எதிர்கொள்ள நாம் தயார். நாம் பல மிரட்டல்களைக் கடந்து வந்தவர்கள். இந்த சலசலப்புக்கெல்லாம் நாம் மசியமாட்டோம். - என்றார்.

### இந்த நிலைமை ஏற்படும் என்று தமக்குத் தெரியும் என்கிறார் அனோமா

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அனோமா பொன்சேகா கூறியவை வருமாறு:-

என்னை விசாரிக்கப்போவதாக புலனாய்வுப் பிரிவினர் தொலைபேசி வாயிலாக என்னிடம் கூறினர். நான் அவர்களை அதற்காக எனது வீட்டுக்கு வரச்சொல்லியிருக்கின்றேன். இதுபோன்றதொரு நிலைமை ஏற்படும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதை நான் புலனாய்வுப் பிரிவினரிடம் கூறினேன்.

நான் பயப்படாமல் இந்த விசாரணையை எதிர்கொள்வேன். ஒழிப்பதற்கு என்னிடம் எதுவுமில்லை. நான் வெளிப்படையாக இருக்கின்றேன். எனது கை சுத்தமானது. -என்றார்.

# கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள எஞ்சிய மக்களையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்

## ஐ.தே.க. வேட்பாளர்களிடம் படை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யுத்தம் காரணமாக கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து இன்னமும் மீள்குடியமர்த்தப்படாது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை மிக விரைவில் மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று இராணுவ உயர் அதிகாரிகள், ஐக்கியதேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் ஆகியோரிடம் உறுதியளித்துள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த திருமதி விஜயகலா மகேஸ்வரனும், எஸ்.ஸ்ரீகஜனும் மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சந்திப்புக் குறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முகாம்களில் மீளக்குடியேற்றப்படாது தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர். இவர்களைக் கூடிய விரைவில் மீள்குடியேற்ற வேண்டியதன் அவசியத்தையும் இவர்கள் வலியுறுத்தினர்.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் மக்களை மீள்குடியேற்றப்பட்டுள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்த வேட்பாளர்கள் இருவரும் மக்களைச் சந்தித்து அவர்களின் முறைப்பாடுகள் குறித்தும் கேட்டறிந்துள்ளனர்.

கிளிநொச்சி விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூறியதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பிட்ட பகுதிகளிலேயே மக்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர். மீளக்குடியேற்றப்பட்ட மக்கள் உரிய வசதிகள் இன்றி கஷ்டப்படுவதை காணக்கூடியதாக இருந்தது. இடிந்த வீடுகளிலும், தகரக் கொட்டகைகளுக்குள்ளேயுமே மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்த மக்களின் சோகக் கதைகளைக் கேட்ட போது எமக்கு அழுகை வந்தது. அந்தளவுக்கு கஷ்டதுன்பங்களை அனுபவித்த மக்கள் இனியாவது நிம்மதியாக வாழ வேண்டும். அதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்து முகாம்களில் வாடும் மக்களும் துரிதகதியில் மீளக்குடியேற்றப்பட வேண்டும். இவர்களுக்குரிய வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். உறவுகளையும் உடைமைகளையும் இழந்து தவிக்கும் இந்த மக்களுக்கு விமோசனம் ஏற்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் நாம் எடுப்போம் - என்றார். (1)

# தேர்தல் வன்முறைகள் இது வரை 147

கொழும்பு, மார்ச் 22

தேர்தல் சட்டதிட்டங்களை மீறிய சுமார் 147 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இவற்றில் 87 பாரிய வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சிகளுக்கிடையிலான மோதல், சட்ட விரோதமான முறையில் உடைமைகளைப் பயன்படுத்துதல் மற்றும் தேர்தல் சுவரொட்டிகள் ஆகியவை தொடர்பாகவே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் வண்ணம் செயற்பட வேண்டுமெனவும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

# இந்தியாவையும் பொன்சேகாவையும் மோத விட்டுப் பார்க்க அரசு முயற்சி

## ஜே.வி.பியின் விஜித ஹேரத் குற்றச்சாட்டுகிறார்

கொழும்பு, மார்ச் 22

யுத்த காலத்தில் பாதுகாப்புச் சபையில் ஜெனரல் சரத் பொன்சேகாவால் முன்வைக்கப்பட்ட யுத்த யோசனைகள் மற்றும் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் போன்றவற்றைத் திரிபுபடுத்தி இந்தியாவுக்கும் பொன்சேகாவுக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படும் விதத்தில் இலங்கை அரசு சிங்கப்பூர் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் நேற்றுக் கூறினார்.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பொன்சேகாவைப் பழிவாங்கும் நோக்கில் அரசு அவரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளது. வெவ்வேறு விதமாக அரசு அவரைப் பழிவாங்கிக்கொண்டு வருகிறது.

யுத்த காலத்தில் சரத் பொன்சேகா பாதுகாப்புச் சபையில் பல யோசனைகளை முன்வைத்தார். அந்த யுத்த யோசனைகளை பொன்சேகாவுக்குப் பாதகமான வகை யில் திரிபுபடுத்தி அவற்றை அரசு ஊடகங் களுக்குத் தெரிவித்து வருகின்றது.

இவ்வாறு திரிபுபடுத்தப்பட்ட விடயம் ஒன்றை அரசு சிங்கப்பூர் ஊடக நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளது. அது பொன்சேகாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது.

பாதுகாப்புச் சபையில் பேசப்பட்ட விடயங்களை வெளியே தெரிவிக்கும் உரிமை எவருக்குமில்லை. அப்படித் தெரிவிப்பது தேசத்துரோகமாகும். அந்தத் தேசத்துரோகத்தை அரசு இப்போது செய்து வருகின்றது. யுத்தத்தை வென்று தந்த ஓர் இராணுவத் தளபதியை சர்வதேச மட்டத்தில் அவமானப்படுத்தும் அரசின் செயற்பாட்டைப் பார்த்து நாம் வெட்கப்படுகின்றோம்.

அரசின் இந்த அநியாயத்திற்கு எதிராக மக்கள் நல்ல பாடம் புகட்டவேண்டும். அராஜக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க மக்கள் ஒன்றுபட வேண்டும் -என்றார்.

# சனல்-4 ரி.விக்கு பொன்சேகாவின் கடிதம் போனது எப்படி? அவரிடமே விசாரணை

கொழும்பு, மார்ச் 22

'சனல் - 4' தொலைக்காட்சிக்கான கடிதத்தை சரத் பொன்சேகா எவ்வாறு வெளியே அனுப்பினார் என்பது தொடர்பாக அரசு அவரிடம் விசாரணை நடத்தவுள்ளது.

இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா, குறிப்பிட்ட கடிதத்தை எவ்வாறு வெளியே அனுப்பினார் என்பது குறித்து அவரிடம் விசாரணை நடத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட கடிதத்தில் சரத் பொன்சேகா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கடுமையாகச் சாடியிருந்தமையுடன் அவரை சர்வதேச சமூகத்தின் முன்னால் அம்பலப்படுத்தப் போகிறார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தின் வரைபடத்தையும் சரத் பொன்சேகா கையால் வரைந்து அனுப்பியிருந்தார்.

இதனைக் கடுமையாகச் சாடியிருந்த அரசு இந்தக் கடிதம் 'சனல் - 4'க்குச் செல்வதற்கு ஜே.வி.பியே காரணம் எனக் குற்றஞ்சாட்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியில் மீட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விரு மாவட்டங்களிலும் இதுவரை 50 ஆயிரம் சைக்கிள்கள், 20 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள், 500 ட்ராக்டர்கள், 20 ஆயிரம் தண்ணீர்ப் பம்புகள் மற்றும் ஒரு தொகை சிறியரக உழவு இயந்திரங்கள் (லாண்ட் மாஸ்டர்) என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்படவுள்ளதுடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் திருத்த வேலைகள் செய்து புதுப்பிக்கப் படவுள்ளன.

கிளிநொச்சியில் 16 ஏக்கர் நிலப்பரப்பு தெரிவுசெய்யப்பட்டு சுத்தப்படுத்தும் வேலைகள் செய்ய ப்படுகின்றன.

சேகரிக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் இங்கு கொண்டுவரப்பட்டு திருத்த வேலைகள் நடத்தப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

மோட்டார் சைக்கிள்கள், ட்ராக்டர்கள் போன்றவற்றின் உரிமையை உறுதி செய்யக்கூடிய ஆவ ணங்கள் அல்லது ஏதாவது ஒரு சான்றைக் காண்பித்து தங்களது வாகனங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதேவேளை, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக வாகன உரிமம் தொடர்பாகவும் உறுதி செய்யப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் விட்டுவந்த பஸ், லொறிகள் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள முடியுமா என ஆளுநரிடம் கேட்டபோது -

இப்போதைக்கு அது சாத்தியப்படமாட்டாது. அவை பழுதடைந்த நிலையில் இருப்பதால் கொண்டுவருவதில் சிக்கல்கள் உள்ளன. முதலில் இப்போது சேகரிக்கப்பட்ட 10 ஆயிரம் வாகனங்களையும் மக்களிடம் கையளிப்பதே எமது நோக்கம் என்றும் தெரிவித்தார்.

(சி)


பணியாளர்கள் தேவை

01. வரவேற்பாளர் (யுவதிகள் 20-45வயது)
02. பராமரிப்பாளர்
03. சுத்திகரிப்பாளர்
04. இரவு-பகல் காவலாளி.

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
ஹொட்டேல் புளூகேவன்,
இல 70, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 0212229958
0771538250.
-நிர்வாகம்-
(95723)


## அனோமாவிடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த விடயங்கள் தொடர்பாக வாக்கு மூலம் பெறப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. திருமதி அனோமா பொன்சேகாவிடம் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணை செய்ய விருப்பதாக நேற்றுச் செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## யாழ்.குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகிக்கப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்கள் ஏனைய கட்சி உறுப்பினர்களை பிரசாரங்களில் ஈடுபட முடியாத வகையில் அழுத்தங்களை பிரயோகிப்பதாக தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதென பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## அவசரகாலச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அந்த வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆகியன விசாரணைகளை மேற் கொண்டு வருகின் றன எனவும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவசரகாலச் சட்டம் அமுல்படுத் தப்பட்டதிலிருந்து சுமார் 700 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனவும், இதில் பெரும்பாலனவர்கள் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டனர் எனவும் பயங்கர வாதத் தடுப்புப் பிரிவு வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## மோதல் பகுதிக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இதுவரை 143 முறைப் பாடுகள் கிடைத்தன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மேற்கு நாடுகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் ஒடுக்குமுறைச் சூழலிருந்து தப்பி மேற்கு நாடுகளில் தற்காலிகமாகத் தஞ்சம் அடைந்துள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள், இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டால் சித்திரவதையையும், மரணத்தையும் எதிர்கொள்ளக்கூடும்.

தமிழர்களையும், இலங்கை அரசின் தற்போதைய கொள்கைகளை எதிர்க்கும் சிங்களவர்களையும் பாதுகாப்பதற்கான கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் யு.என்.எச்.சி.ஆர். முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையிலிருந்து அடைக்கலம் கோரியவர்களின் நிலைமையை மீள் பரிசீலனை செய்வதற்கு முன்னர்தமிழர்களும், பல சிங்களவர்களும் எதிர்கொள்ளும் ஆபத்துக் குறித்து யு.என்.எச்.சி.ஆர். மீண்டும் ஆராயவேண்டும்.

தமிழர்களுக்கும், அரசை எதிர்க்கும் சிங்களவர்களுக்கும் இலங்கை பாதுகாப்பான நாடு என்பதை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள், தகவல்கள் யு.என். எச்.சி.ஆர். அமைப்பிடம் இருந்தால் அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளோம் - என்பதாகும்.

(அ)

## தர்மைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகா 'சண்டே லீடரு'க்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

என்மீது திணிக்கப்பட்டுள்ள வெளிப்படையான அநீதியிலிருந்து என்னைக் காப்பாற்றுவதற்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கும் நல்லாட்சி குறித்து அக்கறை கொண்டுள்ள நாடுகள் மற்றும் மக்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

நான் சாதாரண குற்றவாளியை விட மோசமாக நடத்தப்படுகிறேன்.

ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் நிலைநிறுத்தத் துணிந்தமைக்காக நான் சிறையிலடைக்கப்பட்டுள்ளேன்.

இலங்கையின் நியாயபூர்வமான ஜனாதிபதி நானே என இன்னமும் நம்புகிறேன்.

தேர்தல் முறைமையில் காணப்படும் குளறுபடிகள், முறைகேடுகள் காரணமாக இலங்கை மக்களிடமிருந்து உயிர்த்துடிப்புள்ள ஜனநாயகத்தின் பலாபலன்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு மீண்டும் ஜனநாயகத்தைக் கொண்டுவருவதற்கான எனது முயற்சியை நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக நான் முன்னெடுக்க முயன்ற வேளை கைதுசெய்யப்பட்டேன்.

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி போன்றவை குறித்துப் பேசுபவர்களே நான் நாடாளுமன்றம் செல்வதைத் தடுப்பதற்காக என்னைக் கைதுசெய் துள்ளனர்- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-சி)


LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=




சுடர் ஒளி
THE SUDAR OLI
மார்ச் 21 - மார்ச் 27
★ யாழ்ப்பாணத் தேர்தல் களம்; தெரிவுகள் எப்படி அமையப்போகின்றன?
★ அரசு-கூட்டமைப்பு பேச்சுக்கு வாய்ப்பு உண்டா?
★ மன்மோகன் அரசின் பெரும்பான்மை சுருங்குகிறது?
★ வன்னித்தேர்தல் களம் எப்படியுள்ளது?
★ இரகசியக் கமராவை பொருத்தியவர் யார்?
★ நாடாளுமன்றத் தேர்தல்; தெரிவின் முன்னாலுள்ள சவால்கள்
★ தாய்ப்பாலும் இல்லை; மாப்பாலும் இல்லை - வன்னியில் நேர்ந்த அவலங்கள்
மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.
இப்போது கொழும்பு விலையிலேயே (ரூ-25) விற்பனையாகிறது



மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
எமது நிறுவனத்தில் புதிய வடிவமைப்புடன் உதயமாகின்றது
திருமண அழைப்பிதழ் காட்சியறை
திறப்பு விழா
அன்புடையீர்!
நிகழும் மங்கலகரமான விரோதி வருடம் பங்குனித்திங்கள் 8ம் நாள் (22.03.2010)
திங்கட்கிழமை ஸப்தமித்திதியும் ரோகிணி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும்
கூடிய காலை 9.27 மணி முதல் 11.27 மணிவரையுள்ள இடப லக்கின சுபவேளையில்
நல்லைக்கந்தனின் திருவருள் துணையோடு எமது நிறுவனத்தின்
புதிய காட்சியறையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு ...
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300க்கு மேற்பட்ட
பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...
MATHI COLOURS PRINTERS
Wedding Card Show Room
15/2B, முருகேசர் லேன், நல்லூர், (முத்திரைச்சந்தி) யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 2229285, 0777 222524
இணையத்தளம்: www.mathicolo...



தமிழ் தேசியக் கூட்டமைப்பு
பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010
யாழ்மாவட்டம்
X
இலங்கைத் தமிழரசுக் கட்சி
10 X
சிவஞானம்
சிறீதரன்
(முன்னாள் கௌரவ செயலாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்)

மக்கள் பணியாற்ற பாராளுமன்றம் செல்ல இருக்கும் எங்கள் செஞ்சிலுவையாளனை வெல்லவைப்போம்
செஞ்சிலுவைக் குடும்பத்தினர்
யாழ் / கிளிநொச்சி மாவட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.